கல்கி



KALKI 9-3-1969 40 காசு



பிரபல சமையல் கலைஞர் திருமதி பிரமீளா லால் தமது விசேஷப் பக்குவ முறை. ஒன்றை உங்களுக்கு உதவுகிறார்.

ரெக்ஸ் பேகிங் பவுடர்

உபயோகித்து சுவைமிக்க உலர்ந்த திராட்சை கேக் செய்து பார்த்திருக்கிறீர்களா?

எவருக்கும் திகட்டாத இலேசான, இனிமையான கேக்!



கேக்குகள், பிஸ்கோத்துகள், பக்கோடா, பூரி, குலாப்ஜாமூன் முதலியவற்றை அதிமென்மையாகத் தயாரிக்க உதவுகிறது ரெக்ஸ் பேகிங் பவுடர். சிறிதளவு உபயோகித்தாலே போதும். ரெக்ஸ் பேகிங் பவுடர் அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப் பட்டது. பேகிங் பவுடர்களில் மிகவும் சிறந்தது ரெக்ஸ்.



250 கி. பழுப்புச் சர்க்கரை
125 கி. வெண்ணெ
2 முட்டைகள்
125 கி. கடைந்த தயிர்
250 கி. மைதா மாவு
2 தேக்கரண்டி ரெக்ஸ் பேகிங் பவுடர்
ஒரு சி. கிராம்புப் பவுடர்
ஒரு சி. ஜாதிக்காய் பவுடர்
ஒரு சி. உப்பு
125 கி. உலர்ந்த திராட்சை

1. சர்க்கரையையும் வெண்ணெயையும் மென்மையாகும் வரை கலக்கவும். 2. ஒவ்வொன்றாக முட்டைகளைக்கடைந்து கொள்ளவும். 3. தயிருடன் சேர்த்துக் கலக்கவும். 4. மாவுடன் ரெக்ஸ் பேகிங் பவுடரைச் சேர்த்து சலித்துக்கொள்ளவும்; கலவையுடன் கிராம்பு, ஜாதிக்காய் பவுடர்களையும் உப்பையும் சேர்க்கவும். நன்குகடையவும் 5. உலர்ந்த திராட்சையைச் சேர்த்துக் கடையவும். 6. எண்ணெய் தடவிய சிறிய கேக் டின்களில் கரண்டியினால் எடுத்து ஊற்றி, சுமார் 20 நிமிஷங்களுக்கு 350° பா. வெப்ப நிலையில் சுடவும்.

தயவு செய்து எனக்கு ஒரு பக்குவ முறை சேடடை ஆங்கிலம்/இந்தி வங்காளம் /தமிழ்/தெலுங்கு/மலையாளம்/ குஜராத்தி/ மராத்தி கன்னடத்திலிலவசமாக அனுப்பி வைக்கவும்.

பெயர்.............................

முகவரி.............................

இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புக:
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு பம்பாய்-1. (பி.ஆர்)

K-1

உங்கள் சமையல் உன்னதமாக இருக்க உயர்ந்த சாமான்களையே உபயோகியுங்கள்!

இதுபோல் இன்னும் பல வகையான தின்பண்டங்களைத் தயார் செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின் வரும் இதழ்களைக் கவனித்துப் பாருங்கள்!

கார்ன் பிராடக்ட்ஸ் கோ (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ்,
வாட்பி ரோடு, பம்பாய் 1 பி.ஆர்.

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், மதராஸ் 1
மற்றும் அவர்களது கிளைகள்


Bensons/9637

கல்கி


பொருளடக்கம்

கீலக௵ மாசி 26உ	✲		1969 மார்ச் 9

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சென்னை பிரபல கண் டாக்டர் வி. ராமச்சந்திரன் அவர்களுடைய குமாரத்தி சௌ. **பத்மினிக்கும்** திரு எஸ். நாராயணய்யரின் புதல்வன் சிரஞ்சீவி டாக்டர் **ராஜகோபாலனுக்கும்** சென்ற பிப்ரவரி 19ந் தேதியன்று எஸ்.ஐ.எஸ். சபா கல்யாண மண்டபத்தில் திருமணம் மிக விமரிசையாக நடந்தது. பிரமுகர்கள் பலரும் மணமக்களை வாழ்த்தி ஆசி கூறினர். ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் திருமண கோலாகலத்துக்கு மெருகு ஊட்டியது. வாழ்க மணமக்கள் !


பொருளாதாரம்
கடும் வரி
சர்க்கார் தொழில்கள்
என்ன இதமான அணைப்பு!
மேற்கு வங்க மக்கள்
கூட்டணி அரசாங்கம்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 □ இதழ் 32

பம்பாய் அமளி: காரணமும் தீர்வும்

பூகம்பம் போன்ற இயற்கை உற்பாதங்கள் ஏற்பட்டால் அவற்றைப் பற்றிய ஆராய்ச்சியை அவசரமாகக் கருதாமல் தள்ளிப் போடலாம். பம்பாயில் சிவசேனை நடத்திய அட்டூழியங்களையும், இது குறித்து அந்த ராஜ்யத்தின் சர்க்காரும், மாஜிஸ்திரேட்டுகளும், போலீஸ் அதிகாரிகளும் வேண்டுமென்றே கண்டிப்பான நடவடிக்கை எடுக்காதிருந்தனர் என்கிற சந்தேகங்களையும் அப்படி விடமுடியாது. இவ்விஷயத்தில் ஆலோசனையையும் மேல் நடவடிக்கைகளையும் தள்ளிப் போடாமல், நன்கு ஆராய்ந்து தில்லி கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராஜ்ய சர்க்கார் மெத்தனமாக இருந்துவிட்டது என்ற அபிப்பிராயம் இருப்பதால், யூனியன் சர்க்காரே பம்பாயில் தனது மாஜிஸ்திரேட்டுகளையும் ராணுவ போலீசையும் நிறுவி, ஒழுங்குப்பாட்டை உண்டாக்க முடியுமா என்பதை ஆராய வேண்டும். வன்முறைக்கு நிச்சயமாக இடம் கிடையாது என்பதை வன்முறைக்காரர்களும், மக்களும், ராஜ்ய அரசாங்கமும் உடனடியாகப் புரிந்துகொள்ள இது உதவும். போலீஸார் தமது துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர்ச்சேதம் விளைவிக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்ததாகவும், இதனாலேயே சூறையாடலும், கொள்ளி வைப்பும் ஊக்கம் பெற்றன என்றும் கருதப்படுகிறது. குற்றவாளியாகக் கூடியவர்களை அவ்விதம் ஆகாமல் தடுத்து நிறுத்தக் கடுமையான போலீஸ் நடவடிக்கையே உதவும். எனவே இந்தக் கடுமை உண்மையில் கருணையே எனச் சர்க்கார் உணர வேண்டும்.

சர்தார் வல்லபாய் பட்டேல் உயிர் வாழ்ந்த வரையில் அவர் பம்பாயை மகாராஷ்டிர ராஜ்யத்துக்குத் தந்துவிடுவதை எதிர்த்து வந்தார். பம்பாய் மக்களில் பெரும்பாலோர் மராத்தி பேசுவது உண்மை. ஆனால் மனித நடப்புக்களிலும், தேசிய விவகாரங்களிலும் மொழி ஒன்றை மட்டும் பார்த்தால் போதாது. பம்பாய் நகரின் நலனில் பல விஷயங்கள் கலந்து விட்டதாகவும், எனவே மொழி என்கிற ஓர் அடிப்படையில் மட்டும் அந்த நகரத்தின் எதிர்காலத்தை நிச்சயிக்கக் கூடாதென்றும் சர்தார் கருதினார். அவர் காலமானபின் பம்பாய் தனது பாதுகாவலரை இழந்தது. மொழியே புதிய ராஜ்ய எல்லைகளை நிர்ணயிக்கும் அடிப்படையாயிற்று. பம்பாயைப் பற்றி ஜவாஹர்லால் நேருவும் வல்லபபாயின் கருத்துக்களையே கொண்டிருந்தார். ஆயினும் அவ்வளவு தீவிரமாக அல்ல. காச்மீரத்தைப் பற்றி நேருஜி எவ்வளவு தீவிரமாக எண்ணினாரோ அதில் அரைப்பங்குகூட பம்பாயைப் பற்றி எண்ணவில்லை எனலாம். கடைசியில், மகாராஷ்டிரத்துக்கு பம்பாய் கொடுக்கப்பட்டது. இதனால் விபரீதங்கள் விளைந்திருக்க வேண்டியதில்லை. ஆனால் ஜனநாயகத்தின் அரசியல் போக்குகள் சுயநலக் கும்பல்களை சிருஷ்டித்ததால் விபரீதங்கள் விளைந்தன. மேலிடத்தாரால் விபரீதங்களைக் களைய உறுதியான நடவடிக்கை எடுக்க இயலவில்லை. காரணம், இந்தியாவின் பழைய தேசிய வீரர்களை அடுத்து வந்துள்ள புதுப் பரம்பரையினர் முந்தையவர்களிடமிருந்து மிகவும் மாறுபட்டவர்கள். இன்றைய தலைமுறையினருக்கு வாக்காளர் மீதே கண்கள் நிலைக் குத்திட்டிருக்கின்றன. எம்.எல்.ஏ, எம்.பி, தில்லி மந்திரி, ராஜ்யமந்திரி—அனைவருமே தம் தொகுதியில் பெறக்கூடிய வாக்கைத்தான் சார்ந்து இருக்கிறார்கள். வாக்குப் பெறுகிற வாய்ப்பை ஒட்டியே ஒருவர் பின்பற்ற வேண்டிய வழி வகுக்கப்படுகிறது. அந்தோ பாரதமே! மனிதர்களின் தரம் இவ்வளவு விரைவிலா மாறவேண்டும்? மகத்தான லட்சியங்களுக்குப் பதில் தாழ்ந்த ஆசைகள் இவ்வளவு விரைவிலா இடம் பெற வேண்டும்? ஒரு தவறு அதோடு நின்றுவிடாமல் மேலும் மேலும் முடிவற்ற பயங்கரத் தவறுகளுக்கு இட்டுச் செல்வதே பாரதத்தின் பரிதாபம்!

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

ராஜாஜியின் கருத்துக்கள்

காலக்கிரமத்தில் யூனியன் பட்ஜெட் பார்லிமெண்டில் அலசிப் பரிசீலிக்கப்படும். உடனடியாகக் கவனத்துக்கு வருவது யாதெனில்:

பத்தாண்டுகளுக்கு முன் 248 கோடி ரூபாயாக இருந்த ராணுவச் செலவு இப்போது 986 கோடியாகியுள்ளது.

இன்று சர்க்கார் தீர்க்க வேண்டிய மொத்தக் கடன் ரூ. 18,000 கோடி. இதில் அந்நியக் கடன் ரூ. 6,570 கோடி. கடன் தீர்ப்பதற்காகச் சென்ற ஆண்டில் ஏற்பட்ட செலவு சுமார் 500 கோடி ரூபாய். இது இந்த ஆண்டு 570 கோடியாகியிருக்கிறது.

பற்றுக்குறை நிதி ரூ. 250 கோடி அளவில் நிற்கிறது. பத்தாண்டுகளுக்கு முன் இத்தொகை 100 கோடியாக இருந்தது.

ஃஃஃ

மேற்கு வங்கக் கூட்டணித் தலைவர்களின் அறிக்கைகள் நம்பிக்கையைத் தரவில்லை. பயங்கரமானதொரு கம்யூனிஸத் திட்டத்தையே அவர்களது போக்குகள் வெளிக்காட்டுகின்றன. கன்ட்ரோல்களை ஜீவாதாரமான துறைகளிலும் இறுக்கி மக்களையெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியின் அடிமைகளாக்குவார்கள் எனத் தோன்றுகிறது.

போலீஸ் அதிகாரிகளும் போலீஸ்காரர்களும் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களையே தங்கள் எஜமானர்களாக நினைப்பதற்குப் பயிற்றுவிக்கப்படலாம். புதிய வங்க சர்க்கார் தொழிலாளர்களுக்குத் தந்திருக்கும் பெரிய வாக்குறுதிகளைப் பார்த்தால், தொழில் துறையில் சமாதானம் நிலவும் என்கிற நம்பிக்கை ஏற்படவில்லை.

சூழ்நிலை நிச்சயம் உற்சாகமூட்டுவதாக இல்லை. பொறுத்திருந்து பார்க்கலாமே எனலாம். ஆனால் பொறுத்திருக்கும் இடைக்காலத்தில் மேலும் சிரமங்கள் ஏற்படலாம்.

இந்த நெருக்கடியான தருணத்திலும் மத்திய சர்க்கார் பலவீனமாகச் செயல்படுவதென்றே முடிவு செய்திருப்பதாகக் காண்கிறது. இப்போதுள்ள சிரமங்கள் சிறிது காலத்திலேயே கடக்கவொண்ணாதவையாகிவிடும் என்று எச்சரிக்கை பெறுவோம்.

ஃஃஃ

இந்த ஆண்டின் இறுதியில் தமது பதவிக் காலம் முடிந்த பின் மீண்டும் தாம் ஜனாதிபதி பதவித் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்று அயூப்கான் பிரகடனம் செய்திருப்பது சென்ற வாரத்தின் பெரிய செய்தி. அவரது அந்தரங்க சுத்தத்தை யாரும் சந்தேகிப்பதற்கில்லை. இவரைப் போலவே நல்லவர் என்று சொல்லக்கூடிய ஒருவரை இவருக்குப் பின் ஜனாதிபதியாகப் பாகிஸ்தான் பெறுமாயின் மகத்தான நலன் விளையும்; பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும்தான்.

பாகிஸ்தான், இந்தியா இவ்விரு நாடுகளில் ஒன்று பலவீனமுற்றால் மற்ற நாட்டுக்கு அநுகூலம் என்ற கருத்து நிலவுவதே நமது துர்ப்பாக்கிய உறவு நிலைக்குக் காரணம். இதைப் போல் ஆபத்தான பிரமை வேறு கிடையாது. பாகிஸ்தான் அரசியல் நிலை ஆட்டம் காணாமல் இருந்தால் அதுவே நமக்குப் பலம். இவ்வாறே நமது நாடு ஸ்திரமாக இருந்தால் அது பாகிஸ்தானுக்குப் பலம்.

ஃஃஃ

இஸ்ரேல் நாடு தனது பிரதமர் எஷ்காலைப் பறி கொடுத்திருப்பது துயரமான செய்தி. ஆனால் இத்துர்ச்சம்பவம் காரணமாக இஸ்ரேலின் அரசியல் நிலையில் எவ்விதக் கலக்கமும் ஏற்படாது என்று தோன்றுகிறது. வெளிப்புறத்தில் எதிரிகளால் சூழப்பட்டுள்ள இஸ்ரேல் உள்நாட்டில் பூசலை வளர்த்துக்கொள்ள இயலாது.

தமிழ்ப் பண்புக்குத் தலைகுனிவு



சிவபக்தசிரோமணியான திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளுக்கு இழைக்கப்பட்ட அவமரியாதையை எண்ணி நெஞ்சம் கலங்குகிறோம்.

தமது சொற்கள் யார் மனத்தையாவது புண்படுத்தியிருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகப் பொதுமேடையிலேயே அவர் கூறிய பின்பும் ரகளை செய்திருப்பது நாகரிக சமுதாயத்தினர் வருந்தப்பட வேண்டிய விஷயம்.

சட்டசபைகளிலும், பொதுக் கூட்டங்களிலும், நாலு மக்கள் எங்கு கூடிப் பேசினாலும் அங்கெல்லாம் இந்தத் துர்ச் சம்பவம் விவாதிக்கப்பட்டுவிட்டது. இதை இனியும் பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

இது போன்ற செயல்களை வன்மையாகத் தக்கபடி கண்டிக்கா விட்டால் கட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாகும் என்பதை ஆட்சியாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.



காந்திஜீ விரும்பிய கீதம்

வேத விருட்சத்தில் ஒரு கிளி



ரா. கணபதி

பஞ்ச பூதங்களையும் பார்த்துப் பார்த்து ரசித்த வியாச பகவானுக்கு ஓர் ஆசை உதித்தது. 'மனித காயமும் இந்தப் பஞ்ச பூதங்களால் ஆனதுதான். ஆனால் புவியின் பொறுமையும், நீரின் குளுமையும், நெருப்பின் தீவிரமும், வாயுவின் ஜீவசக்தியும், ஆகாயத்தின் நிர்மலமும் எந்த மனித காயத்திலும் காணப்படவில்லையே. இந்த அரிய லட்சணங்களை அள்ளிச் சொரிந்து கொண்டு, தமக்கு ஒரு புத்திரன் பிறக்கக் கூடாதா?' என்று எண்ணினார்.

ஸ்திரீ சங்கம் இல்லாமலே, தம் தூய்மையையே தாய்மையாகக் கொண்டு ஒரு பிள்ளை பிறக்க வேண்டும் என்று மேரு சிகரத்தில் மகாதேவனைக் குறித்துத் தவமிருந்தார்.

பொன்னார் மேனியில் சுவர்ணப் பொடி போல் மகரந்தங்களைச் சிந்தும் கொன்றை மாலைகளை மலைபோல அணிந்து பரமேசுவரன் அம்பாளோடு பிரசன்னமானான். ''பாதராயண! பூமியும் ஜலமும் அக்னியும் வாயுவும் ஆகாயமும் போன்ற புத்திரன் உனக்கு உற்பவிப்பான். ஆனால் பெண்ணின் சம்பந்தமின்றிப் பிள்ளையை விரும்பும் உன் இச்சையைப் பாதி அளவுக்கே பூர்த்தி செய்வேன். உலக நியதிக்கு மறு பாதியை விட்டுக் கொடுத்தாக வேண்டும். உன் மகன் ஸ்திரீ கர்ப்பத்தில் தோன்ற மாட்டான்; ஆயினும் உலக வழக்கத்துக்கு மதிப்புத் தந்து காமத்தின் மீதே உதயமாவான். பிரம்ம பாவனையுடன், பிரம்மத்தில் நிலைத்து, பிரம்ம நிஷ்டன் என்றே பெயர் பெற்று, தேஜஸால் திரிலோகங்களையும் வியாபிப்பான்'' என்று வரம் நல்கி மறைந்தான் ஈசன்.

கிருதாசி என்ற அப்ஸரஸ் மேருவனத்தின் மீது பறந்து வந்தான். அதன் பச்சைப் பசும் சோலைகளை ரசித்தான். ரசிப்பின் எல்லையில்

ரசிகனும் ரசிக்கப்படும் பொருளும் ஒன்றாகி லயித்து விடுவரல்லவா ? பசும் சோலையாகவே ஆகிவிட அவாக் கொண்டாள் கிருதாசி. ஆனால் கண்ணால் தன்னையே பார்த்துக் கொள்ள முடியாதே ! சோலையே ஆகிவிட்டால் அதை ரசிப்பது எப்படி ? எனவே, சோலையின் பசுமையே இறுகி உருக் கொண்டாற்போல், பச்சைக் கிளியானாள் கிருதாசி. வனத்தில் தென்னங் கீற்றுக்களைக் கோதியும், தீங்கனிகளைக் கொத்தியும் மகிழ்ந்தாள்.

யக்ஞத்துக்காக அரணியில் அக்னி கடைந்து கொண்டிருந்த வேதவியாச முனிவரைக் கிளியின் அழகு கவர்ந்தது. 'பிரகிருதி சுந்தரியின் செல்வக் குழந்தை கிளியே அல்லவா? தேவியின் கரகமலத்தில் அமர்ந்து, அவள் அளிக்கும் அபயத் தேனைச் சுவைப்பதல்லவா அது ? காமத்தின் மீதுதான் எனக்குப் புத்திரன் உண்டாக வேண்டுமாயின், இந்தப் புனிதமான கிள்ளையை ஆதாரமாகக் கொண்டே பிள்ளை பிறக்கட்டும்' என்றெண்ணினார்.

கிளியின்பால் அவருக்குப் பெருகிய அன்பையும் சேர்த்து அரணியில் கடைந்தார்.

அதில் அக்னி தோன்றியது.

அதோடு புகையே இல்லாத மற்றோர் அக்னியாக ஒரு புத்திரனும் தோன்றினான்.

கிளியை முன்னிட்டுப் பிறந்த அந்தச் சின்னஞ்சிறு கிளியை 'சுகா' என்றே அன்போடு அழைத்தார் முனிவர்.

அந்தப் பரம பவித்திரமான புத்திரனை அபிஷேகிக்க கங்காமாதாவே வந்தாள்.

நீராடிய பாலன் உடுத்துவதற்காக ஆகாயத்திலிருந்து மான் தோல் விழுந்தது. பிரம்மசாரிக்குரிய தண்டமும் விழுந்தது.

முறைப்படி அந்தக் குமாரனுக்குப் பிரம்மோபதேசம் செய்து பிரம்மசாரியாக்குவதற்காகத் தேவியோடுகூட சாட்சாத் பரமேசுவரனே எழுந்தருளினான்.

சுகருக்குக் கிடைத்த பாக்கியம் விக்நேசனுக்கும், குமரப் பெருமானுக்குங்கூடக் கிடைத்ததாகத் தெரியவில்லை. சர்வேசுவரனும் பவானியும் குழந்தை சுகனோடு சேர்த்துத் தங்களைப் பட்டு வஸ்திரத்தால் மூடிக் கொள்ள, காயத்ரி மந்திர ரூபிணியான அம்பாளின் முன்பு, அந்த மந்திரப் பொருளான மகாதேவனே, குழந்தைக்குக் காயத்ரியை உபதேசித்தான்.

அந்தக் கணமே, சூரிய மண்டலத்தினுள் உலகங்களை யெல்லாம் ரட்சிக்கும் ஒளியை எந்தச் சக்தி தூண்டி விடுகிறதோ, அந்த காயத்ரி சக்தி சுகப் பிரம்மத்தின் ஆன்மாவையும் தீபப் பிழம்பாகத் தூண்டிவிட்டது!

சுகப் 'பிரம்மம்' தான் ! ஆம், அடைமொழியற்ற பரம்பொருளே பிரம்மம். அந்த 'பிரம்ம' பதம் சுகருக்கு அடைமொழியாயிற்று !

உபதேச இலட்சியமாகவே ஆகிவிட்ட சுகர் விநயமாகத் தந்தையைப் பணிந்தார். "தந்தையே, அடியேனுக்கு உபதேசம் அளித்தருள வேண்டும்" என்றார்.

பரம ஞானிக்கும் சில சமயங்களில் தனது ஞானத்தைக் குறித்துக் கர்வம் உண்டாகி விடக்கூடும். தன் அருமைப் பிள்ளைக்கு அந்தக் கதி ஏற்படக் கூடாது என்பதே வியாசரின் கருத்தாக இருந்தது. எனவே அவர், "செளம்யா ! ஜனக மகாராஜனைச் சென்றடைவாய். அவனே உனக்கு உபதேசிக்கத்தக்கவன். சர்வசக்தனான நீ இங்கிருந்து பறந்தும் மிதிலை செல்லக் கூடும். ஆனால் நீ மனிதர் செல்கின்ற வழியிலேயே கர்வமில்லாமல் நடப்பாயாக" என்றார்.

'மனிதர் செல்கிற வழியில் நடப்பாய்' என்பதை இரு பொருளில் கூறினார்!

அவரது உத்தரவு இந்தப் புவி செய்த பாக்கியம். சுகப் பிரம்மத்தின் பாவன பாதங்கள் இந்த மண்ணில் மேவின. காடும் மலையும் ஆறும் நாடும் கடந்து மிதிலாபுரியை அடைந்தார் சுகர்.

ஜனகனின் ராஜகிருஹத்தில் பக்குவமற்ற ஒரு துவாரபாலன் அவரைக் கடுஞ் சொல்லால் தடுத்து நிறுத்தினான்.

அவர் நின்றார் நிச்சலமாக.

பக்குவம் பெற்ற மற்றொரு துவாரபாலனின் கண்கள் சுகரைக் கண்டு பனித்தன. அவரை வணங்கினான். எந்தவித உணர்ச்சி பேதமுமின்றி நின்றார் சுகர்.

அந்த வாயிற்காப்போன் ராஜசபைக்குள் சென்று மன்னனிடம் சொன்னான்: "வீதியில் கடும் வெயில் தெரியாமல் ஒரு யுவர் நடந்து வந்தார். இந்த அரச மாடத்தின் கொடுங் கையின்கீழ் வந்ததும் அதன் குளுமையும் அவருக்குத் தெரியவில்லை. காவலாளி ஒருவன் அவரைக் கடிந்து பேசினான். அதில் அவர் வாடவில்லை. நானோ வணங்கி விழுந்தேன். அதற்காக அவர் மலரவும் இல்லை. அவரை உள்ளே அழைத்து வரவா ?"

விதேக தேசத்தை ஆளுவதாலும், தேக உணர்வு இல்லாததாலும் 'விதேகி' என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஜனக மன்னனின் மனம் பொங்கியது.

மகாத்மாவை அன்போடு வரவேற்றான்.

"ராஜேந்திர, போதித்தருள்வீர்" என்றார் போதஸ்வரூபர்.

ஜனகன் தனக்குள் சிரித்துக் கொண்டான். 'போதனையும் சாதனையும் தன்னாலேயே பெற்றவர். இவருக்குப் பாடம் புகட்டி, போதனை தந்து, அதன்பின் பரீட்சிக்க வேண்டியதில்லை. இப்போதே பரீட்சை நடத்தி, அதன் மூலம் உலகுக்கெல்லாம் பாடம் புகட்டலாம்' என்று எண்ணினான்.

பரீட்சை என்று சொல்லாமலே கடுமையான பரீட்சை நடத்தினான்.

அதென்ன பரீட்சை ? தருணிகளும், மெல்லிய அருண வஸ்திரம் உடுத்தவர்களும், ஆலாபத்திலும் சல்லாபத்திலும் தேர்ந்தவர்களுமான நாட்டிய மாதர்களை சுகரிடம் அனுப்பி உபசரணைகள் செய்வித்தான் ஜனகன். அவர்கள் அவரது பளிங்குப் பாதத்தில் நீர் வார்த்து, சந்தனமிட்டுப் பூஜித்தனர். மிகுந்த ருசியான போஜனங்களைப் பரிமாறினர். சுவை மிகுந்த அன்னங்களைப் புசித்தது போலவே, அதனிடை அகப்பட்ட ஊசி மிளகாயையும் உண்டார் சுகர். அவரை உத்தியான வனத்துக்கு அழைத்துச் சென்றனர். பசும்புல் தரையில் நடந்த போதும், காலில் சப்பாத்திக் கள்ளி தைத்த போதும் ஒரே போன்ற கலக்கமற்ற, களங்கமற்ற மனத்துடன் இருந்தார் பிரம்மநிஷ்டர். உத்தமமான சயனத்தை அவருக்காகச் சித்தம் செய்துவிட்டு அந்த அழகிகள் சுற்றி நின்ற

ஏர். சுகர் பாத சுத்தி செய்து கொண்டு, காயத்ரி மந்திரத்தைத் தியானித்தவாறு நள்ளிரவு வரை நிஷ்டையிலிருந்து, பின்பு நித்திரை எனும் நிஷ்டையில் ஆழ்ந்தார்—நிச்சலமான, நிர்மலமான மனத்துடன்.

நடன மாதர் அவரது பொன்னடி பணிந்து, தூய உணர்வுடன் நீங்கினர்.

மறு நாட் காலை. பரீட்சையில் அற்புதமாகத் தேறிய சுகரைக் கண்டு பூரித்தான் ஜனக மகாராஜன்.

''வேந்தனே! எனக்கு உபதேசம் தருவாய்'' என்று வேண்டினார் சுகர்.

''வேதமும், வேதாந்தமும் தாமாகவே உம்மை ஆசிரயித்துள்ளன; நான் என்ன போதிப்பேன்?'' என்றான் ராஜரிஷி.

''ராஜன், ஒரு சந்தேகம்! பிரம்மசரியம், இல்லறம் இவற்றுக்குப்பின்பே துறவறம் என சாஸ்திரம் விதிக்கிறது. எனக்கு இல்லறத்தில் இம்மியும் மனமில்லை. பிரம்மசரியத்திலிருந்தே நான் துறவுக்குத் தாண்டலாமா?'' என்று குழந்தையாகக் கேட்டார் பிரம்மநிஷ்டர்.

'' உலகமும், கர்மங்களும் நசியாதிருக்கவே முன்னோர்களால் ஆசிரமங்கள் கிரமமாக அமைக்கப்பட்டன. ஆனால் முதல் ஆசிரமத்திலேயே தாங்கள் முக்தனாகிவிட்டீர்கள். தங்களுக்கு மற்ற ஆசிரமங்கள் எதற்காக? தங்களுக்கு சாஸ்திரமும் அடிபணியும்; சாஸ்திரத்துக்குத் தாங்கள் பணிய வேண்டியதில்லை'' என்றான் ஜனகன்.

சுகப்பிரம்மம் மேருவிலுள்ள வியாஸரின் குடிலுக்குப் புறப்பட்டார்.

சுமந்து, ஜைமினி, வைசம்பாயனர், பைலர் ஆகிய தபஸ்விகளுக்கு வேதம் போதித்துக் கொண்டிருந்தார் வியாசர், வைகறை வேளையில்.

உதயசூரிய ஒளியும், வேத ஒலியும், தென்றலும் பிரித்துச் சொல்ல முடியாமல் கலந்து பரவுகிற அப்பிரதேசத்தில் சுகர் பரம சுகியாக வந்து நின்றார்.

நாணிலிருந்து விடுபட்ட பாணம் போல் ஒரே லட்சியத்துடன், இரண்டாவது சூரியனாக வந்து நின்ற பாலனைப் பார்த்து மனம் களித்தார் வியாசர்.

மற்ற சீடர்கள் விடைபெற்றனர். தந்தையும் மகனும் தனித்து நின்றனர்.

''தந்தையே, வேத கோஷமில்லாத இந்த மலை திலகமற்ற சுமங்கலியின் நெற்றி போலாகி விட்டது. எனக்கு வேதம் உபதேசியுங்கள்'' என்றார் புத்திரன்.

'' உனக்குத் தெரியாத வேதமா? உனக்கு என்ன உபதேசிப்பேன், மகனே? எல்லா உபதேசத்துக்கும் சாரம் எதுவோ, அதை உன் நிமித்தமாக இதோ உலகுக்கெல்லாம் தருகிறேன்: கல்விக்குச் சமமான கண் இல்லை; சத்தியத்துக்கு நிகரான தவமில்லை; ஆசைக்குச் சமமான துக்கமில்லை; தியாகத்துக்கு நிகரான சுகம் இல்லை. அஹிம்சையே மேலான தர்மம்; பொறுமையே மேலான பலம்; தன்னைத் தானே அறிந்து கொள்வது தான் மேலான ஞானம். பயனை விரும்பிச் செயல் புரிவதாலேயே அதர்மத்தில் செல்கிறோம். பயனில் கருத்தைவிட்டால் அதர்மத்தை விடுவோம். தர்மம் என்பது பட்டுப் புழு தன்னைச் சுற்றித் தானே கட்டிக் கொள்ளும் கூடு. புழுவுக்கு இறக்கை முளைத்ததும் அது கூட்டைப் பிளந்து கொண்டு வெளியேறத்தான் வேண்டும். எனவே, என் அருமை சுகா, தர்மம் அதர்மம் இரண்டையும் தள்ளு. சத்தியம் அசத்தியம் இரண்டையும் தள்ளு. இவற்றை எதனால் தள்ளினாயோ அதையும் தள்ளு.''

வியாசர் இதை உபதேசிக்கும் போது, தன் மகன் உடனுக்குடன் அப்படிச் செய்துவிடுவான் என எதிர்பார்க்கவில்லை.

ஆனால் அவர் எதிர்பாராதது உடனுக்குடன் நடந்து விட்டது. அதர்மத்தோடு தர்மத்தையும் தள்ளியவராக, அசத்தியத்தோடு சத்தியத்தையும் தள்ளியவராக, கூட்டைப் பிளந்து கொண்டு இனியாகப் பறந்து விட்டது சுகம்!

ஆகாயம் அளித்த மான் தோலையும், தண்டத்தையும்கூட உதறிவிட்டு, திறந்த உள்ளத்தோடு, திறந்த மேனியோடு பறந்தது!

பரமேசுவரன் உபதேசித்த காயத்ரி உறைகின்ற சூரியமண்டலத்தை நோக்கி சுகம் பறந்தது — பரம சுகமாக, பரமஹம்ஸமாக!

பஞ்சபூதங்களின் பெருமையும் பெற்ற புத்திரன் வேண்டும் என்று வியாசர் பிரார்த்தித்தார் அல்லவா? அதற்கேற்ப சுகப்பிரம்மம் தமது பொறி புலன்களைப் பஞ்சபூதங்களிலும் கலந்து, தமது ரூபத்தை விசுவரூபமாக்கி விட்டார்; ஆன்மாவைப் பராசக்தியின் சைதன்ய விலாசமாகிய சூரியமத்தியில் உறைவிக்கக் கிளம்பி விட்டார்.

புத்திரனைப் பின்தொடர்ந்தார் பாதராயணர் — பொறி புலன்கள் யாவும்

மகாத்மாவின் மணிமொழி

இடுக்கண் ஏற்படும்போது அதற்கு முகம் கொடுக்காமல் அதிலிருந்து தப்பி ஓட முயல்வது மனிதனிடமும் ஆண்டவனிடமும் நம்பிக்கையை மறுப்பதாகும்; தன்னிடமே நம்பிக்கையை மறுத்துக் கொள்வதுமாகும். இவ்விதம் நம்பிக்கையில் திவாலாகிவிட்டு வாழ்வதைவிட நீரில் மூழ்கிப் பிராணனை விடுவது சாலச் சிறந்ததாகும்.



கலங்க. ''கண்ணே! ஒரு முறை உன் திருமுடியிலிருந்து திருவடி வரை பார்க்கும் நாழிகை நின்று விட்டு, பிறகு செல்வாய்'' என்றார்.

சுகருக்கு இப்போது செவி இருந்தால் அல்லவோ குரல் கேட்கும்? மனம் என்று ஒன்று இருந்தால் அல்லவோ அதில் மகரிஷியின் துயரம் பதியும்?

எதிலும் ஒட்டாத ஆன்மா ஆதித்தனை நோக்கி உயர உயரச் சென்றது.

வழி நெடுக தேவ கந்தருவரும், தேவ ரிஷிகளும், பிரம்ம ரிஷிகளும் சுகரைப் பூஜித்தனர். ஊர்வசி முதலிய தேவமாதரும் பஞ்ச சூடை முதலிய அப்ஸரஸுகளும் தேவ கங்கையில் தீர்த்தமாடிக் கொண்டிருக்கையில், அந்த வைராக்கிய சீலர் வான மண்டலத்தில் ஜோதி மயமாக மேலே மேலே செல்வது கண்டு வியந்து கானம் செய்தனர்.

''அனைத்தையும் விட்ட பின்பும், மகனை மட்டும் விடமுடியாது பரிதவிக்கும் வியாசரை நீத்துச் செல்லும் விராகியைப் பாருங்கள்'' என்று பாடி, நீராடினர். அவர்கள் கானமே கங்கையாறாகப் போயிருந்தது!

சுயநலம் கலக்காத அவர்களது கருணையில் பிறந்த கானத்தால் க்ஷணகாலம் சுகப் பிரம்மமும் தொடப்பட்டார்.

''பரந்த விசுவமே! என்னுள் உன்னை முற்றிலும் காண்கிறேன். அதே போல், உன் ஒவ்வோர் அணுவுள்ளும் என்னைக் காண்கிறேன். என் பிதா பரிதவித்து வருகிறார். அவருக்கு ஆறுதல் சொல்'' என்று கூறி ஆதித்த மண்டலத்துள் புகுந்து, அதன் ஒளிக்கு ஒளி தரும் சித்சக்தியில் கலந்துவிட்டார் சுகப்பிரம்மம்.

''புத்திரா, சுகா, வத்ஸா, ஸௌம்யா'' என்று வியாஸாசாரியர் கதறிக் கொண்டே பின்னால் வந்தார்.

அப்போது காடும், மலையும், நதியும், விலங்கும், பட்சியும், மேகமும், காற்றும், விண்ணும், மண்ணும் அனைத்தும் — ''பிதாவே! இங்குதான் இருக்கிறேன்! இங்குதான் இருக்கிறேன்'' என்று மறுமொழி தந்தன.

தன் மகன் எல்லாவற்றையும் அறவே விட்டதனால் எல்லாமாகவும் ஆகிவிட்டான் என்று உணர்ந்தார் வியாசர்.

அவனது கம்பீரக் குரலை அவனி எங்கும் கேட்டு நிறைவு பெற்றார்.

ஆனால் அவனது திவ்விய ரூபம்?

அதை எண்ணுகையில் முனிவரின் ஒட்டிய உதரத்தில் பிரிவுத் தாபம் குமுறியது.

பிள்ளை வரம் தந்த சிவபிரான் எதிரே தோன்றினான்.

''கிருஷ்ண த்வைபாயன! சுகனின் ரூபத்தையா பார்க்க வேண்டும்? உன்னையே உரித்து வைத்தவன்தானே அவன்? உன் நிழலையே பார்த்துக் கொள். அவனது உருவைக் காண்பாய்'' என்றான்.

ஜோதி ஸ்வரூபனைத் தம் நிழலில் கண்டு கொண்டார் கரு நிறத்தரான கிருஷ்ண த்வைபாயன முனிவர்.

அவர் மனத்தில் ஒரு தெளிவு பிறந்தது.

தெளிந்த தேவ கங்கையில் நீராட வந்தார்.

அவரைக் கண்ட மாத்திரத்தில் நீராடிக் கொண்டிருந்த பஞ்ச சூடையும், ஊர்வசியும் மற்ற தேவமாதரும் அவசர அவசரமாக ஆடைகளைச் சுற்றிக் கொண்டனர். சிலர் நீருக்குள் கழுத்தளவு முழுகினர். சிலர் புதர்களில் புதைந்தனர்.

வியாசரின் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் கரகரவென வழிந்தது.

''கிழவனான என்னைக் கண்டு நாணும் இப்பெண்கள் நல்ல வாலிபனான சுகன் இவ்வழி சென்ற போது எள்ளளவும் லஜ்ஜை கொள்ளவில்லை. ஆஹா! அவனது தூய்மையே தூய்மை! சுகனுக்குத் தேக உணர்வு அற்றுப் போனது அதிசயமில்லை: இந்த ஆடல் மகளிருக்கும் அல்லவா அவனது சந்நிதியில் உடல் உணர்வு அற்றுப் போயிற்று? இப்படிப்பட்ட ஒரு பரிசுத்தத்தைத் தரிசித்த என்னிலும் பாக்கியசாலி யார்?'' என்று புளகாங்கிதமடைந்தார் முனிவர்.

உடலின் தூய்மை, வாசனைப் பொடி தேய்த்து முழுகுவதாலும், தூய வெள்ளாடை அணிவதாலும், சுகந்த விபூதி பூசுவதாலும் ஏற்படாது. உடல் உணர்வு அற்று விழுவதுதான் உடலுக்குத் தூய்மை.

உடல் தூய்மைக்கு உருவான சுகரது ரூப லாவண்யத்தைப் பாகவதம் வாய் கொள்ளாமல் வர்ணிக்கிறது:

''இன்ன ஜாதி, இன்ன ஆசிரமம் என்ற அடையாளம் இல்லாத மேனியர். ஆத்மானந்தம் பொங்கி வழிபவர். என்றும் ஈரெட்டு வயதினர். கேசச் சுருள்கள் புரளும் வதனத்தவர். அழகிய பாதங்களும், கைகளும், தொடைகளும், புஜங்களும், தோள்களும், கன்னங்களும் உடையவர். அழகிய பரந்த கண்களும், எடுப்பான மூக்கும், சமமான காதுகளும், லட்சணமான புருவங்களும் உடைய திருமுக மண்டலத்தவர். சங்கம் போன்ற கழுத்தினர். கழுத்தின் கீழ் எலும்புகள் சதையில் மறைந்த தளதளப்பான தேகத்தவர். விரிந்து உயர்ந்த மார்பினர். சுழன்ற நாபியும், மடிப்புக்கள் கொண்ட உதரமும் கொண்டவர். சியாமள வர்ணத்தவர். தேகத்தின் மங்களத்தாலும் பிரகாசமான சிரிப்பாலும் பெண்களின் மனத்தைத் தூய்மை செய்பவர். திசைகளையே ஆடையாக உடுத்தவர்.''


நரஸிமேதாவின் 'வைஷ்ணவ ஜனதோ' பாடலில் உடல் தூய்மைக்கு சுகரையே உருவமாகச் சித்திரிக்கிறார் கனுதேசாய்.

சுகரைப் போன்ற வைஷ்ணவர் யாருண்டு? விஷ்ணுவின் பூரணாவதாரமான கண்ணனின் கதையைக் கேட்பதற்காகச் சூர்ய மண்டலத்திலிருந்து புவிக்கு மீண்டவர் அவர்.

ஆயினும் கிருஷ்ண பிரபாவமும்கூட அந்த விராகியைப் பால் கறக்கும் நேரத்துக்கு மேல் ஓரிடத்தில் இருத்தி வைக்காது.

அப்படிப்பட்டவரே பரீக்ஷித்து செய்த பாக்கியவசமாக — நாம் அனைவரும் செய்த பாக்கியவசமாக — ஏழு நாட்கள் ஒரே இடத்திலிருந்து ஸ்ரீமத் பாகவதத்தை உபதேசித்தார்.

வேத விருட்சத்தில் பழுத்த அமுதரஸக் கனி, கண்ணன் கதை. அந்தப் பழத்தின் தனிப் பெருமை அதை இந்தச் சுகம் கொத்தியதுதான். இது எதையுமே ருசிக்காது. ருசிப்பவர்களைச் சாட்சி மாத்திரமாகப் பார்த்துக் கொண்டு மட்டுமே இருக்கும். இதுவே கண்ணனின் கதையை ருசித்ததெனில் இதனிலும் பெரிய வைஷ்ணவர் உண்டோ?



குடும்பத் தலைவர் அண்ணா

ஸி. என். ஏ. பரிமளம்

பிப்ரவரி 3.

நினைத்துப் பார்க்கக் கூட முடியாத ஒன்று நடந்துவிட்ட நாள். தேம்பியழுது கொண்டிருந்த எங்கள் குடும்பத்துக்கு இந்த நாடே ஆறுதல் சொல்லிற்று. எங்கள் குடும்பத் தலைவரை நாங்கள் இழந்தோம் என்று சொல்வதைவிட — இந்த நாடு ஒரு நல்ல தலைவரை இழந்துவிட்டது — அந்தத் தலைவர் இந்த நாட்டையே தம் குடும்பமாக நினைத்து வாழ்ந்தார்; அந்தக் குடும்பத்தில் நாங்களும் அங்கத்தினர்கள் என்ற நினைப்பில், நாங்களும் இந்த நாட்டினருடன் சேர்ந்து எங்கள் குடும்பத் தலைவரை இழந்தோம் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

அவர் தம் வாழ்நாளில் எங்கள் குடும்பத்தைப் பற்றி நினைத்ததே மிகச் சில நாட்களாகத்தான் இருக்கும். நான் சிறுவனாக இருந்தபோது அவரை நான் காண்பது—சந்திப்பது என்பது மாதத்தில் நான்கு ஐந்து நாட்களுக்கு மேல் இருக்காது. அந்தச் சந்திப்பும் அநேகமாக இரவு பன்னிரண்டு மணிக்கு மேல்தான் இருக்கும். அவர் சுற்றுப் பயணம் முடிந்து காஞ்சி வந்து சேர இரவு இரண்டு மணிக்கு மேல் ஆகிவிடும். அவரைப் பார்ப்பதற்காகச் சில நாட்களில் நான் விழித்துக்கொண்டுகூட இருந்திருக்கிறேன். அந்த நேரத்தில் அவரைச் சந்திக்கா விட்டால் பிறகு சந்திப்பது சற்றுக் கடினம்தான். நான் காலையில் பள்ளிக்குச் செல்லும் நேரத்தில் அவர் அசதியாகத் தூங்கிக் கொண்டிருப்பார். நான் மாலை திரும்பும்போது அவர் மறுபடியும் சுற்றுப்பயணம் கிளம்பியிருப்பார். இந்த மாதிரி நான் பழகியதாலோ என்னவோ இப்போதுகூட அவர் என்னை விட்டுப் பிரிந்ததாக என்னால் நினைக்க முடியவில்லை. ஏதோ ஒரு சுற்றுப் பயணம் சென்றிருப்பதைப் போலத்தான் தோன்றுகிறது. அவர் சென்றது ஒரு நீண்ட நெடிய பயணம் என்று தெரிந்தும் கூட!

ஒரு முறை அவர் வீடு திரும்பியதும் என்னிடம் ஒரு வேடிக்கையான கேள்வி கேட்டார்.

''பரி! நீ இப்போது எந்த வகுப்பில் படிக்கிறாய்?'' என்றார். நான் அதிசயத்தோடு, ''ஏனப்பா அப்படிக் கேட்கிறீர்கள்?'' என்றேன்.

''இந்தச் சுற்றுப் பயணத்தின்போது யாரோ என்னிடம் கேட்டார்கள், நீ எந்த வகுப்பில் படிக்கிறாய் என்று. நானும் அவன் ஏழாவதோ எட்டாவதோ படிக்கிறான் என்று சொன்னேன்.''


நான் அப்போது எஸ். எஸ். எல். ஸி. படித்துக் கொண்டிருந்தேன். நான் அதைச் சொன்னதும் அவர் வியப்புடன், ''அப்படியா?'' என்றார். அப்போது எனக்கு அந்த நிகழ்ச்சியின் விளக்கம் புரியவில்லை. இப்போதுதான் விளங்குகிறது. அதுவும் அவருடைய இறுதிப் பயணத்தின்போது கதறி அழுத பல இலட்சம் மக்களைப் பார்த்த பிறகுதான் நன்றாக விளங்குகிறது. அந்தத் தலைவனின் குடும்பம் மிகப் பெரியது — பல இலட்சம் மக்களைக் கொண்டது. அப்படிப்பட்ட ஒரு பெரிய குடும்பத்தில் ஒவ்வொருவரையும் பற்றித் தெரிந்து வைத்திருப்பது சற்றுக் கடினம்தானே!

மற்றொரு சம்பவம். அப்போது நான் பி. யூ. ஸி. முடித்துவிட்டு வைத்தியராவதற்குப் படிக்க வேண்டும் என்ற ஆவலில் இருந்தேன். நான் வாங்கிய தேர்வு எண்கள் சற்றுக் குறைவு. எனவே மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைப்பது கடினம் என்று எனக்குத் தெரியும். அதனால் அப்போது இருந்த இந்திய மருத்துவக் கல்லூரியிலும் (ஜி.ஸி.ஐ.எம்.) விண்ணப்பித்திருந்தேன். அப்போது அவர், என்னை அழைத்துச் சொன்னார்: ''பரி! உனக்காக நான் எவரிடமும் சொல்ல மாட்டேன். இடம் கிடைக்கவில்லையென்றால் அதற்காகக் கவலைப்படாதே!''

ஆனால் அதே வருடம் வேறொருவருக்காக அப்பா சொல்லிச் சென்னை மருத்துவக் கல்



இளங்கோவும் அண்ணாவும்



பேரன் மலர்வண்ணனும், தாத்தாவும்

லூரியில் அந்தபருக்கு இடம் கிடைத்தது எனக்குத் தெரியும். நான் அதற்காகக் கவலைப்படவில்லை. இன்னொருவருக்குச் சொல்லி இடம் வாங்கித் தருவது என்பது வேறு; ஆனால் தம் பிள்ளைக்குத் தாம் சொல்லி இடம் கிடைப்பது சரியல்ல என்று கருதியதே அந்தப் பெருஉள்ளம். அதை நினைத்து நினைத்து இன்றும் நான் மகிழ்ந்து கொண்டிருக்கிறேன்.

1965ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுச் சிறை சென்றிருந்த நேரத்தில் தோள் வலியால் அவதிப்பட்டு அரசாங்க மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்த நேரத்தில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த சிலர் 'திருவாளர் தோள்வலி' என்று அப்பாவைக் கேலி பேசினார்கள். இதனால் வேதனையடைந்த நான், இதைப் பற்றி அவரிடம் ஒரு நாள் சொன்னேன். அதற்கு அவர் சொன்ன பதில்: ''பரி, இதையெல்லாம் நினைத்து வேதனைப்பட்டால் அது உன் தவறு. என்னை நம்பி என்னைப்பின்பற்றுகிறார்களே பல இலட்சம் மக்கள்—அவர்கள் என்னை வாழ்த்துகிறார்களே அதை நினைத்து நீ பெருமைப்பட்டுக் கொள்.'' இவ்விதம் ஆறுதல் கூறிய அந்தப் பெரிய மனத்தை நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

முதலமைச்சர் ஆன பிறகு எங்களிடம் பேசுவதற்கே அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. அவருடைய பொறுமையை, பெருங்குணத்தைப் பயன்படுத்திக் கொண்டு சிலர், நாங்கள் தனியாக அவரிடம் பேசிக்கொண்டிருக்கும்போதும் வந்து தொல்லை கொடுத்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர் அடைந்த மன வேதனையை நான் அவர் முகத்தில் பார்த்திருக்கிறேன். ஆனால் வந்தவர்களை அவர் கடிந்து கொண்டதில்லை. ''உங்களுடன் நான் தனியாகச் சற்று நேரம் பேசுவதற்குக் கூட எனக்கு நேரம் கிடைக்கவில்லையே?'' என்று பல முறை அவர் எங்களிடம் சொல்லி வேதனை அடைந்திருக்கிறார்.

கடைசியாக அவர் மருத்துவ மனையில் சேர்ந்திருந்த நேரம் அது. சனிக்கிழமை அன்று அவருக்கு அறுவைச் சிகிச்சை. வெள்ளிக் கிழமை இரவு நான், என் அண்ணை, என் மனைவி, என் தம்பிகள் யாவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். என் மகன் மலர் வண்ணனை வீட்டில் தூங்க வைத்துவிட்டு நாங்கள் மருத்துவ மனைக்குச் சென்றிருந்தோம். பேச்சின் நடுவில் என் தந்தை ''குழந்தை எங்கேம்மா?'' என்றார். அதற்கு என் மனைவி ''குழந்தை வீட்டில் தூங்குகிறான்; அவனுக்குத் துணையாக வீட்டில் வேலை செய்வோர் இருக்கிறார்கள், மாமா!'' என்று சொன்னாள். அது தவறு என்று எங்களை அவர் கடிந்துகொண்டார். நான் விளையாட்டாக ''அதில் என்ன தவறு அப்பா?'' என்றேன்.

அதற்கு அவர் தமது மார்பின் இடது பக்கத்தைக் காண்பித்து, ''நீ குழந்தையாக இருந்தபோது இங்கே வைத்து உன்னைத் தூங்கச் செய்திருக்கிறேன்'' என்றார். நான் உள்ளம் நெகிழ, ''அப்படித்தான் என்னைத் தைரியம் இல்லாமல் வளர்த்துவிட்டீர்கள்'' என்றேன்.

அவர், ''இல்லேம்மா, பரி! இந்த இதயத்தையே உனக்குக் கொடுத்திருக்கிறேன்'' என்றார்.

அந்தப் பெரு உள்ளம் என்ன நினைத்து அன்று சொல்லிற்றோ என்று எண்ணி எண்ணி இன்று வாடுகிறேன். அந்த இதயம் என்னோடு தான் இருக்கிறது என்ற ஒரே நம்பிக்கையில் என் வாழ்நாளை நான் கழிக்கப் போகிறேன்.



பரிமளம் தம்பதியும்
குடும்பத் தலைவர் அண்ணாவும்



○ அழகுப் போட்டியில் பரிசுபெற்ற ஆஸ்திரேலிய அழகி லின்னெட், பம்பாயில் புதிதாக உருவாக்கியுள்ள ஏர் - இந்தியாவின் 24 மாடிக் கட்டிடத்தின் உச்சியில் நின்று 'அரசியார் நெக்லஸ்' என அழைக்கப்படும் கடற்கரைச் சாலையைப் பார்க்கிறார். ○ பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு தோற்றம். ○ மக்களின் குடியிருப்புக்கள். ○ பழங்காலத்திய பம்பாய்.



பம்பாயில் பத்து நாள்

''பம்பாய்க்குப் போயிருந்தீர்களாமே? என்ன விசேஷம்?'' என்றார் நண்பர்.

''ஒரு தொழிலகத்தைப் பார்த்தேன்'' என்றேன்.

''அப்புறம் ?''

''ஒரு விருந்துக்குப் போயிருந்தேன்.''

''அப்புறம்?''

'' இன்னொரு தொழிற்சாலையைப் பார்த்தேன்.''

''பிறகு?''

''மற்றுமொரு டின்னருக்குப் போனேன்.''

''தொழிற்சாலை — பார்ட்டி; தொழிற்சாலை — பார்ட்டி ! இவை தவிர வேறு ஒன்றும் இல்லையா ?''


''வேறு என்ன வேண்டும்? பம்பாயே தொழிற்சாலைகளும், பார்ட்டிகளும் தானய்யா!'' என்றேன்.


சமீபத்தில் சிவசேனைக்காரர்கள் நாங்களும் இருக்கிறோம் என்று காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அமைதி நிலவும் பம்பாய்க்குப் போகும் எவரையும் கவரக்கூடிய விஷயம் அங்கு மளமளவென்று தொழில் வளம் பெருகி வருவதுதான். நகரின் சுற்றுப்புறங்களிலெல்லாம் புதிய புதிய தொழிலகங்கள் தோன்றியபடியுள்ளன.


கல்கத்தாவில் தொழில்வளப் பெருக்கத்துக்கு ஏற்ற சூழ்நிலை சிறிது காலமாக இல்லை என்று தொழிலதிபர்கள் பலர் கருதுவதால் அங்கிருந்து குடிபெயர்ந்துவிட்ட பல தொழிற்சாலைகள் மைசூருக்கும் மகாராஷ்டிரத்துக்கும் வந்து சேர்ந்துள்ளன. ''ரிஜிஸ்டர்ட் ஆபீஸை மட்டும்தான் இன்னும் கல்கத்தாவிலேயே வைத்துக் கொண்டிருக்கிறோம். பாக்கி எல்லாவற்றையும் பம்பாய்க்கு மாற்றியாகி விட்டது'' என்றார் ஒரு மிகப் பெரிய தொழிலகத்தின் பிரதம நிர்வாகி. ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் கல்கத்தாவில் இருப்பதால் பல ரக வரிகளை மட்டும் மேற்கு வங்க சர்க்காருக்கே செலுத்தி வருகிறார்கள்!

தொழில் வளப் பெருக்கத்தின் விளைவாக பம்பாய் நகரில் காரியாலயங்களுக்கெனப் பல மாடிக் கட்டடங்கள் விறுவிறு வென்று எழும்பிய வண்ணம் இருக்கின்றன. குடியிருப்புக்களுக்கெனப் பல அடுக்குக் கட்டடங்கள் உருவாகியபடி உள்ளன. இவற்றைக் கட்ட நிலத்துக்குப் பஞ்சமாதலால் பல இடங்களில் கடல் நீர் உட்புகுந்து உருவான சதுப்பு நிலப் பகுதிகளைக் கெட்டிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தொழிலகமோ வியாபாரமோ நன்றாக நடந்ததென்றால் அதற்கு விருந்து. இவை நன்றாக நடக்க வேண்டும் என்றால் அதற்கும் விருந்துதான் !







சென்னையில் நாம் பங்கு பற்றக்கூடிய விருந்துபசாரங்களுக்கும் பம்பாயில் நடக்கும் பார்ட்டிகளுக்கும் ஆரம்ப கட்டத்திலேயே அடிப்படையான வித்தியாசம் உண்டு. அது தான் மது!

எனவே, பம்பாயில் போய் ஒருவன் குடியும் குடித்தனமுமாகச் சௌக்கியமாக இருக்கிறான் என்று யாராவது கூறக் கேட்டால் அதற்கு அர்த்தமே வேறுதான் என்பதைத் தயவுசெய்து புரிந்து கொள்ளவும்!

இந்தப் பார்ட்டிகளில் பல ரகம் உண்டு. ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு ஆரம்பமான ஒரு விருந்துக்குப் போயிருந்தேன். விருந்து என்பதால் மாலைச் சிற்றுண்டிகூட அருந்தவில்லை. போனதும் ஆளுக்கொரு கோப்பையைக் கையில் கொடுத்து நிற்க வைத்து விட்டார்கள். '' 'என்ஜாய்' பண்ணத் தெரியாத'' எனக்குக் கிடைத்தது கோக்கோ கோலா. மற்றவர்கள் மதுவை உறிஞ்சியபடியே நின்று பேசினார்கள், பேசினார்கள், பேசினார்கள். நின்று நின்று எனக்குக் கால் வலிக்கவில்லை, காதே வலிக்க ஆரம்பித்து விட்டது! ஒரு மாதிரி பதினொரு மணிக்கு உணவருந்த ஆரம்பித்து ஒரு மணிக்கு ஜாகைக்குத் திரும்பி, 'பொத்' தென்று படுக்கையில் விழுந்தேன்.

இந்த அனுபவத்துக்குப் பிறகு உஷாராகி விட்டேன். அடுத்த முறை ஒரு பிரபல படாதிபதியிடமிருந்து எட்டு மணி விருந்துக்கு அழைப்பு வந்ததும் இரவு பத்து மணிக்குத்தான் போனேன்!

என்னைப் பார்த்ததும் படாதிபதி, ''வாழுங்கள்.... ஷார்!'' என்றார்.

நான் சாகப் போவதாக யாரிடமும் ரகசியமாகக்கூடச் சொல்லவில்லையே என்று குழம்பிக் கொண்டிருக்கையிலேயே ''ஹாப்பியாக இருக்கலாம்'' என்றார் படாதிபதி. ஹாப்பி (Happy) என்ற வார்த்தைக்கு பம்பாயில் அர்த்தமே வேறுதான் என்பதை இதற்குள் நான் தெரிந்து வைத்திருந்தேன். ஆகவே, ''இல்லை, சார்! ஹாப்பியாக இருக்கக் கொடுத்து வைக்காதவன் நான். துக்கமாகவே இருந்துவிட்டுப் போகிறேன்'' என்றேன் முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு.

''ஷரி, ஷாப்பாடு ஷாப்பிடுங்கள்...!''

நான் சற்றுத் தயங்கினேன் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

படாதிபதிக்குக் கோபம் வந்து விட்டது. ''ஊட்டவா ?'' என்று ஓர் அதட்டல் போட்டார். ஸ்பஷ்டமான உச்சரிப்பு.

''வேண்டாம் சார், நானே சமர்த்தாகச் சாப்பிட்டு விடுகிறேன்!'' என்றேன் நடுங்கியபடியே.

''அப்படி ஷொல்லுங்கள்! ராமா, ஷாரைக் கவனி!'' என்றவர் சாப்பாட்டு மேஜைக்கடியில் புகுந்து கொண்டார்!

விரலைச் சொடுக்கினேன்; ''த்செள; த்செள'' என்றேன்; மனுஷன் அங்கிருந்து நகருகிற வழியாக இல்லை!

கடைசியில் ராமனும் நானுமாகச் சேர்ந்து குறட்டை விட்டுக் கொண்டிருந்த அவரை மெல்லத் தூக்கிப் படுக்கையில் கிடத்தினோம்.

''வருகிறேன், ராமா!'' என்றேன்.

''என்ன சார், சாப்பிடாமல் கிளம்ப றீங்க? அவர் அப்படித்தான் சார். நீங்க உட்காருங்க, நான் கவனிச்சுக்கறேன், உங்களே!'' என்றான். வேறு இரண்டு விருந்தினரையும் மெல்லக் கைகளைப் பிடித்து அழைத்து வந்து உட்கார வைத்தான், சாப்பாடு மேஜை அருகில். விருந்து நடந்தது.

மதுவுக்கு அடுத்தபடி விருந்துகளில் பயன் படுவது டேப் ரிகார்டர். சிலர் கர்நாடக சங்கீதத்தை ஒலிக்கச் செய்துவிட்டுப் பேசிக் கொண்டிருப்பார்கள். வேறு சில இடங்களில் விறுவிறுப்பான மேனாட்டு இசை கேட்கும். அதற்கேற்ப ஆடுவார்கள். பார்ட்டிக்கு வருவோரே சங்கீதத் துறையில் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டும் தருணங்களும் உண்டு.

இப்படியெல்லாம் நான் எழுதுவதால் மது இல்லாத விருந்துபசாரங்களே பம்பா யில் கிடையாதோ என்று நினைத்து விடா தீர்கள்! அப்படியும் ஒன்றிரண்டு நடக்கும். ஆனால் அவற்றைப் பற்றி எழுதினால் படிக்கச் சுவாரசியமாய் இராதே!

''பம்பாயைச் சுற்றிப் பார்க்கலாம், சார்!'' என்று சொல்லி நண்பர் ஒருவருடன் காரில் ஏறினேன்.

அரை வட்ட வடிவமாக அமைந்துள்ள 'மரைன் டிரைவ்' இரவு நேரத்தில் பிரகாச மான விளக்குகள் காரணமாய் ஜொலிக் கிறது. இதனை அரசியின் நெக்லஸ் என்று வர்ணிக்கிறார்கள். இதன் அழகில் நான் சொக்கிப் போய் அமர்ந்திருக்கையிலேயே, ''காரை விட்டுக் கீழே இறங்கி அந்த மதில் ஓரமாய்ப் போய்ப் பார்த்தால் தெரியும், வறுமையில் தவிக்கும் தமிழர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று.'' — இப் படிச் சொன்னார் நண்பர்.

தமிழர்கள் மட்டும்தானா? பாரதத்தின் பல பாகங்களிலிருந்தும் பம்பாய்க்கு வேலை வாய்ப்புத் தேடி எத்தனையோ பேர்கள் வரு கிறார்கள். குடிசையோ கூடாரமோ அமைத்து வாழ்கிறார்கள்.

''அதோ, பாருங்கள்! அங்கே உருவாகிக் கொண்டிருப்பது ஒரு 'ரிவால்விங் ரெஸ்டா ரெண்ட்' '' என்றார் நண்பர். ''உயரமான ஸ்தூபி. அதன் உச்சிக்கு லிப்டில் ஏறிச் சென்று விட்டால் உணவுச் சாலை. அதில் நாம் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அந்தத் தளம் மெல்லச் சுழலும். உண வருந்தியபடியே பம்பாய் நகரை நாலாபுற மும் பார்க்கலாம்!''

''அப்போது அந்தக் குடிசைகளும் தெரியு மல்லவா?'' என்று கேட்க எண்ணிய நான் ஏனோ சில நிமிஷங்களுக்கு மௌனமாகி விட்டேன். எதிரே ஒரு நீண்ட 'கியூ' தென் பட்டபோதுதான், ''இங்கே என்ன?'' என்றேன்.

''பிள்ளையார் கோயில். சித்திவிநாயகர். கேட்ட வரத்தைத் தருகிறார். வாரத்தில் இரண்டு நாட்கள் கட்டுக்கடங்காத கூட்டம். சின்னக் கோயிலானதால் மைல்கணக்கில் 'க்யூ'வில் நின்று சுவாமி தரிசனம் செய்து காரியசித்திக்கு வேண்டிக் கொள்கிறார்கள்.''

நண்பர் ஒரு வெற்றிலை பாக்குக் கடை எதிரே காரை நிறுத்தினார். ''அரே பாய், இதர் ஆவோ!'' என்றார். கடையிலிருந்து ஒரு பையன் காரின் அருகே வந்து நின்றான்.

ஒரு பாக்கெட் சிகரெட், அல்லது ஒரு பான் பீடா வாங்கப் போகிறார் என்று நினைத்தேன். நண்பர் பர்ஸைத் திறந்து ஒரு நூறு ரூபாய் நோட்டுக் கத்தையை எடுத்தார். ஒன்று, இரண்டு...... ஏழு, எட்டு.... பத்து நோட்டுக்கள் கரம் மாறின!

''கியா மிலேகா? ஜானி வாக்கர்?''

''கோஷிஷ் கரேகா பாபு! ப்ளாக் அண்டு ஒயிட் ஜரூர் தேகா!''

எனக்கு பம்பாயைச் சுற்றிக் காண்பித் துக் கொண்டிருப்பதாகவும் ஒரு மணி நேரம் கழித்து வருவதாகவும் சொல்லி விட்டுக் கிளம்பினார் நண்பர்.

''வெற்றிலைப் பாக்குக் கடையில் ஆயிரம் ரூபாய் முழுசாகத் தரப்படுவதை இன்று தான் என் ஆயுளில் முதல் முறையாகப் பார்க்கிறேன்'' என்றேன் வியப்புடன். ''அதைவிட ஆச்சரியம் ஒரு ரசீதுகூட இல் லாமல் முழுசாக ஆயிரம் ரூபாய் தந்து விட்டீர்களே!'' என்றேன்.

''சேச்சே! அவன் எல்லாரிடமும் இப் படிப் பணம் வாங்க மாட்டான். யாரை நம்பலாம், யாரை நம்பக் கூடாது என்று அவனுக்குத் தெரியும்!'' நண்பர் நிலைமை யைத் தலைகீழாக மாற்றி என்னை மேலும் வியப்பில் ஆழ்த்தினார். அன்று இரவு ஒரு ஹிந்தி திரைப்படத்தின் வெற்றி விழா வைக் கொண்டாடுகிறாராம், தமிழகத்தைச் சேர்ந்த ஒரு படாதிபதி. படம் வெற்றி அடைந்தது போலவே அவர் கொடுக்கும் பார்ட்டியும் வெற்றிபெற வேண்டும் என்பதற் காக நண்பரின் உதவியை நாடினாராம்!

''கள்ளக் கடத்தலில்தானே அயல்நாட்டு மதுவைக் கொண்டு வருவார்கள்? ஏன் ஸார், இதற்கெல்லாம் சட்டம் ஒழுங்கு என்று ஒன்றும் கிடையாதா?'' என்றேன்.

''ஏன் இல்லை? கள்ளக் கடத்தலைப் பிடிப்பதில் பம்பாய் போலீஸாரை மிஞ்சக் கூடியவர்கள் யாரும் கிடையாது! நேற்று பாருங்கள், விமான நிலையத்தில் ஒரு வேடிக்கை. ஓர் அராபியன் தொளதொள வென்றிருக்கும் அவர்களுடைய தேசிய உடையை அணிந்து வந்து கொண்டிருந் தான். கஸ்டம்ஸில் நம்ம நண்பர் சேஷா சலம் இருக்கிறார். மனுஷன் என்ன செய் தார் தெரியுமா? விரைப்பாக நடந்து போய்க் கொண்டிருந்த அந்த அராபியனை அணுகி, 'ஹல்லோ மை டியர் ஃபிரெண்ட்!' என்று சகஜமாகச் சொல்லி முதுகில் ஒரு தட்டுத் தட்டினார்.

''அவ்வளவுதான்! அடுத்த வினாடி அந்த அராபியன் தள்ளாடித் தொபுகடீரென்று விழுந்தான். தரையே பெயர்ந்து விட்டது!


கோகுல்
ஸாண்டால்
டாய்லெட் பவுடர்
ஸாண்டல் வுட்
டாய்லெட் பவுடர்
டி.எஸ்.ஆர்.&கோ.
மதராஸ்-16 கும்பகோணம்
SANDAL

ஏனெனில், அத்தனை தங்கக் கட்டிகளை அங்கிக்குள் ஒளித்து வைத்திருக்கிறான்!''

நண்பர் செங்கரி பஜார் முன்னால் வண்டியை நிறுத்தினார். ''வாயேன், உள்ளே போய்ச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம்'' என்றார். உள்ளே கண்ணைக் கவரும் பலரகப் பொருள்கள் இருந்தன. ஆயினும் பர்ஸைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, ''சென்னையில் கிடைக்காத பொருளாக இங்கே விசேஷமாக ஒன்றையும் காணோமே'' என்று கூறித் தப்பிக்கப் பார்த்தேன்.

என்னைப் போன்ற ஆசாமிகளுக்காகவே தான் அங்கே அழகிய பெண்களை விற்பனையாளர்களாக நியமித்திருக்கிறார்கள் போலும்! அவர்களுள் ஒருத்தி என்னிடமிருந்து ஐந்து ரூபாயைப் பிடுங்கிக் கொண்டு எனக்குத் தேவையே இல்லாத ஒரு 'பேப்பர் கட்ட'ரை என் தலையில் கட்டினாள். இதோடு ஆளைவிட்டால் சரி என்று வெளியே ஓடிவிட்டேன்! நண்பர் சிரித்தபடியே காரைக் கிளப்பினார். மேலும் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு மாதுங்கா திரும்பினோம்.

மாதுங்கா தமிழர்கள் வேலை நேரம் போக மற்ற சமயங்களில் அதிக ஈடுபாடு காட்டுவது சங்கம், சபை இவற்றில்தான். போட்டி போட்டுக் கொண்டு இவை கலை நிகழ்ச்சிகளுக்கும் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்கின்றன. பரதநாட்டியப் பள்ளிகள் தழைக்கின்றன. பேச்சுப் போட்டிகளும் நடக்கின்றன.

தி. மு. க. பாணியில் குரலை வகைப்படுத்திக் கொண்டு தயங்காமல் நிறுத்தாமல் ஏற்றலும் இறக்கலுமாகப் பேசினால், அந்தச் சொற்பொழிவில் விஷயம் என்று ஏதுமில்லாவிட்டால்கூடப் பரிசு பெறலாம் என்பதை நான் இங்கு புரிந்து கொண்டேன். இதுவும்கூட சம்பத்திய ஒரு மனமாற்றமாகத்தான் இருக்கும் என்பதை திரு மு. கருணாநிதி விண்டு உரைத்த ஒரு செய்தி உணர்த்தியது: ''முன்பெல்லாம் பம்பாய்த் தமிழர்கள் எங்களை அழைத்தால் அது தொழிலாளத் தோழர்கள் வசிக்கும் ஒரு பகுதியிலிருந்து வந்த அழைப்பாகத்தான் இருக்கும்; ஆனால் சமீப காலமாக மாதுங்கா தமிழர்களும் எங்களை வரவேற்று உபசரிக்கிறார்கள்!'' என்றார் அவர், ஒரு பொதுக் கூட்டத்தில்.

வசதி உள்ள தமிழ்க் குடும்பத்துப் பெண் குழந்தைகள் பலப் பலர் பரத நாட்டியத்தை ஆர்வத்துடன் பயிலுகிறார்கள். பயிற்றுவிக்கத் தரமான பள்ளிகளும் உள்ளன.

பம்பாய் பலதரப்பட்ட மக்கள் வாழும் நகரம். மாலை நேரத்தில் ஃப்ளோரா — ஃபவுண்டன் அருகே போனால் 'ஈவ்ஸ் வீக்லி'யிலிருந்தோ அல்லது 'ஃபெமினா'விலிருந்தோ பொம்மைகள் உயிர் பெற்று எழுந்து வந்தது போலத் தோற்றமளிக்கும் ஆரணங்குகளைக் காணலாம். ஜீன்ஸ் அணிந்த பார்ஸிகள், கவுன் அணிந்த ஆங்கிலோ இந்தியர், டெரிலின் புடவை அணிந்த மலையாளிகள் என்று ரகம் ரகமாகப் பார்க்கலாம். மாதுங்கா மார்க்கெட்டில் மடிசார் உடுத்திய மாமியையும் காணலாம். இன்னும் கன்னடியர், குஜராத்தி, வங்காளி என்று எத்தனையோ வகை மக்கள் மகாராஷ்டிரியருடன் ஒன்றாக வாழ்கிறார்கள்.

பம்பாய் நகர மேயர் குல்கர்னி ஒரு முறை அழாத குறையாகச் சொன்னார்: ''இத்தனை மொழிகள் பேசும் சமூகத்தவரும் இந்நகரில் வாழ்வது ஒரு பக்கம் பெருமையாக இருந்தாலும் ஒவ்வொரு சாராரும் தனித்தனியே என்னை அவர்கள் நடத்தும் விழாக்களுக்கு வரச் சொல்லும் போது தவித்துப் போகிறேன். முக்கால்வாசி நேரம் என்ன பேசுகிறார்கள் என்று புரியாமல் மேடையில் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் போன்ற வேதனை வேறென்ன உண்டு?''


— **வி. ராஜேந்திரன்**

சபாஷ், குடந்தை மாணவர்கள்!

தற்காலத்தில் மாணவர்களைப் பற்றி ஏதாவது செய்தி வந்தாலே வேலைநிறுத்தம், ரயிலை நிறுத்தல் போன்ற கிளர்ச்சிச் செய்கைகளைத்தான் எதிர்பார்த்துப் பயப்பட வேண்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கும்பகோணத்தில் உள்ள அரசினர் கல்லூரி மாணவர்கள் மேற்கொண்டுள்ள ஒரு திவ்வியப் பணி காதில் தேனாகப் பாய்கிறது.

குடந்தையில் உள்ள ஸ்ரீ ராமசுவாமி கோயில் சாந்நித்திய விசேஷத்தாலும், கலை எழிலாலும் மிகப் பிரசித்தி பெற்றது. துரதிருஷ்டவசமாக ஆறாண்டுகளுக்கு முன் இக்கோயிலின் திருத்தேர் ஒரு தீ விபத்துக்குள்ளாகி, அன்றிலிருந்து ரதோத்சவம் தடைப்பட்டு விட்டது. இதனை அறிந்த குடந்தைக் கல்லூரி மாணவர்கள் மீண்டும் தேரைச் செப்பனிட்டு விழாக் காண முடிவு செய்துள்ளனர். தினந்தோறும் தேர்த் திருப்பணிக்காகத் தலைக்குப் பத்துப் பைசா அளிப்பதாகத் தீர்மானம் செய்தனர். ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் வீடு வீடாகச் சென்று தொகை சேகரித்தனர்.

மாணவர்களின் மாண்புமிகு செயலில் ஊக்கம்பெற்ற நகரப் பிரமுகர்கள், திரு பழனியப்ப முதலியார் தலைமையில் ஒரு திருப்பணிக் குழு நிறுவி, இந்த ராமநவமியின் போதே ரதோத்சவம் நிகழ்த்த உற்சாகத்துடன் முயன்று வருகின்றனர். 'ஸ்ரீ ராமசுவாமி கோவில் திருத்தேர் புனருத்தாரணக் குழு, ஸ்ரீ ராமசுவாமி கோயில், கும்பகோணம்' என்ற முகவரிக்குப் பொருள் அனுப்பி இந்தப் புண்ணிய கைங்கரியத்தில் அனைவரும் பங்கு பெறலாம்.





பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

ஏழாம் அத்தியாயம்

"சமுத்திர குமாரி"

அன்று பகற்பொழுது வந்தியத்தேவனுக்கு எளிதில் போய்விட்டது. பாதி நேரத்துக்கு மேல் தூங்கிக் கழித்தான். விழித்திருந்த நேரமெல்லாம் பூங்குழலியின் விசித்திரமான சுபாவத்தைப் பற்றி எண்ணுவதில் சென்றது. என்ன அதிசயமான பெண்! எவ்வளவு இனிய சரளமான பெயர்! ஆனால் சுபாவம் எவ்வளவு கடுமையானது? 'கடுமை மட்டுந்தானா? அதில் இனிமையும் கலந்துதான் இருந்தது! சிறுத்தையை அடித்துக் கொன்ற காரியத்தைப் பற்றி எவ்வளவு சர்வ சாதாரணமாகக் கூறினான்? எவ்வளவு அறிவுக் கூர்மை? எவ்வளவு முன்யோசனை? — இவ்வளவுடன் சிலசமயம் உன்மத்தம் பிடித்தவள் மாதிரி நடந்து கொள்ளுகிறாளே, அது ஏன்? இந்தப் பெண்ணின் வாழ்க்கையில் ஏதோ ஒரு கசப்பான சம்பவம் நடந்திருக்க வேண்டும்! கசப்பான சம்பவமோ, அல்லது இனிப்பான சம்பவம் தானோ? இரண்டினாலும் இப்படி ஒரு பெண் உன்மத்தம் பிடித்தவள் ஆகியிருக்கக் கூடும்! அல்லது ஒன்றுமே காரணமில்லாமல், பிறவியிலேயே இத்தகைய இயற்கையுடன் பிறந்தவளோ? இவர்களுடைய பெற்றோர்களின் இயற்கையில் விசேஷம் ஒன்றையும் காண



வில்லையே? இனிய, சாந்த சுபாவம் படைத்தவர்களா யிருக்கிறார்களே!.... குணம் எப்படியாவது இருக்கட்டும்! நம்மிடம் இவளுக்கு இவ்வளவு சிரத்தை ஏற்பட்டதன் காரணம் என்ன? பழுவூர் ஆட்களிடம் நாம் பிடிபடாமல் தப்புவிப்பதற்கு இவ்வளவு பிரயத்தனம் செய்திருக்கிறாளே? இலங்கைக்குப் படகு வலித்துக் கொண்டு வருவதாகவும் சொல்லி யிருக்கிறாளே? இதிலெல்லாம் ஏதாவது ஏமாற்றம் இருக்குமோ?.... ஒருநாளும் இல்லை. ஆனாலும் இவள் மனம் மாறியதன் காரணம் என்ன? நம்மிடம் இவள் எந்தவிதப் பிரதி உபகாரத்தை எதிர்பார்க்கிறாள்? பின்னால் சொல்வதாகக் கூறியிருக்கிறாளே! அது என்னவாயிருக்கும்?...

இவ்வாறு வந்தியத்தேவன் சிந்தனை செய்து கொண்டிருந்த சமயங்களில், பூங்குழலி கூறியிருந்தது போலவே, அவனைச் சுற்றி நாலாபுறங்களிலும் அடிக்கடி அமளி துமளிப் பட்டது. குதிரைகளின் ஓட்டம், மனிதர்களின் அட்டகாசம், சிறிய வன ஜந்துக்களின் பயம் நிறைந்த கூச்சல், பறவைகள் கிறீச்சிடுதல் — இவ்வளவும் சேர்ந்து சில சமயம் ஒரே அமர்க்களமா யிருந்தது. அடுத்தாற்போல் அமைதி குடி கொண்டு நிசப்தமாயுமிருந்தது. அமர்க்களப்பட்டதெல்லாம் தன்னைத் தேடிப் பிடிப்பதற்காகத்தான் என்று வந்தியத்தேவன் உணர்ந்தான். வைத்தியரின் மகன் செய்த துரோகமும் அவனுடைய மனத்தில் அடிக்கடி வந்து

கொண்டிருந்தது. நிர்மூடன்! பூங்குழலியிடம் அதற்குள் மையல் கொண்டு விட்டதாக அவனுக்கு எண்ணம் போலும்! சிறிய குட்டையில் உள்ள தண்ணீர் வடவாமுகாக்கினியின் மீது காதல் கொண்டது போலத்தான்! பெண் சிங்கத்தை ஒரு சுண்டெலி கலியாணம் செய்து கொள்ள எண்ணிய கதைதான்! ஆனாலும் அவனுடைய அறிவீனத்தை இந்தப் பெண் எப்படிப் பயன்படுத்திக் கொண்டு விட்டாள்! அவனுடைய மனத்தில் எவ்விதம் பொறாமைக் கனலை மூட்டிவிட்டாள்?...அரை நாழிகை நேரத்தில் அவனைத் துரோகியாக்கிவிட்டாளே! பெண்மையின் சக்தி அபாரமானதுதான்!

வந்தியத்தேவா! ஒன்றுமட்டும் நீ ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்! நீ உன்னை வெகு கெட்டிக்காரன் என்று எண்ணியிருந்தாய்! தந்திர மந்திர சாமர்த்தியங்களில் உனக்கு இணை யாரும் இல்லை என்று இறுமாந்திருந்தாய்! ஆனால் இந்த நாகரிகமறியாத காட்டுமிராண்டிப் பெண் உன்னைத் தோற்கடித்து விட்டாள்! கடலில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்த உன்னை இந்த மறைந்த மண்டபத்தில் கொண்டு சேர்ப்பதற்கு அவள் கையாண்ட யுக்தியை என்னவென்று சொல்வது! அப்படி அவள் உன் அரைச்சுற்றுச் சுருளை எடுத்துக்கொண்டு ஓடியிராவிட்டால், இத்தனை நேரம் என்ன ஆகியிருக்கும்? பழுவூர் ஆட்களிடம் நீ சிக்கியிருப்பாய்! காரியம் அடியோடு கெட்டுப் போயிருக்கும்!... ஆம்; இனி எப்போதும் இம்மாதிரி அஜாக்கிரதையாக இருந்துவிடக் கூடாது.

மேற்குக் கடலில் சூரியன் அஸ்தமித்தது. கோடிக்கரையில் இது ஓர் அற்புதமான காட்சி. அதுவரை தெற்கு நோக்கி வரும் கடற்கரை அந்த முனையில் நேர் கோணமாக மேற்கு நோக்கித் திரும்பிச் செல்கிறது. ஆதலின் கோடிக்கரையில் மேடான இடத்திலிருந்து பார்த்தால், கிழக்கு—மேற்கு—தெற்கு ஆகிய மூன்று திசைகளிலும் கடல் பரந்திருக்கக் காணலாம். சிற்சில மாதங்களில் சூரியச் சந்திரர்கள் கிழக்குக் கடலில் ஜோதிமயமாக உதயமாவதையும் பார்க்கலாம்; மேற்கே கடலைத் தங்க மயமாகச் செய்து கொண்டு முழுகி மறைவதையும் காணலாம். வந்தியத் தேவனுக்கு, மண்டபத்தை மூடியிருந்த மணல் திட்டின் மேல் ஏறிச் சூரியன் கடலில் மறையும் காட்சியைப் பார்க்க ஆவல் உண்டாயிற்று. அதைப் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டான்.

நாலாபுறமும் அந்தகாரம் சூழ்ந்து வந்தது. மறைந்த மண்டபத்தில் முன்னமே குடிகொண்டிருந்த இருள் பன்மடங்கு கரியதாயிற்று. வந்தியத்தேவனால் அங்கே மேலும் இருக்க முடியவில்லை. வெளியேறி வந்தான். மண்டபத்தை மூடிய மணல் திட்டின் மீது நின்றான். வெகு தூரத்தில் கலங்கரை விளக்கின் ஒளி தெரிந்தது. வானத்தில் வைர மணிகள் சுடர் விட்டு ஜொலித்தன. காட்டில் பல விசித்திரமான ஒலிகள் உண்டாயின. பகலில் வனப் பிரதேசத்தில் கேட்கும் ஒலிகளுக்கும் இரவில் கேட்கும் ஒலிகளுக்கும் மிக்க வேற்றுமை இருந்தது. இரவில் கேட்கும் ஒலிகள் மர்மம் நிறைந்து உள்ளத்தில் பீதியையும் உடலிலே சிலிர்ப்பையும் உண்டாக்கின. பகலில் எதிரே புலியைப் பார்த்தாலும் மனம் பதறுவதில்லை. பயமும் உண்டாவதில்லை. இரவில் ஒரு புதரில் சின்னஞ் சிறு எலி ஓடினாலும் உள்ளம் திடுக்கிடுகிறது.

இதோ குயிலின் குரல். 'குக்கூ!' 'குக்கூ!' அந்தக் குரல் தேவகானத்தைப் போல் வந்தியத்தேவன் காதில் ஒலித்தது. குரல் வந்த திக்கை நோக்கிச் சென்றான். பூங்குழலி அங்கு நின்றாள். 'சத்தம் செய்யாமல் என்னுடன் வா!' என்று சமிக்ஞை செய்தாள். அங்கிருந்து கடற்கரை வெகு சமீபம் என்று தெரிய வந்தது.

கடற்கரையில் படகு ஆயத்தமாயிருந்தது. அதில் பாய்மரமும் பாயும் அதைக் கட்டும் கயிறும் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. படகிலிருந்து இரண்டு கழிகள் நீட்டிக் கொண்டிருந்தன. அந்தக் கழிகளின் முனையில் பெரிய மரக்கட்டை பொருத்திக் கட்டப்பட்டிருந்தது.

படகைக் கடலில் இறக்குவதற்கு வந்தியத் தேவன் உதவி செய்யப் போனான். 'நீ சும்மா இரு!' என்று பூங்குழலி சமிக்ஞை செய்தாள். படகை லாகவமாகத் தள்ளிக் கடலில் இறக்கினாள். சிறிதும் சத்தமின்றிக் கடலில் அந்தப் படகு இறங்கியது.

வந்தியத்தேவன் படகில் ஏறிக் கொள்ள யத்தனித்தான். ''உஷ்! சற்றுப் பொறு! கொஞ்ச தூரம் போன பிறகு நீ ஏறிக்கொள்ளலாம்!'' என்று பூங்குழலி மெல்லிய குரலில் கூறிவிட்டுப் படகைப் பிடித்து இழுத்துக்கொண்டே போனாள்.

வந்தியத் தேவன் தானும் உதவி செய்ய எண்ணிப் படகைத் தள்ளினான். படகு நின்றுவிட்டது. ''நீ

சும்மா வந்தால் போதும்!'' என்றாள் பூங்குழலி. கரை ஓரத்தில் அலைமோதும் இடத்தைத் தாண்டிய பிறகு ''இனி மேல் படகில் ஏறிக் கொள்ளலாம்!'' என்று சொல்லி அவள் முதலில் ஏறிக் கொண்டாள். வந்தியத் தேவனும் தாவி ஏறினான். அப்போது படகு அதிகமாக ஆடியது. அந்த ஆட்டத்தில் வந்தியத்தேவன் கடலில் விழுந்து விடுவான் போலத் தோன்றியது. சமாளித்துக்கொண்டு உட்கார்ந்தான். ஆயினும் அவனுடைய நெஞ்சு பட பட வென்று அடித்துக் கொண்டது.

''இனிமேல் ஏதாவது பேசலாம் அல்லவா?'' என்று கேட்டான்.

''நன்றாகப் பேசலாம். உனக்கு நடுக்கம் நீங்கியிருந்தால் பேசலாம்!'' என்றாள் பூங்குழலி.

''நடுக்கமா? யாருக்கு நடுக்கம்? அதெல்லாம் ஒன்றுமில்லை.''

''ஒன்றுமில்லாவிட்டால் சரி!''

''பாய்மரம் கட்ட வேண்டாமா?''

''பாய்மரம் கட்டினால் கரையில் உள்ளவர்கள் ஒருவேளை நம்மைப் பார்த்து விடுவார்கள். ஓடி வந்து பிடித்துக் கொள்வார்கள்.''

''இனி அவர்கள் வந்தால் ஒரு கை பார்த்து விடுகிறேன். நீ கொஞ்சமும் பயப்பட வேண்டாம்!'' என்று வந்தியத்தேவன் தன் வீரப் பிரதாபத்தைச் சொல்லத் தொடங்கினான்.

''இப்போது எதிர் காற்று அடிக்கிறது. பாய்மரம் விரித்தால் படகை மறுபடியும் கரையிலே கொண்டு போய் மோதும். நடுநிசிக்கு மேல் காற்று திரும்பக் கூடும். அப்போது பாய் மரம் விரித்தால் பயன்படும்!'' என்று பூங்குழலி கூறினாள்.

''ஓ! உனக்கு இதெல்லாம் நன்றாகத் தெரிந்திருக்கிறது. அதனாலேதான் உன்னை அழைத்துப் போகும்படி உன் தந்தை சொன்னார்.''

''என் தந்தையா? யாரைச் சொல்லுகிறாய்?''

''உன் தகப்பனாரைத்தான் சொல்லுகிறேன். கலங்கரை விளக்கின் காவலர் தியாகவிடங்கக் கரையரைச் சொல்லுகிறேன்.''

''கரையில் இருக்கும் போதுதான் அவர் என்னுடைய தந்தை. கடலில் இறங்கிவிட்டால்....''

''தகப்பனார் கூட மாறிப் போய் விடுவாரா என்ன?''

''ஆமாம்; இங்கே சமுத்திர ராஜன் தான் என் தகப்பனார். என்னுடைய இன்னொரு பெயர் சமுத்திர குமாரி. உனக்கு யாரும் சொல்லவில்லையா?''

''சொல்லவில்லை. அது என்ன விசித்திரமான பெயர்?''

''சக்கரவர்த்தியின் இளைய குமாரரைப் 'பொன்னியின் செல்வன்' என்று சிலர் சொல்லுகிறார்கள் அல்லவா? அதுபோலத்தான்!''

இதைக் கேட்டதும் வந்தியத்தேவன் தனது அரைச் சுற்றுச் சுருளைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

அதைக் கவனித்த பூங்குழலி ''பத்திரமாக இருக்கிறதல்லவா?'' என்று கேட்டாள்.

''எதைப் பற்றிக் கேட்கிறாய்?''

''உன் அரைச் சுருளில் வைத்திருக்கும் பொருளைப் பற்றித்தான்.''

வந்தியத்தேவனுடைய மனத்தில் 'சொரேல்' என்றது. ஒரு சிறிய சந்தேகம் ஜனித்தது.

அவனுடன் பேசிக் கொண்டே பூங்குழலி துடுப்பை வலித்துக் கொண்டிருந்தாள். படகு போய்க் கொண்டிருந்தது.

''இலங்கைத் தீவுக்கு நாம் எப்போது போய்ச் சேரலாம்?'' என்று கேட்டான் வந்தியத்தேவன்.

''இரண்டு பேராகத் துடுப்பு வலித்தால் பொழுது விடியும் சமயம் போய்ச் சேரலாம்; — காற்று நமக்கு உதவியாக இருந்தால்!''

''நானும் துடுப்பு வலிக்கிறேன். உன்னைத் தனியாக விட்டுவிடுவேனா?''

வந்தியத்தேவன் தன் அருகிலிருந்த துடுப்பைப் பிடித்து வலித்தான். ஆ! படகு வலிப்பது லேசான வேலை அன்று. மிகவும் கடினமான வேலை. படகு விர் என்று சுழன்று அடியோடு நின்று விட்டது.

''இது என்ன? நீ துடுப்பை வலித்தால் படகு போகிறது; நான் தொட்டவுடனே நின்றுவிட்டதே!''

''நான் சமுத்திர குமாரி அல்லவா? அதனாலேதான். நீ சும்மா இருந்தால் போதும்! உன்னை எப்படியாவது இலங்கையில் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன். சரிதானே?''

வந்தியத்தேவன் சிறிது வெட்கமுற்றான். சற்று நேரம் சும்மா இருந்தான். சுற்றுமுற்றும் பார்த்த போது, படகிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த கழிகளும் கட்டையும் அவன் கண்ணில் பட்டன.

''இந்தக் கட்டை என்னத்திற்கு?'' என்று கேட்டான்.

''படகு அதிகம் ஆடாமல் இருப்பதற்காக.''

"இதைக் காட்டிலும் படகு அதிகம் ஆடுமா என்ன? இப்போதேதான் வேண்டிய ஆட்டம் ஆடுகிறதே? எனக்குத் தலை சுற்றும் போலிருக்கிறது."

"இது ஒரு ஆட்டமா? ஐப்பசி — கார்த்திகையில் வாடைக் காற்று அடிக்கும்போதல்லவா பார்க்க வேண்டும்?"

கரையிலிருந்து பார்த்தால் கடல் அமைதியாகத் தகடு போல் இருப்பதாகத் தோன்றியது. ஆனால் உண்மையில் அவ்விதம் இல்லையென்பதை வந்தியத்தேவன் கண்டான். நுரையில்லாத அலைகள் எழும்பி விழுந்து கொண்டுதான் இருந்தன. அவை அப்படகைத் தொட்டில் ஆட்டுவது போல் ஆட்டிக் கொண்டிருந்தன.

"பெருங் காற்று அடிக்கும்போது இந்தக் கட்டை என்ன ஆகும்?"

"எவ்வளவு பெரிய காற்று என்பதைப் பொறுத்தது. சாதாரணமாய்ப் பெருங் காற்று அடித்தாலும் இந்தக் கட்டை படகைக் கவிழாமல் நிறுத்தி வைக்கும். ஒருவேளை சுழிக் காற்று அடித்துப் படகு கவிழ்ந்து விட்டால் இந்தக் கட்டையைப் படகிலிருந்து அவிழ்த்து விட்டு விடலாம். அதைப் பிடித்துக் கொண்டு உயிர் தப்புவதற்குப் பார்க்கலாம்."

"ஐயோ! காற்றில் படகு கவிழ்ந்து விடுமா, என்ன?"

"சுழிக் காற்று அடித்தால் பெரிய பெரிய மரக்கலங்கள் எல்லாம் சுக்கு நூறாகி விடும். இந்தச் சிறிய படகு எம்மாத்திரம்?"

"சுழிக் காற்று என்றால் என்ன?"

"இதுகூடத் தெரியாதா? ஒரு பக்கமிருந்து அடிக்கும் காற்றும் இன்னொரு பக்கத்திலிருந்து அடிக்கும் காற்றும் மோதிக் கொண்டால் சுழிக் காற்று ஏற்படும். இங்கே தை மாசி மாதங்களில் 'கொண்டல் காற்று' அடிக்கும். அப்போது அபாயமே இல்லை. சுலபமாகக் கோடிக் கரைக்கும் இலங்கைக்கும் போய் வரலாம். இரவுக்கிரவே போய்விட்டுத் திரும்பலாம். வைகாசியிலிருந்து 'சோழகக் காற்று' அடிக்கும். சோழகக் காற்றில் இங்கிருந்து இலங்கை போவது கொஞ்சம் சிரமம். இப்போது சோழகக் காற்றுக்கும் வாடைக் காற்றுக்கும் இடையில் உள்ள காலம். கடலில் சில சமயம் காற்றும் காற்றும் மோதிக் கொள்ளும். மத்தினால் தயிர் கடைவது போல் காற்று கடலைக் கடையும். மலை போன்ற அலைகள் எழும்பி விழும். கடலில் பிரம்மாண்டமான பள்ளங்கள் தென்படும். அப் பள்ளங்களில் தண்ணீர் கரகரவென்று சுழலும். அந்தச் சுழலில் படகு அகப்பட்டுக் கொண்டால் அரோகராதான்!"

வந்தியத்தேவனுக்குத் திடீரென்று மனத்தில் ஒரு திகில் உண்டாயிற்று. அத்துடன் ஒரு சந்தேகமும் உதித்தது.

"ஐயோ! நான் வரவில்லை! என்னைக் கரையிலே கொண்டு போய்விட்டு விடு!" என்று கத்தினான்.

"என்ன உளறுகிறாய்? பேசாமலிரு! பயமாயிருந்தால் கண்ணை மூடிக்கொள். இல்லாவிட்டால் படுத்துத் தூங்கு!"

வந்தியத் தேவனுடைய சந்தேகம் இப்பொழுது உறுதிப்பட்டது.

"நீ பெரிய மோசக்காரி! என்னைக் கடலில் மூழ்க அடிப்பதற்காக அழைத்துப் போகிறாய். நான் தூங்கினால் உன் காரியம் மிகவும் சுலபமாகும் என்று பார்க்கிறாய்!"

"இது என்ன பைத்தியம்?"

"எனக்கு ஒன்றும் பைத்தியம் இல்லை! படகைத் திருப்புகிறாயா, இல்லையா? திருப்பா விட்டால் கடலில் குதித்து விடுவேன்!"

"தாராளமாய்க் குதி! ஆனால் குதிப்பதற்கு முன்னால் பொன்னியின் செல்வனுக்கு நீ எடுத்துப் போகும் ஓலையை எடுத்து என்னிடம் கொடுத்துவிடு!"

"ஓ! அந்த ஓலையைப் பற்றி உனக்கு எப்படித் தெரிந்தது?"

"உன் இடுப்பில் சுற்றியிருக்கும் சுருளை அவிழ்த்துப் பார்த்ததில் தெரிந்தது. நீ யார், எதற்காக இலங்கை போகிறாய் என்று தெரிந்து கொள்ளாமல் உனக்குப் படகு தள்ளச் சம்மதித்திருப்பேனா? காலையில் மரத்தின் மேல் உட்கார்ந்து உன் அரைச் சுருளை அவிழ்த்து ஓலையைப் பார்த்தேன்....."

"மோசக்காரி! உன்னை நம்பி வந்து விட்டேனே? படகைத் திருப்புகிறாயா, மாட்டாயா?"

வந்தியத் தேவனுடைய திகிலும் வெறியும் பன்மடங்கு ஆயின. "படகைத் திருப்பு! படகைத் திருப்பு!" என்று அலறினான்.

"நான் மட்டும் இளையபிராட்டி குந்தவையாக இருந்திருந்தால் இவ்வளவு முக்கியமான ஓலையை உன்னைப் போன்ற சஞ்சல புத்திக்காரனிடம் கொடுத்து அனுப்பியிருக்க மாட்டேன்!" என்றாள் பூங்குழலி.

"ஓகோ! ஓலை கொடுத்தது யார் என்றுகூட உனக்குத் தெரிந்திருக்கிறதே! நீ வஞ்சகி என்பதில் சந்தேகமில்லை. படகைத் திருப்புகிறாயா? கடலில் குதிக்கட்டுமா?"



"குதி! தாராளமாய்க் குதி!" என்றாள் பூங்குழலி.

வெறி கொண்ட வந்தியத்தேவன் தொப்பென்று கடலில் குதித்தான். கரையோரத்தில் இருந்ததுபோல் தண்ணீர் கொஞ்சமாக இருக்குமென்று எண்ணிக் குதித்தான். அதற்குள்ளே படகு நீச்சு நிலைகொள்ளாத ஆழமான கடலுக்கு வந்து விட்டது என்பதை அவன் அறியவில்லை. கடலில் குதித்த பிறகுதான் அதை அறிந்தான். அறிந்த பிறகு அலறித் தத்தளித்தான்!

இதற்குள் வந்தியத்தேவன் ஓரளவு நீந்தத் தெரிந்து கொண்டிருந்தான். ஆனால் தண்ணீரைக் கண்டால் அவனுக்கு இயற்கையாக ஏற்பட்ட பயம் கைகால்களின் தெம்பைக் குறைத்தது. ஆற்றிலே குளத்திலே என்றால், பக்கத்திலே உள்ள கரையைப் பார்த்துத் தைரியம் கொள்ள இடமிருந்தது. இதுவோ மா கடல். நாலாபுறமும் எங்கே பார்த்தாலும் ஒரே தண்ணீர் மயம். கடலில் அங்கே இலேசான அலைதான். எனினும், ஒரு சமயம் அவனை மேலே கொண்டு வந்தது. இன்னொரு சமயம் பள்ளத்தில் தள்ளியது. மேலே வந்தபோது படகு கண்ணுக்குத் தெரிந்தது. 'ஓ' என்று கத்தினான். பள்ளத்தில் விழுந்த போது படகும் கண்ணுக்குத் தெரியவில்லை. சுற்றிலும் இருண்ட தண்ணீரின் சுவர் மட்டுமே தெரிந்தது. 'ஓ' என்று அலறும் சக்தியைக்கூட அவனுடைய நா இழந்து விட்டது. மூன்றாவது முறை கடல் அலை அவனை மேலே கொண்டு வந்தபோது படகு முன்னைவிடத் தூரத்துக்குப் போய்விட்டதாகத் தோன்றியது. 'இவ்வளவுதான். கடலில் முழுகிச் சாகப் போகிறோம்' என்ற எண்ணம் அவன் மனத்தில் உண்டாகி விட்டது! நாம் முழுகுவது மட்டுமில்லை; நம்முடைய அரைக் கச்சும் அதில் உள்ள ஓலையும் முழுகப் போகின்றன! குந்தவை தேவியின் முகம் அவன் மனக் கண்ணின் முன்னால் வந்தது. "இப்படிச் செய்து விட்டாயே?" என்று கேட்பது போல இருந்தது. ஆகா! என்னவெல்லாம் கனவு கண்டோம்? என்னவெல்லாம் மனக் கோட்டை கட்டினோம்? வாணர் குலத்துப் பழைய அரசு திரும்ப வந்து, இரத்தினகசிதமான சிங்காதனத்தில் பக்கத்தில் இளையபிராட்டியுடன் வீற்றிருக்கப் போவதாக எண்ணினோமே? அவ்வளவும் பாழாகி விட்டது! இந்தப் பாவிப் பெண் கெடுத்து விட்டாள்! இவள் ஒரு பெண் அல்ல; பெண் உருக்கொண்ட பேய். பழுவேட்டரையர்களைச் சேர்ந்தவள். இல்லை, அந்த மோகினிப் பிசாசு நந்தினியைச் சேர்ந்தவள். நாம் கடலில் முழுகிச் செத்தாலும் பாதகமில்லை. இந்தப் பெண் பேய் மட்டும் இப்போது நம்மிடம் சிக்கினால் இவள் கழுத்தை நெரித்து.... சீச்சீ! இது என்ன எண்ணம்! சாகும் போது நல்ல விஷயமாக எண்ணிக் கொள்வோம்! கடவுளை நினைப்போம்! உமாபதி! பரமேசுவரா! பழனி ஆண்டவா! பாற்கடலில் பள்ளி

விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட மூன்று பகுதிகளிலும் உடனே வேலை செய்கிறது...

இரவோடிரவாக ஜலதோஷத்தை நீக்குகிறது!




விக்ஸ் வேபோரப் உடனடியாக உங்களுக்கு இதமளிக்கிறது... மிகச் சுலபமாக சுவாசிக்க உதவுகிறது... இரவு முழுவதும் நன்றாகத் தூங்க உதவுகிறது!


ஜலதோஷத்தின் முதல் அறிகுறிகளான—தொண்டை அழற்சி, மூக்கின் ஒழுக்கு, மார்பில் இறுக்கம், சிரமப்பட்டு சுவாசித்தல்—இவைகள் தென்பட்டவுடனே விக்ஸ் வேபோரப்பை ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட மூக்கு, தொண்டை, மார்பு ஆகிய மூன்று பகுதிகளிலும் தடவுங்கள். சில விநாடிகளிலேயே விக்ஸ் வேபோரப் உங்கள் சருமத்தை சூடாக்குவதை உணர்வீர்கள்... உங்களுக்கு உடனேயே அது இதமளிக்கிறது... மேலும், குணமளிக்கக் கூடிய வேபோரப்பின் ஆவிகள் மூக்கு, மார்புநிலைகளின் அடைப்பை நீக்கி தொண்டை அழற்சியைச் சமனப் படுத்துகிறது.

விக்ஸ் வேபோரப் இரண்டு வழிகளில் ஜலதோஷத்தை எதிர்க்கிறது. நீங்கள் சுகமாகத் தூங்கும்பொழுது இந்த வியக்கத்தக்க இருவழிச் செயல் இரவு முழுவதும் தொடர்ந்து நடைபெறுகிறது. பொழுது விடிந்ததும் ஜலதோஷ தொந்தரவு குறைந்து நீங்கள் மறுபடியும் ஆரோக்கியமும் ஆனந்தமும் பெறுகிறீர்கள்.

விக்ஸ் வேபோரப்பின் வியத்தகு இருவழிச் செயல்



வெளிப்புறச் செயல்: வேபோரப்பின் சருமத்தை சூடாக்கும் தன்மை உங்களுக்கு உடனடியாக சுகமளிக்கிறது. சருமத்தின் மீது செயல்புரியும் வேபோரப்பின் குணமளிக்க வல்ல மருந்துகள் மூக்கு, மார்பு நிலைகளின் இறுக்கத்தை நீக்குகிறது... வலிக்கும் தசைகளுக்கு இதமளிக்கிறது.



உட்புற செயல்: உங்கள் சொந்த உடலின் வெப்பமே வேபோரப்பை உடனடியாக மருந்து ஆவிகளாக மாற்றுகிறது. இந்த ஆவிகளை இரவு முழுவதும் ஒவ்வொரு முறை மூச்சுவிட்டு இழுக்கும்பொழுதும் நீங்கள் உள்ளுக்கு சுவாசிக்கிறீர்கள். இந்த உட்புற செயல் மூக்கிலும் மார்பிலுமுள்ள அடைப்பை நீக்க உதவுகிறது... தொண்டைப் புண்ணுக்கு இதமளிக்கிறது.

விக்ஸ் வேபோரப்பை படுக்கப்போகும் பொழுது ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடவுங்கள்



மூக்கின் மேலும் சுற்றுப் புறத்திலும்	தொண்டை மற்றும் மார்பின் மேலும்	முதுகின் மேலும்

கடுமையான ஜலதோஷத்திற்கு கொதிநீரினின்று எழும் விக்ஸ் வேபோரப்பின் மருந்துகூடிய ஆவிகளை சுவாசியுங்கள்

விக்ஸ் வேபோரப்



3 அளவுகளில்

கொண்ட பெருமானே !.... குந்தவை தேவி! மன்னிக்கவும். ஒப்புக் கொண்ட காரியத்தை முடிக்காமல் போகிறேன்... அதோ படகு தெரிகிறது! அந்தப் பெண் மட்டும் இப்போது கையில் சிக்கினால் !....

* * *

வந்தியத்தேவன் கடலில் குதித்துச் சிறிது நேரம் வரையில் பூங்குழலி அலட்சியமாகவே இருந்தாள். தட்டுத் தடுமாறி நீந்தி வந்து படகில் தொத்திக் கொள்வான் என்று நினைத்தாள். கொஞ்சம் திண்டாடட்டும் என்ற எண்ணத்துடனே படகுக்கும் அவனுக்கும் இருந்த தூரத்தை அதிகமாக்கினாள். விரைவில் அவள் எண்ணியது தவறு என்று தெரிந்து விட்டது. இவனுக்கு நன்றாக நீந்தத் தெரியவில்லை; அதோடு பீதியும் அடைந்து விட்டான். 'ஆ!' 'ஓ!' என்று அவன் அலறுவது விளையாட்டுக்கு அன்று; உண்மையான பயத்தினாலேதான். இன்னும் சற்றுப் போனால் உப்புத் தண்ணீரைக் குடிக்கத் தொடங்கிவிடுவான்; முழுகியும் போய் விடுவான். பிறகு அவனுடைய உடலைக் கண்டு பிடிக்கவும் முடியாது. சேச்சே! தவறு அல்லவா செய்து விட்டோம்? விளையாட்டு விபரீதமாக முடிந்து விடும் போலிருக்கிறதே? அக்கரை போகும் வரையில் நாம் வாயை மூடிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவனுடைய இரகசியம் நமக்குத் தெரியும் என்று காட்டிக் கொண்டிருக்கக் கூடாது. அதற்குள்ளே அவசரப் பட்டு விட்டோம். ஆனாலும் இந்த முரடன் இப்படிச் செய்வான் என்று யாருக்குத் தெரியும்? தண்ணீரைக் கண்டு இவன் இப்படிப் பயப்படுவான் என்று யார் கண்டது?

அலையின் உச்சியில் வந்தியத்தேவன் அடுத்த தடவை தெரிந்த போது, பூங்குழலி படகை அவனை நோக்கிச் செலுத்தினாள். ஒரு நொடிப் பொழுதில் படகு அவனுக்கருகில் நெருங்கி விட்டது. ''வா! வா! வந்து ஏறிக் கொள்'' என்றாள். ஆனால் அவன் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. விழுந்தாலும் படகைப் பிடித்து ஏறிக் கொள்ளப் போகிறவனாகத் தெரியவில்லை. கேட்கும் சக்தியோடு பார்க்கும் சக்தியையும் இழந்து விட்டதாகத் தோன்றியது. ஆனால் அலறும் சக்தி மட்டும் இருந்தது. ஒரு கையை மேலே தூக்கி, தலையை மேலாக நிமிர்த்தி, 'ஓ!' என்று ஒரு கணம் அலறினான். சகல நம்பிக்கையையும் இழந்து முழுகிச் சாகப் போகிறவனுடைய ஓலக் குரல் அது என்பதைப் பூங்குழலி அறிந்தாள். அவன் தலையை நிமிர்த்திய போது பிறைச் சந்திரனின் மங்கிய நிலா வெளிச்சத்தில் அவன் முகம் ஒரு கணம் தெரிந்தது. வெறி முற்றிய பைத்தியக்காரனின் முகந்தான் அது! அவனாக வந்து படகில் ஏறிக் கொள்வான் என்று நினைப்பது வீண்! — நாம்தான் அவனைக் காப்பாற்றிப் படகில் ஏற்றியாக வேண்டும்! நல்ல சங்கடத்தை நாமாக வரவழைத்துக் கொண்டோம்! 'பெண் புத்தி பின் புத்தி' என்று சொல்லுகிறார்களே, அது சரிதான்!

உடனே பூங்குழலி மிகப் பரபரப்புடன் சில காரியங்களைச் செய்தாள். படகில் கிடந்த பாய்மரம் கட்டுவதற்கான கயிற்றின் ஒரு முனையைப் படகிலிருந்து நீண்டிருந்த கட்டையில் சேர்த்துக் கட்டினாள். இன்னொரு முனையைத் தன் இடுப்போடு சேர்த்துக் கட்டிக் கொண்டாள். கடலில் குதித்தாள். வெகு லாகவமாகக் கைகளை வீசிப் போட்டு நீந்திக் கொண்டு போனாள். வந்தியத்தேவன் அருகில் சென்றாள். கையினால் தாவிப் பிடிக்கக் கூடிய தூரத்தில் நின்று கொண்டாள்.

வந்தியத்தேவனும் அவளைப் பார்த்து விட்டான். அவனுடைய முகத்திலும் கண்களிலும் பயங்கரமான கொலை வெறி தாண்டவமாடியது.

பூங்குழலியின் உள்ளம் அதிவேகமாக இயங்கியது. நீந்தத் தெரியாதவர்களும் கை சளைத்துத் தண்ணீரில் முழுகப் போகிறவர்களும் கடைசி நேரத்தில் என்ன செய்வார்கள் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. தங்களைக் காப்பாற்றுவதற்காக யாராவது வந்தால், அப்படி வருகிறவர்களின் தோளையோ கழுத்தையோ கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடுவார்கள்; காப்பாற்ற வருகிறவர்களும் நீந்த முடியாமல் செய்து விடுவார்கள். உயிரின் மேலுள்ள ஆசையானது அச்சமயம் அவர்களுக்கு ஒரு யானையின் பலத்தை அளித்துவிடும். காப்பாற்ற வருகிறவர்களை இறுக்கிப் பிடித்துத் தண்ணீரில் அமுக்கப் பார்ப்பார்கள். அவர்களுடைய பயங்கர ராட்சதப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளவும் முடியாது; நீந்தவும் முடியாது. இரண்டு பேருமாகச் சேர்ந்து கடலுக்கு அடியில் போக வேண்டியதுதான்!

இதையெல்லாம் நன்கு அறிந்திருந்த பூங்குழலி மின்னல் வேகத்தில் சிந்தனை செய்தாள்; ஒரு தீர்மானம் செய்து

கொண்டாள். உயிருக்கு மன்றாடித் தத்தளித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவனை மேலும் சிறிது நெருங்கினாள். அவனுடைய தலைப் பக்கமாக வந்தாள். ஒரு கையினால் நீந்திக் கொண்டு இன்னொரு கையை இறுக மூடி ஓங்கினாள். வந்தியத்தேவனுடைய முகத்தை நோக்கிப் பலமாக ஒரு குத்துக் குத்தினாள். மூக்குக்கும் நெற்றிக்கும் நடுவில் அந்தக் குத்து விழுந்தது. படகு வலித்து வலித்துக் கெட்டிப்பட்டிருந்த அவனுடைய கையினால் குத்திய குத்து வஜ்ராயுதம் தாக்கியது போல் வந்தியத்தேவனைத் தாக்கியது. அவனுடைய தலை ஆயிரமாயிரம் சுக்கலாயிற்று. அவனுடைய கண்கள் பதினாயிரம் துணுக்குகள் ஆயின. ஒவ்வொரு கண் துணுக்குக்கு முன்னாலும் ஒரு லட்சம் மின் பொறிகள் ஜொலித்துக் கொண்டு பறந்தன. ஒவ்வொரு மின் பொறியிலும் சமுத்திர குமாரியின் முகம் தோன்றி ஹா ஹா ஹாஹா என்று பேய்ச் சிரிப்பு சிரித்தது. ஆயிரம், பதினாயிரம், லட்சம் பேய்களின் அகோரமான சிரிப்பின் ஒலியில் அவன் காது செவிடுபட்டது. அப்புறம் அவனுக்குக் காதும் கேட்கவில்லை; கண்ணும் தெரியவில்லை; நினைவும் இல்லை! முடிவில்லாத இருள்! எல்லையில்லாத மௌனம்! **(தொடரும்)**



"நீங்க எழுதற தொடர் கதையிலே, கதாநாயகனுக்குச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஏன் கோபம் வரது?"

"அந்த சம்பவத்தை நான் எழுதறப்போ, என்மனைவி என்னிடம் ஏதாவது பணம் கேட்டிருப்பாள்!"



பல்லுக்குத் தோழன்!

பாலில் உள்ள சுண்ணாம்புச் சத்து பல்லுக்கு நல்லது. ஆனால் அதில் உள்ள சர்க்கரைச் சத்து பல் எனாமலுக்கு எதிரி.


'பாபு'



32213

கல்கத்தா நகராட்சி மன்றத்தில் 32,213 பேர் வேலை செய்கிறார்கள். இதில் என்ன அதிசயம்? கல்கத்தா நகராட்சி மன்றத்தின் இந்த நூறு ஆண்டு சரித்திரத்தில் சென்ற ஆண்டுதான் முதன் முதலாக அங்கு எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்று கணக்கு எடுத்திருக்கிறார்கள்! — பாபு

'ஸ்டேட்ஸ்மன்.'



சமீபத்தில் இடைத் தேர்தல்கள் நடைபெற்ற நாகாலாந்து, மேற்கு வங்காளம், பீகார், பஞ்சாப், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் வரை படங்கள் இவை. எது எந்த மாநிலம்? விடை 53ம் பக்கம் பார்க்க.

ஆதாரம்: 'ஸ்டேட்ஸ்மன்.' ○ தகவல்: 'சேகர்.'





கை படாத இட்லி

மதுரையில் ஒரு நாள் ஹோட்டலில் டிபன் சாப்பிட்டுவிட்டுக் கை கழுவப் போன போது ஒரு மூலையில் கையினால் மாவு அரைக்கும் காட்சி எங்கள் கண்களில் பட்டது. பார்க்கப் பரிதாபமாக இருந்த தோடு வியர்வை வழிய அரைப்பவருடைய தோற்றம் அருவருப்பைத் தந்தது. இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும் என்று முடிவு கட்டி மாவு அரைக்கும் இயந்திரம் கண்டு பிடித்தோம். எட்டு லிட்டர் அரைக்கக்கூடிய அளவுக்குக் கல்லுரலைத் தயார் செய்தோம். முதலில் பெரிய நகரங்களில் உள்ள ஹோட்டல்களில் நல்ல வரவேற்புக் கிடைத்தது. இக் கல்லுரலுக்குத் தேவையான உறுப்புக்கள் கருங்கல் — எவர்சில்வர் வட்டா, துத்தநாகத் தகடு. ஹோட்டலுக்குத் தயாரிப்பதைப்போல் ஏன் பெரிய வீடுகளுக்கும் தேவைப்படும்படி யாகச் செய்யக் கூடாது என்று கருதி மூன்று லிட்டர் அரைக்கக்கூடிய 'மிஷினை' உருவாக் கினோம். குடும்பங்களில் நல்ல வரவேற்புக் கிடைத்தது. இப்பொழுது சிலர் இந்த மிஷினைப் பெண்களுக்குச் சீராகவும் கொடுக் கிறார்கள் !''

இப்படிக் கூறியவர்கள் மாயூரம் ஜெய ராதா தொழிற்சாலை உரிமையாளர்களான ஆர். முத்துசாமி, வி. ஆர். வைத்தியநாதன் சகோதரர்கள்.

இவர்கள், வடலூரில் இருக்கும் பீங்கான் தொழிற்சாலைக்கு (நெய்வேலி சிராமிக்) களி மண் — வெள்ளைக் களி மண் — அரைக்க 'பால்மில்' இயந்திரத்தைத் தயார் செய்து கொடுத்தவர்கள். 'ஸ்ப்ரேயிங் பூத்' மிஷினை யும் தயாரித்து வந்தவர்கள் மாவு அரைக் கும் இயந்திரத்தையும் இப்போது தயாரிக் கிறார்கள்.

ஒரு கல்லுரல் தயாரிக்க மூன்று தினங்கள் ஆகின்றன. எவர்சில்வர் வட்டாவை உப யோகிப்பதால் உளுந்து பக்கத்தில் ஒட்டிக் கொள்ளுவதில்லை.


''ரொம்பச் சத்தம் போடுமோ இந்த இயந்திரம் ?''

''வீட்டிலுள்ள பெண்களுடைய பேச் சுக்கு இடையூறாக மிஷினின் சத்தம் கேட் காது நிச்சயம் ! அரைக்கும் வேகத்தைத் தக்கபடி மாற்றவும் கட்டுப்படுத்தவும் 'கியர் பாக்ஸ்' பொருத்தி யிருக்கிறோம்.''

''மாவு அரைக்கும் பொழுது தொட்டுப் பார்க்கலாமோ?''

'' 'ஷாக்' அடிக்காத வகையில்தான் தயாரித்திருக்கிறோம். மின்சாரச் செல வும் அதிகம் ஆகாது. வீட்டிலுள்ள பெண் மணிகளுக்கு வேலை குறைவு. ஒரு நாளைக்கு அறுபது நிமிடம் வீதம் ஓடினால் முப்பது நாளைக்கு நூறு காசுதான் கரண்ட் செலவு ஆகும். வீட்டில் இந்தக் கல்லுரலை எங்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்.

''ஒரு சின்னக் கணக்கு. எட்டு லிட்டர் அரைக்க 32 நிமிடங்கள் ஆகும் என்றால் இரண்டு லிட்டர் அரைக்க எவ்வளவு நேரம் ஆகும்?''



''எட்டு நிமிஷங்களா?''

''இல்லே. அதே முப்பத்திரண்டு நிமிஷங்கள் தான் ஆகும். அரைக்கும்பொழுது கலவையை நன்ருகத் தள்ளிக் கொடுக்க மரத்திஞல் ஒரு சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. கையால் தள்ளுவது போலவே இது கலவையை நன்ருகத் தள்ளிக் கொடுக்கும்.''

''விலே எப்படியோ?''

''சிறிய குறைந்த விலே இயந்திரம் ரூ. 750 ஆகிறது. அண்மையில் இந்தக் கல்லுரல் கடல் கடந்து மலேயாவுக்குச் சென்றிருக்கிறது. இதில் ஒரு லிட்டர் அரைக்கலாம். ஒரே நிமிஷத்தில் தேங்காயைத் துருவிக் கொள்ளலாம். துருவிக்காகப் பதினேந்து ரூபாய் அதிகம். இந்தச் சிறிய இயந்திரத்தைப் பொருத்த அஸ்திவாரம் தேவையில்லே. தள்ளுப் பலகை, பிடிக் குழவி, பிடித்தூண், எலக்ட்ரோ பிளேட்டிங் 'கில்' எல்லாம் அடக்கம். இந்தக் கல்லுரலுக்கு 'ஜனதா' என்று பெயர் சூட்டியிருக்கிறேம்.''

''மற்றக் கல்லுரல்களுக்கும் தனித் தனி பெயர் உண்டோ?''

''எட்டு லிட்டர் அரைக்கக்கூடிய கல்லுரலுக்கு வைஜயந்தி என்றும், ஆறு லிட்டர் அரைக்கக்கூடியதற்கு ஹேமமாலினி என்றும் மூன்று லிட்டர் அரைக்கக்கூடியதற்கு ஜெயலலிதா என்றும் இரண்டு லிட்டர் அரைக்கக் கூடியதற்கு விஜயா என்றும் பெயர் வைத்திருக்கிறேம்.''

இயந்திரக் கல்லுரலே உபயோகித்து வரும் பி. பானுமதி கூறுகிறர்:


''கையிஞல் அரைப்பதால் ஏற்படும் சோர்வை இந்த மிஷின் நீக்கி விடுகிறது. இதில் தயாரிக்கும் மாவு கையிஞல் அரைப்பதைவிட நீண்ட நேரம் புளிக்காமல் — கெடாமல் இருக்கிறது. இட்டிலிக்கு இரண்டு லிட்டர் உளுந்து போட்டு அரைப்பவர்கள் இந்த மிஷினில் அரைக்கும் பொழுது ஒன்றரை லிட்டர் போட்டால் போதும். அரை லிட்டர் உளுந்து லாபம். வேலே முடிந்த பிறகு சுலபமாகக் கழுவிச் சுத்தம் செய்துவிடலாம். சுத்தம் செய்யும்பொழுது தண்ணீர் தங்காமல் நன்ருகத் துடைத்து விட வேண்டும். ஜாங்கிரி, முறுக்கு இவற்றுக்கு இதில் அரைப்பதால் சௌகரியம்.

''வேறு பலவற்றை அரைக்கவும் மிகவும் பயன்படுகிறது. அரைத்து முடிந்த பிறகு கைபடாமல் கரண்டி மூலமே மாவை எடுத்துக் கொள்ளலாம்.

''மிஷினில் அரைக்கும் மாவில் இட்டிலி, தோசை தயார் செய்தால் மல்லிகைப் பூவைப் போல் மிருதுவாக இருப்பதோடு ஒரு தனி 'டேஸ்டு'ம் கிடைக்கிறது.


''கையிஞல் அரைப்பதால் ஒரு லிட்டருக்கு நாற்பது இட்டிலி கிடைக்கிறது என்ருல் இதன் மூலம் ஐம்பது இட்டிலி கிடைக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக மிஷினில் அரிசி உளுந்தைப் போட்டுவிட்டு அருகே நாற்காலியில் அமர்ந்து புத்தகம் படிக்க முடிகிறதே!''

பேட்டி: அன்பு



மகாபாரதம்

ராஜாஜி



அருச்சுனனுக்கும் கர்ணனுக்கும் பெரும் போர் நடந்தது. விஷப் பாம்பின் வாயைப் போல் நெருப்பைக் கக்கும் ஓர் அம்பைக் கர்ணன் அருச்சுனன் மேல் செலுத்தினான். கிருஷ்ணன் அந்தச் சமயம் தேரைத் தன் காலால் அழுத்தி ஐந்து அங்குலம் தரையில் பதியச் செய்து அருச்சுனனைக் காப்பாற்றினான். சர்ப்பமுகாஸ்திரம் அருச்சுனனுடைய கிரீடத்தைத் தூக்கிச் சென்றது. ரோஷாவேசம் கொண்டு அருச்சுனன் வில்லில் அம்பு தொடுத்தான். அச்சமயம் கர்ணனுடைய தேரின் இடப் பக்கத்துச் சக்கரம் யுத்தகளத்தில் மண்ணில் பதிந்து சிக்கிக் கொண்டது.

''நில்! நில்! ரதத்தின் சக்கரம் இறங்கி விட்டிருக்கிறது. அதைத் தூக்கி நிறுத்தப் போகிறேன். பாண்டவனே, அதுவரையில் தாமதிப்பாயாக! நீ க்ஷத்திரிய தர்மப்படி போர் நடத்துபவன் என்று பெயர் பெற்றிருக்கிறாய். இந்தப் புகழை இழந்துவிடாதே. நீ ரதத்தின் மேல் இருந்து கொண்டு ரதமில்லாமல் தரையில் நிற்பவனாகிய என்மேல் பாணம் செலுத்துதல் தகாது. இதோ சக்கரத்தைத் தூக்கித் திருப்புகிறேன். அதுவரையில் போரை நிறுத்து'' என்றான்.

கர்ணன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணன், ''கர்ணனே, தருமம் என்பது உனக்கும் நினைவுக்கு வருகிறதா? கஷ்டம் நேரிட்டபோதல்

லவா நீ தருமத்தைச் சிந்திக்கிறாய்? நீயும் துரியோதனனும் துச்சாதனனும் சகுனியும் திரௌபதியைச் சபைக்கு இழுத்தீர்களே, அப்போது ஏன் தருமம் என்பது நினைவிருக்கவில்லை? சூதாட்டச் சாமர்த்தியம் தெரியாத தருமபுத்திரனை ஏமாற்றினீர்களே! அப்போது உன்னுடைய தருமம் எங்கே போய் மறைந்தது? பிரதிக்ஞைப்படி பன்னிரண்டு வருஷங்கள் வனவாசமும் பதின்மூன்றாம் ஆண்டு அஞ்ஞாதவாசமும் முடிந்தபோது யுதிஷ்டிரனுக்குச் சேர்ந்த ராஜ்யத்தைக் கொடுக்க மறுத்தது தர்மமா? அப்போது உன் தர்மம்



எங்கே ஒளிந்திருந்தது? பீமனை விஷமிட்டுக் கொல்லப் பார்த்த பாபிகளுடன் சதி செய்தாயே? அரக்கு மாளிகையில் தூங்கியிருந்தபோது குந்தி புத்திரர்களைச் சுட்டுக் கொல்லப் பார்த்தாயே? அப்போது தருமம் எங்கே போயிற்று? திரௌபதியை அநியாயமாக அவமதித்து அக்கிரமம் செய்த காலத்தில் பார்த்துக் கொண்டிருந்து சிரித்து சந்தோஷித்தாயே, அப்போது தருமம் உனக்கு என்ன சொல்லிற்று? 'உன் புருஷர்கள் உனக்கு உதவவில்லை. வேறு புருஷனைத் தேடிக்கொள்' என்று பதிவிரதைக்கு உன் நாக்கால் சொன்னாயே, அப்போது தருமம் எங்கே போயிற்று? பாலனான அபிமன்யுவை வெட்கமில்லாமல் பலரும் சூழ்ந்து கொண்டு கொன்றீர்களே, அப்போது உன் தரும நினைவு எங்கே போயிற்று? கர்ணனே! பாவியே! தருமத்தை ஏன் இழுக்கிறாய்?'' என்றான்.

கிருஷ்ணன் இவ்வாறு சொல்லக் கர்ணன் தன் தலையைக் குனிந்து பதில் சொல்லாமல் மௌனமாகப் பூமியில் அழுந்தி நின்ற தேரின் மேல் நின்றே போரைத் தொடர்ந்தான். ஓர் அம்பு அர்ச்சுனனைத் தாக்க, அவன் சிறிதளவு அசைந்தான். அந்தச் சமயத்தை உபயோகித்துக் கர்ணன் தேரினின்று கீழே குதித்துச் சக்கரத்தைத் தூக்கப் பார்த்தான். தெய்வத்தால் கைவிடப்பட்ட கர்ணன் எவ்வளவு முயன்றும் சக்கரம் மேலே எழும்பவில்லை.

அப்போது கர்ணன் தான் பரசுராமரிடம் கற்றிருந்த அஸ்திரங்களை நினைவுக்குத் தந்துகொள்ளப் பார்த்தான். சாபத்தால் எல்லாம் மறந்துபோய் விட்டன.

'' அருச்சுனனே! தாமதிக்க வேண்டாம். பாபியாகிய இந்தப் பகைவனு

டைய தலையை வெட்டும்படியான அம்பைச் செலுத்து'' என்று அருச்சுனனை மாதவன் தூண்டினான்.

''பிரபுவின் அந்த வார்த்தையை மதித்து அருச்சுனன் சூத புத்திரனுடைய தலையை அம்பால் சேதித்தான்'' என்கிறார் வியாசர். தரும விரோதமாக நடந்த இந்தக் காரியத்தை அருச்சுனனுடைய பொறுப்பாகவே விட்டுவிடக் கவிக்கு மனம் வரவில்லை. பகவான் கண்ணனுடைய செயலாகவே வைத்து எழுதுகிறார். மண்ணில் பதிந்து விட்டிருந்த தன்னுடைய தேர்ச் சக்கரத்தைத் தூக்கிக் கொண்டிருந்த சமயத்தில் கர்ணனைக் கொல்லச் செய்தது அக்காலத்து யுத்த தர்மத்துக்கு முற்றிலும் விரோதம். அந்தப் பாரத்தைச் சுமக்கப் பகவானைத் தவிர வேறு யாரால் முடியும்?

தர்மத்துக்காகச் செய்யும் போரிலும் அதர்மங்கள் நடந்தேதான் தீரும். தேக பலத்தைச் செலுத்தி நடத்தும் போரின் மூலம் அதர்மங்களையும் அக்கிரமங்களையும் அடக்கலாம் என்று ஆசைப்பட்டுச் செய்யும் எத்தனங்கள் எல்லாம் வீண்.

93. துரியோதனன் முடிவு

கர்ணன் யுத்தத்தில் கொல்லப்பட்டதை அறிந்ததும் துரியோதனன் தீராத சோகத்தில் மூழ்கினான். துரியோதனனுடைய நிலைமையைப் பார்த்துப் பரிதாபப்பட்ட கிருபர் சொல்லலானார் :

''ராஜ்யத்தில் ஆசை வைத்து அதற்காகச் செய்ய வேண்டிய காரியங்களின் பெரும் பாரத்தை யார் மேல் வைத்தோமோ அவர்கள் அதைச் சந்தோஷமாகவே வகித்து யுத்தத்தில் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்து மேலுலகம் ஏகியும் விட்டார்கள். இப்போது நீ செய்ய வேண்டியது ஒன்றே. பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொள்வதே உன்னுடைய கடமை. அரசனே! வேண்டாம் இனிப் போராட்டம்'' என்றார்.

நிராசையான நிலையி லிருந்தாலும் துரியோதனனுக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை.

''பேடித்தனத்துக்கு இது சமயமன்று. போர் செய்வதே என் கடமை. நண்பர்களும் பந்துக்களும் இறந்துவிட்ட பின் என் உயிரை நான் காப்பாற்றிக் கொண்டு தப்பித்துக் கொள்ளவா? அப்படிச் செய்தேனானல் உலகம் என்னை நிச்சயமாக இகழும். இகழப்பட்டும் பிழைப்பது எந்தச் சுகத்தை அநுபவிக்க? சகோதரர்களும் பந்துக்களும் மாண்டு விட்ட பின் ராஜ்யத்தைச் சமாதானத்தின்பேரில் காப்பாற்றிக் கொண்டு நான் என்ன அனுபவிக்கப் போகிறேன்?''

இவ்வாறு துரியோதனன் சொன்னதைப் படை வீரர்கள் அனைவரும் பாராட்டினார்கள். துரியோதனன் சொல்லுவது சரியான வார்த்தை என்று ஆமோதித்தார்கள். அதன்மேல் எல்லோரும் யோசித்துச் சல்லியனைச் சேனாதிபதியாக அமைத்தார்கள். சல்லியன் மகா பலசாலி. அவன் பராக்கிரமம் உயிரிழந்த தலைவர்களுக்குக் குறைந்ததல்ல. அவன் தலைமையின்கீழ் பலத்த யுத்தம் மறுபடியும் தொடங்கிற்று.

பாண்டவர்கள் பட்சத்தில் இப்போது யுதிஷ்டிரன் முழு பாரமும் வகித்தான். அவனே நேரில் சல்லியனைத் தாக்கினான். அதுவரையில் சாந்தமே உருக் கொண்டவனாக விளங்கிய யுதிஷ்டிரன் இப்போது சினங்கொண்டு கோர யுத்தம் நடத்தியது வியப்பாக இருந்தது. வெகு நேரம் சமயுத்தம் நடந்த பின் யுதிஷ்டிரன் சல்லியன் மேல் சக்தி ஆயுதத்தை வீசினான். திருவிழாவில் உயர்த்திய துவஜஸ்தம்பத்தைப் போல் சல்லியன் உயிரிழந்து கீழே விழுந்து கிடந்தான்.

சல்லியனும் இறந்து போனான். இனி ஒரு விதப் பலமும் இல்லை என்று கௌரவப் படை மனக் கலக்கம் அடைந்தது. ஆயினும் எஞ்சிய திருதராஷ்டிர புத்திரர்கள் ஒன்று சேர்ந்து பீமனை நான்கு பக்கத்திலிருந்தும் தாக்கினார்கள். அவ்வளவு பேரையும் பீமன் கொன்றான். பதின்மூன்று வருஷங்கள் கோபத்தால் உள்ளம் வெந்த வாயு புத்திரன் 'இன்றுதான் வாழ்க்கைப் பயனை அடைந்தேன்' என்று எண்ணி மகிழ்ச்சி யடைந்தான்.

★ ★ ★

அதன் பின் சகுனி சகதேவனைத் தாக்கினான். கூரிய எஃகு அம்பு ஒன்றைச் சகதேவன் குறி வைத்து, ''மூடனே! நீ செய்த பாபத்தின் பலனை இப்போது அடைவாய்'' என்று சொல்லிச் சகுனியின் தலை அறுபட்டுக் கீழே விழும்படி எய்தான். கௌரவர்களின் பாபங்களுக்கெல்லாம் மூலமாய் இருந்த

தலையானது அறுபட்டு விழ்ந்தது என்கிறார் முனிவர்.

துரியோதனன் ஒருவன் தவிர எல்லாரும் மாண்டு விட்டார்கள். சேனையின்றி, ரதமின்றி, பரிதாப நிலையில் இருந்த அந்த வீரன், கதாயுதத்தை எடுத்துக் கொண்டு பாதசாரியாகத் தன்னந்தனியனாக ஒரு தண்ணீர் மடுவை நோக்கிச் சென்றான். ஒரு மடுவைக் கண்டான். குளிர்ந்த தண்ணீரில் இறங்கினால் உடலின் வெப்பம் தணியும் என்று மடுவில் இறங்கி நின்றான்.

''மகா பிராக்ஞரான விதுரர் என்ன நடக்கும் என்பதை முந்தியே கண்டு சொன்னார்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அந்த மடுவில் இறங்கினான்.

காலம் தவறிய பிறகு அறிவு தோன்றினாலும் ஒரு பயனும் இல்லை. செய்த கருமங்களின் விளைவை அனுபவித்தே தீரவேண்டும்.

★ ★ ★

துரியோதனனைத் துரத்திக்கொண்டு அங்கு யுதிஷ்டிரனும் அவன் தம்பிகளும் வந்து சேர்ந்தார்கள்.

''துரியோதனா! குலத்தையும் குடும்பத்தையும் நாசம் செய்துவிட்டுத் தண்ணீரில் மறைந்து ஒளிந்து கொண்டு உயிர் தப்பப் பார்க்கிறாயா? உன்னுடைய மானமும் தன்மதிப்பும் எங்கே போயிற்று? வெளியே வந்து யுத்தம் செய். க்ஷத்திரியனாய்ப் பிறந்தாய். யுத்தத்தினின்றும் தப்பிப் பிழைக்கப் பார்க்காதே'' என்றான் யுதிஷ்டிரன்.

அப்போது துரியோதனன் மிகவும் வருத்தப்பட்டு, ''என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கல்ல நான் இவ்விடம் வந்தது. பயத்தால் நான் இவ்விடம் வந்தேன் என்று எண்ணாதீர்கள். என் உடலின் சிரமத்தைத் தீர்த்துக் கொள்ளத்தான் வந்து இங்கே குளிர்ந்த தண்ணீரில் இறங்கி நிற்கிறேன். ஓ! யுதிஷ்டிரனே! எனக்குப் பயமும் இல்லை; உயிரைப் பற்றி ஆசையும் இல்லை. ஆயினும் இப்போது யுத்தத்தில் மனம் செல்லவில்லை. என்னைச் சார்ந்தவர்கள் அனைவரும் மாண்டார்கள். ராஜ்ய பதவியில் எனக்கு இருந்த விருப்பம் தீர்ந்தது. இந்த உலகம் உனதே; கவலையின்றி நீயே அனுபவிப்பாயாக'' என்றான்.

''ஊசி முனை நிலமும் இல்லையென்று அந்த நாளில் நீ சொன்னாயல்லவா? சமாதானத்தை விரும்பி நாங்கள் கெஞ்சிக் கேட்ட காலத்தில் இல்லை என்ற நீ இப்போது எல்லாம் எடுத்துக் கொள் என்கிறாய். நீ செய்த பாபங்களை யெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டுமா? நீ எங்களுக்கு இழைத்த தீங்குகளும் திரௌபதிக்கு இழைத்த அவமானமும் உன் உயிரைக் கொண்டுதான் தீரும்'' என்றான் தரும புத்திரன்.

ச ஞ் ச ய ன் திருதராஷ்டிரனுக்குச் சொல்லுகிறான்: ''இந்தக் கொடிய வார்த்தைகளை யுதிஷ்டிரன் வாயால் கேட்டதும் உன் மகன் துரியோதனன் கதாயுதத்தைத் தூக்கிக் கொண்டு தண்ணீரில் எழுந்து நின்றான்.''

★ ★ ★

எழுந்து நின்ற துரியோதனன், ''வாருங்கள், ஒருவர் பின் ஒருவராக வாருங்கள். நான் தனியாக இருக்கிறேன். நீங்கள் ஐவரும் ஒன்று கூடி என்னைத் தாக்குவது நியாயமன்று. என் தேகத்துக்குக் கவசமும் இல்லை. ஓய்ந்து போயிருக்கிறேன். உடம்பில் பல இடங்களில் காயம் அடைந்திருக்கிறேன்'' என்றான்.


இதற்கு யுதிஷ்டிரன், ''ஒருவனைப் பலர் சேர்ந்து எதிர்ப்பது தவறானால் அபிமன்யு எவ்வாறு இறந்தான்? உன் சம்மதம் பெற்றல்லவோ பலரும் சேர்ந்து அநியாயமாக அவனைக் கொன்றார்கள்? தங்களுக்குக் கஷ்டம் நேரிட்ட போது எல்லாரும் தரும சாஸ்திரம் எடுத்து ஓதுவார்கள். மடுவை விட்டு வெளியே வந்து கவசம் தரித்துக்கொள். எங்களுக்குள் யாரையேனும் ஒருவனைத் தேர்ந்து அவனுடன் யுத்தம் செய். இறந்து சுவர்க்கம் செல். அல்லது வென்று அரசனாக இருப்பாய்'' என்றான்.

அதன்மேல் பீமனுக்கும் துரியோதனனுக்கும் யுத்தம் நடந்தது. அவர்களுடைய இரு கதாயுதங்களும் ஒன்றையொன்று தாக்கியபோது நெருப்புப் பொறிகள் பறந்தன. வெகு நேரம் யுத்தம் நடந்தது.

பார்த்துக் கொண் டிருந்தவர்கள் அந்த இருவரில் யார் வெல்வார்கள் என்று பேசிக் கொண்டிருந்தனர். துரியோதனனுடைய துடைகளைப் பிளந்து பீமன் தன் பிரதிக்ஞையைப் பூர்த்தி செய்வான் என்று கண்ணன் கூறியது பீமனுக்குக் கேட்டது. சிம்மம் பாய்வது போல் பீமன் துரியோதனன் மேல் பாய்ந்தான். பாய்ந்து கதையை ஓங்கித் துரியோதனனுடைய துடையின் மேல் பலமாக அடித்தான்.


துரியோதனன் வீழ்ந்தான். வீழ்ந்து கிடந்த துரியோதனனுடைய தலையைக் காலால் துவைத்துப் பீமன் கூத்தாடினான்.

(தொடரும்)



இப்படியும் நடக்கலாமே!





கொறிப்பதற்குக் கொஞ்சம்



'தமிழின் பொற்காலம்' என்று சொல்லப்படுகிற காலம் ஒன்று தமிழ் நாட்டில் நிலவியது. சாலைகளில் பஸ்களுக்குப் பதில் பேருந்துகளும், சைக்கிள்களுக்குப் பதில் ஈருருளிகளும் இயங்கித் தமிழ் மணம் பரப்பி வரும் வேளையிலே, பொல்லாத பஞ்சம் ஒன்று மெள்ளத் தலைகாட்டியது. அது வரப் போகிறது என்பதை அறிந்தவுடனேயே, தமிழகத்தின் தலைநகரமான சென்னைப் பட்டினவாசிகள் பீதியடைந்தார்கள். ஏனென்றால் அந்தப் படுபயங்கரமான குடிதண்ணீர்ப் பஞ்சம் வருவதற்கு முன்னாலேயே அவர்கள் வீட்டுக் குழாய்களிலெல்லாம் சொட்டுச் சொட்டாகத்தான் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பஞ்சம் வேறு வந்துவிட்டால் கேட்க வேண்டியதில்லையல்லவா?....

தண்ணீருக்குத் தட்டுப்பாடு வரப் போகிறது என்றவுடனேயே மாநகராட்சிக்காரர்கள் முதல் காரியமாகத் தெருக் குழாய்களை அடைத்து மூடினார்கள். அதனால் குழாயடிச் சண்டைகளைத் தவிர்த்த பெரும் பெயரை அவர்களால் தட்டிக் கொண்டு போக முடிந்தது.

காவேரியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் பிரச்னை வருடத்துக்கு ஒரு முறை — கோடைகாலத்தில் — தலைகாட்டுவது வழக்கம். அதன்படியே இப்போதும் தலைகாட்டியது. 'அந்தப் பிரச்னை எங்கேயும் போய்விடவில்லை; பத்திரமாகத்தான் இருக்கிறது' என்று கண்டு கொண்டு மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்ட அதிகாரிகள், அத்துடன் திருப்தியடைந்து, பழையபடி அதைக் கிடப்பில் போட்டுவிட்டு மற்ற வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினர்.

''கையிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவார்களா யாரேனும்? பக்கத்திலேயே சமுத்திரம் இருக்கும்போது குடிதண்ணீர்ப் பஞ்சத்துக்குப் பயப்பட

வாமோ? கடல் நீரைக் குடிநீராக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்' என்று சிலர் சொன்னார்கள். இதைப் பதினைந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேறப் போகும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து விடத் தயாராக இருப்பதாகத் திட்டக் கமிஷன் தெரியப்படுத்தியது.

உடனடித் தேவைகளுக்கு வேறு யோசனைகளை அமுலாக்க வேண்டுமே என்ற கருத்தில் வெளியூர்களிலிருந்து சென்னை நகருக்கு வருபவர்கள், தம்முடைய தேவைக்கான தண்ணீரையும் கொண்டு வரவேண்டும் என்று தமிழக அரசு அவசரச் சட்டம் ஒன்று பிறப்பித்தது. அப்படித் தண்ணீர் கொண்டு வராதவர்களை நகர் எல்லையிலேயே திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று கண்டிப்பாக உத்தரவு போட்டது. வருடந் தவறாமல் கோடை விடுமுறைக்குச் சென்னையில் வந்து முகாம் போடும் உறவினர்களைக் கொண்ட மத்தியதரக் குடும்பத்தினர் இந்த உத்தரவினால் விருந்தாளிகள் தொல்லை நீங்கிச் சந்தோஷமாக இருந்தார்கள்.

சென்னை நகரவாசிகள் தண்ணீரை வீணாக்கக் கூடாது என்பதற்காகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 'குளியல் கண்ட்ரோல் ஆர்டர்' என்பதும் ஒன்றாகும். அதன்படி, ஒரு வாரத்தில் ஒரு நபர் மூன்று நாளைக்கொரு தரம் மட்டுமே குளிக்கலாம் என்றாயிற்று. பெரியார் ஈ.வெ.ரா.வும், குளியல் விரோதிகளும், குழந்தைகளும், பவுடர் — ஸெண்ட் வியாபாரிகளும் இத்தகைய ஓர் உத்தரவைப் பிறப்பித்ததற்காக அரசாங்கத்திடம் மீளாத காதல் கொண்டார்கள்.

தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழிப்பவர்களுக்குச் 'சிக்கன திலகம்' என்ற பட்டத்தைத் தமிழக அரசு வழங்கிக் கௌரவித்தது.

தண்ணீர்ப் பஞ்சத்தைச் சமாளிப்பதற்காகப் பல யோசனைகளைத் தண்ணீர் பட்டபாடாகப் பத்திரிகைகளில் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் பலர் தெரிவித்தார்கள். அவற்றில் சில :

1. தண்ணீருக்குப் பதில் 'ஐஸை' உபயோகிப்பது.
2. வெள்ளரிக்காய், பூசணிக்காய், தக்காளி — இவற்றிலிருந்து தண்ணீர் பெற முடியுமா என்று ஆராய்ச்சி நடத்துவது.
3. ஹைட்ரஜனையும் ஆக்ஸிஜனையும் பெருமளவில் உற்பத்தி பண்ணி, அவற்றை 2 : 1 என்ற விகிதத்தில் கலந்து தண்ணீர் 'உண்டாக்குவது'.

இவற்றுக்கிடையில் அண்டை மாநிலங்களிலிருந்து குடி தண்ணீர் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எந்தத் திட்டமும் நாளாகுமென்று தோன்றியதால், கேரள அரசின் யோசனையை மட்டும் ஏற்று அமுல் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, தண்ணீரைச் சாக்குப் பைகளில் அடைத்து, லாரிகள் மூலமும் இரயில் வண்டிகள் மூலமும் சென்னைக்குக் கொண்டு வரவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. 'இது என்ன! எங்குமே கேள்விப்படாத அதிசயமாக இருக்கிறதே!' என்று பொதுஜனங்கள் வியந்து கொண்டிருக்கும்போதே, இலட்சக்கணக்கில் இளநீர்க் காய்கள் கேரளத்திலிருந்து சென்னையில் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து 'இளநீர் ரேஷன்' முறை புகுத்தப்பட்டது. குடும்பக் கார்டுகளில் இளநீர் ரேஷன் அளவும் குறிக்கப்பட்டு, கடைகள் மூலம் இளநீர்க் காய் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் சர்க்கார் இயந்திரம் ஆமை வேகத்தில் இயங்கிய காரணத்தால், பொதுமக்கள் கடைக்குப் போய் ரேஷனை வாங்குவதற்குள் அத்தனை காய்களிலும் இளநீர் வற்றிப் போய்க் கொப்பரைதான் மிஞ்சியிருந்தது !

கோபம் கொண்டு மக்கள் கிளர்ந்தெழுவதற்குள், கோடை மழையின் காரணமாகப் புழலேரியில் தண்ணீர் நிரம்பி விடவும், சென்னை நகரத் தண்ணீர்ப் பிரச்னைக்கும் ஒரு முடிவேற்பட்டது!

போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் சில வருடங்கள் கழித்து வரப்போகிற சரித்திர ஆசிரியர்கள் நம்முடைய தண்ணீர்ப் பஞ்சத்தைப் பற்றி இப்படித்தான் எழுதுவார்கள் போலிருக்கிறது!

— எஸ். வி. ஆர்.

திரு ஏ. என். சட்டநாதன்
(ஓய்வுபெற்ற கஸ்டம்ஸ் கலெக்டர்)


நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் படித்த இளைஞர்கள் நாடியது அரசாங்க வேலையைத்தான். அதில் சம்பளம் கூட; கௌரவமும் அதிகம். அப்படி வேலை பெற்று விட்டால் அதை ஒரு சாதனையாக நினைத்த சமூகம். போட்டி ரொம்ப அதிகம். ஐ.ஸி.எஸ். என்றால் இந்தியா முழுவதிலுமாக ஒரு பத்துப் பேருக்குத்தான் ஒரு வருஷத்தில் வாய்ப்பு. இதர ஆல்-இந்தியா சர்வீஸ் எல்லாமாகச் சேர்ந்து ஒரு பத்து இருக்கும். அதனால் உண்மையிலேயே தரமான பேர்தான் இதைச் சாதிக்க முடிந்தது.

அப்போது அரசாங்க இலாகாக்களின் தலைவர்கள், செக்ரட்டரிகள் போன்ற பதவி வகித்தவர் பெரும்பாலும் ஆங்கிலேயர். பெரிய உத்தியோகஸ்தர்கள் 'துரை மாதிரி' இருந்தாக வேண்டிய சூழ்நிலை.

உத்தியோகஸ்தர்களுக்கு அபார சுதந்திரம் இருந்தது. அவர்கள் போக்கை மேலதிகாரிகள் சந்தேகப்பட்டதில்லை. மேல் மட்டத்தில் ஊழலா? அபூர்வம். நூற்றுக்கு ஒன்று என்றாலே அதிகம்.


வியாபாரிகளிடமும் பணக்காரப் பிரபுக்களிடமும் உயர் நிர்வாகிகள் ரொம்ப மரியாதை காட்டியிருக்க

நிர்வாக இயந்திரம்



மாட்டார்கள். ஆனால் நியாய உணர்ச்சியுடன் நடந்து கொண்டிருந்திருப்பார்கள்.

பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு காண்பது சகஜம். சிவப்பு நாடா குறைவு. சட்டப்படி தமக்கு இருந்த அதிகாரங்களை நிர்வாகிகள் தைரியமாகப் பயன்படுத்தினார்கள். பொறுப்பு ஏற்றுக் கொள்ளப் பழக்கப்பட்டவர்கள் அவர்கள்.



அப்போது ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்கள் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் சின்னமாக இருந்தார்கள். அதற்காகத் தனிப் பயிற்சி அளிக்கப்பட்டது. இங்கிலாந்திலே ஆங்கில மாணவர்களுடன் சேர்ந்து படிப்பு. நடைமுறையில், பழக்க வழக்கங்களில், சிந்தனைப் போக்கில் கூட இங்கிலீஷ்காரனாக இருக்கப் பழக்கினார்கள். நாட்டு நிர்வாகத்தைத் திறமையுடன் சிக்கல் இல்லாமல் நடத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நாட்டு மக்களால் அவ்வளவு விரும்பப்படவில்லை.

'வெல்பேர் ஸ்டேட்' என்ற எண்ணமே தோன்றாதகாலம் ஆதலால், நிர்வாகிகள் வேறு விதமாக நடந்து கொண்டார்கள். மக்களை, தகப்பன் பிள்ளையை அடக்குவது போல நடத்தும் முறையை 'மா-பாப் ஆட்சி' என்றார்கள்.

சர்வீஸ் சலுகைகள் அப்போது அதிகம் இல்லை. பென்ஷன்தான். ஒரு உத்தியோகஸ்தன் பதவிக்காலத்தில் மரணமடைந்து விட்டால் அவன் குடும்பம் சரிந்துவிடும். வைத்தியச் செலவு என்று உண்டா? சொந்த ஊர் போய் வரப் பயணச் செலவு உண்டா?

ஐ.ஸி.எஸ். வர்க்கம் மட்டும் பெற்ற சலுகை அதிகம். இதுபோல ஆங்கிலோ-இந்தியர்களுக்குக் கட்டாய பிராவிடெண்ட் நிதி வசதி செய்யப்பட்டிருந்தது.

ஒரு பியூனுக்குப் பத்து ரூபாய் சம்பளம். அதிகப்படியாக ரூபாய் 4000 வரை சம்பளம் வாங்கிய உத்தியோகஸ்தர்களும் இருந்தனர். இருபத்திரண்டு வயது அளவில் ஐ. ஸி. எஸ். தேர்ச்சி பெற்று வந்தால் ரூ. 450ல் உத்தியோகம் தொடங்கும்.

பிரமாதமாக இங்கிலீஷ் எழுதுபவர்கள் இருந்தனர். 'ஆர்டர் பாஸ் பண்ண அழகான இங்கிலீஷ் வேணுமா?' என்று கேட்கலாம். வெறும் நிர்வாகக் குறிப்புகள் என்றாலும் இலக்கிய மணம் கமழும்படி நோட்ஸ் எழுதியவர்கள் உண்டு. அது காரணமாகவே முன்னுக்கு வந்தவர்களும் உண்டு. இது ஒரு 'மெண்டல் டிஸிப்ளின்' என்பேன். இப்படித்தான் உடை விஷயத்திலும். நன்றாகப் பாலிஷ் போட்ட ஷூ, டை, கோட் என்றெல்லாம் அணிந்தால், மற்றவர் தரும் மரியாதை இருக்கட்டும், நமக்கு

நாமே கொடுத்துக்கொள்ளும் மரியாதையும் கூடுகிறது. பழுப்பு பாண்ட் போட்டு, கறுப்பு ஷூ அணிந்தால் வெள்ளைக்கார துரை ஒன்றும் சொல்ல மாட்டார். காலே ஒரு கணம் உற்றுப் பார்ப்பார். அது போதுமே!

திரு கே. எஸ். ராமகிருஷ்ணன்

ஐ.ஏ.எஸ்.

ஆந்திரமும் அடங்கிய பரந்த சென்னை ராஜதானியில் சுமார் முப்பது கோடியாக இருந்த பட்ஜெட் தமிழ்நாட்டில் மட்டும் 220 கோடியாக உயர்ந்திருக்கிறது என்னும் போது இவ்வளவு விரிந்த பொறுப்பை நிர்வகிக்க எத்தனை அதிகாரிகள் தேவை! ஒரு காலத்தில் அரசாங்கப் பொறுப்பு என்றால் நிலவரி வசூலும், சட்ட ஒழுங்குப் பிரச்னையைச் சமாளிப்பதும்தான். திட்டங்கள், அதனால் அரசு ஈடுபட்டு வரும் புதுப் புதுத் துறைகள் — இவற்றால் நிர்வாகத்துக்கான வாய்ப்புகள் பெருகிவிட்டன. 'பொதுநல' நிர்வாகத்தின் தேவைகளைக் கவனிக்கும் பொறுப்பு ஏற்றுள்ள அதிகாரிகளில் முக்கியமானவர்கள் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்.

சுதந்திரம் வந்த புதிதில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் முப்பது பேருக்கும் குறைவாகவே ஐ.ஏ.எஸ்.ஸுக்குத் தேர்ந்தெடுக்கப்



பட்டனர். இந்தத் தொகை படிப்படியாக வளர்ந்து இப்போது 150ல் நிற்கிறது.

சமீப காலம் வரை ஐ. ஏ. எஸ்.ஸுக்கு இருந்து வந்த கவர்ச்சி தற்பொழுது ஓரளவு குறைந்து வருவதாகவே தோன்றுகிறது. இதற்குப் பல காரணங்கள். பத்து வருஷங்களுக்கு முன்புவரை 25 வயதுக்கு உட்பட்ட படித்த இளைஞனுக்கு ரூ. 400 என்ற அதிகமான ஆரம்பச் சம்பளமும் பொறுப்பான பதவியும் கிடைத்தது ஐ. ஏ. எஸ்.ஸில் மட்டும்தான். தனியார் துறை கம்பெனிகள் சிலவற்றிலும் புத்திசாலிகளான இளைஞர்களுக்கு இதே அளவு ஆரம்பச் சம்பளத்தில் நிர்வாகப் பயிற்சியும் பொறுப்புள்ள பதவியும் கிடைக்கத் தொடங்கின. இன்றோ இக்கம்பெனிகள் ரூ. 1200 வரை ஆரம்பச் சம்பளம் வழங்க முன்வருகின்றன. இன்று காலை கூட இப்படி ஒரு விளம்பரம் வந்திருக்கிறது. ஐ.ஏ.எஸ்.ஸிலோ ஆரம்பச் சம்பளம் இன்றும் அதே நானூறுதான்.

நிர்வாகப் பதவியின் மீது கவர்ச்சி குறைவதற்கு மற்றொரு காரணம் விஞ்ஞான, தொழில் கல்வி வளர்ச்சி. கெட்டிக்கார இளைஞர்கள் அரசாங்க வேலையில் அக்கறை காட்ட முடியாத ஒரு நிலை நாட்டுக்கு நல்லதல்ல.

இது நமக்கு மட்டும் பிரச்னையல்ல. வெளிநாடுகளிலும் உணரப்படுகிறது. இது தவிர்க்க முடியாததாக இருக்கலாம். ஆனால் நாளடைவிலாவது, வெளியே தனியார் துறையில் இயங்கும் சிறந்த அறிவுத் திறனை அரசு பயன்படுத்திக் கொள்ள முயலலாம். இப்படித்தானே ஃபோர்ட் மோட்டார் கம்பெனியிலிருந்து மெக்னமாராவைக் கென்னடி பாதுகாப்பு நிர்வாகத்துக்கு அமர்த்தினார்? இங்கும் அவ்வாறு நேரும் காலம் வரலாம்.


நிர்வாகப் பயிற்சி பெற்ற ஐ. ஏ. எஸ். போன்ற ஒரு 'ஜெனரலிஸ்ட் அட்மினிஸ்ட்ரேடர்' — எந்த இலாகாவிலும் திறமையுடன் தலைமைப் பதவி வகிக்க முடியும் என்பதே இதுவரை உள்ள பொதுவான அபிப்பிராயம். இதுவும் மாற வேண்டிய அவசியம் ஏற்படலாம். எல்லாமே 'டெஸ்க் — ஒர்க்' இல்லை. வியாபார ரீதியில் நடைபெறும் துறைகளும் உண்டு; பல்லாயிரம் ஆட்களைக் கட்டி மேய்க்கும் பொறுப்புகளும் உண்டு. அததற்கு உரிய மனப்பாங்கோடு விசேஷப் பயிற்சியும் பெற்ற நிர்வாகிகள்தான் தேவை என்ற நிலை வரும் பொழுது, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் மட்டுமின்றி மற்றவர்களுக்கும் தலைமைப் பதவிகளை அளிக்க அரசு தயாராக இருக்க வேண்டும். இந்நிலை தோன்றவிட்டாலோ அந்தந்தத் துறையில் அநுபவம் நிறைந்த நிபுணர்கள், தாம் என்றுமே தலைமைப்பீடத்தில் அமர முடியாதோ என்று தாபம் கொள்வது சகஜம்.

நிர்வாக அமைப்பு நமக்கு யாரிடமிருந்து வந்ததோ, அந்த இங்கிலாந்தில் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்வாகச் சீர்திருத்தம் பற்றி ஆராய்ச்சி நடத்துவதும், அதனால் கண்ட முடிவுகளைச் செயல்படுத்துவதும் வழக்கம்.

இத்தகைய ஆராய்ச்சி ஒன்று நடத்திய லார்ட் ஃபுல்டன் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த போது சிந்தனைக்குரிய கருத்தொன்று தெரிவித்தார்: ''ஒவ்வோர் இலாகாவிலும் காரியதரிசி பதவி வகிப்பவர் அந்தத் துறை அதிகாரிகளில் பதவி அநுபவம் மிக்கவராக இருக்கட்டும். ஆனால் அத்துறை அமைச்சருக்குக் கொள்கை விஷயத்தில் ஆலோசனை கூறுபவர் நாற்பத்தைந்து வயதுக்கு உட்பட்டவராகவே இருக்க வேண்டும்!''

மாற்றங்கள் மிக வேகமாக நிகழும் சமூகத்தின் எதிர்காலப் பிரச்னைகளை நன்கு புரிந்து கொள்வதும் தீர்வு காண்பதும் இன்றைய தலைமுறையினருக்குத்தான் இயலும் என்பது லார்ட் ஃபுல்டன் கூறும் சமாதானம்.


பேட்டி : **அம்பி ஆசீர்வாதம்**



நண்பர்கள் தங்கள் கால்களைக் கயிறுகளால் கட்டிக் கொண்டார்கள். முடிச்சுக்கள் இறுக்கமாக உள்ளனவா என்று பரிசோதித்து விட்டு ஆழ்கடலில் இருவரையும் குதிக்கச் சொன்னான் ஜோக்கர். கயிறுகளின் மறுமுனைகளில் இருந்த பாறைகளையும் உருட்டி விட்டு விட்டான்.
21
007 பாலு
கதை: குமரன்
படம்: விஜயா.
பாறைகள் பாலுவையும் சுரேஷையும் பாதாளத்துக்கு இழுத்துச் சென்றன.
தொலைவில் போலீஸ் போட்டில் இருந்த பார்த்தன் பதற்றமடைந்தார்.
விக்ரம்! ஆபத்து! படகைக் கிளப்புங்கள் சீக்கிரம். பாலுவுக்கு உதவப் போவோம்.
ஓ.கே. பார்த்தன்!
இதற்கிடையில் பாலு பாக்கெட்டுக்குள் கையை விட்டுப் பேனாக்கத்தியை எடுத்தான். முன்பு விமானத்தில் சந்திரனின் பெட்டியைத் திறக்க உதவிய அதே கத்தி! அவன் புத்தியைப் போலவே கத்தியும் கூர்மை!
இரண்டொரு வினாடிகளில் பாறையின் பிணைப்பிலிருந்து விடுதலை பெற்ற பாலு சுரேஷுக்கும் உதவினான்.
ஓசைப் படுத்தாதே! மேலே போ! என்று ஜாடை காட்டினான் பாலு.


அவர்கள் மேலே வந்து படகின் விளிம்பைப் பற்றியபடி இரைக்க இரைக்கச் சுவாசித்தார்கள்.
சத்தம் வராமல் படகின் மேல் ஏறி-னான் பாலு. அவனுக்கு முதுகைக் காட்-டியபடி ஜோக்கர் எதையோ குனிந்து தேடிக் கொண்டிரு-ந்தான். அவன் அறியாதவாறு அவனை நெருங்கினான் பாலு. கையில் விரிந்த கத்தி!
அசையாதே! அசைந்தால் குடலைக் குத்திக் கிழித்து விடும் கத்தி! சுரேஷ்! இவன் பாக்கெட்டுகளைச் சோதனை போட்டுத் துப்பாக்கியைக் கைப்பற்று! வேறு ஏதாவது ஆயுதங்கள் இருக்கா பார்!
துப்பாக்கி சுரேஷின் கரத்துக்கு வந்ததும் பாலு கத்தியை மடக்கினான்.
நீ தேடிக் கொண்டிருந்தது இதைத்தானே? மோட்டார் போட்டின் சாவி! எங்களுக்கு ஜல சமாதி என்று ஜோக் அடித்துச் சிரித்தாயே!.....
....இவன் அன்றைக்கு சிரித்த போது சாவியை அபேஸ் பண்ணினேன்! இது இல்லாமல் இவன் இங்கிருந்து எப்படித் திரும்ப முடியும்?
இப்போ 'ஜோக்' அடிக்க வேண்டியது நாம்தான், பாலு! இவனுடன் பேசிக் கொண்டே இருக்கச் சொன்னியே, தாத்பர்யம் இப்போ புரியுது!
தூரத்தில்.....
விக்ரம்! பாலுவும் சுரேஷும் தப்பி விட்டார்கள். நம் உதவி அவர்களுக்குத் தேவையில்லை!
வெரிகுட்! அவர்கள் உதவிதான் நமக்குத் தேவை!
நல்லவனுக்கு நல்லவனாகவும் ரௌடிக்கு ரௌடியாகவும் நடந்துக்கிறானே பாலு! பயல்!
கரைக்குத் திரும்பறாங்க போலிருக்கே! நாமும் அவர்களைப் பின் தொடர வேண்டியதுதான்!
தொடரும்.....


அமிர்தாஞ்சனம்
இதமாகவும்
துரிதமாகவும்
தலைவலியைப்
போக்கி
நிம்மதியளிக்கிறது
அமிர்தாஞ்சனம் எந்த விதத்திலும் தீங்கு செய்யாது. வலியுள்ள இடத்தில் சிறிதளவே தடவினால் போதும்.
அமிர்தாஞ்சனம் வலியைத் துரிதமாகப் போக்குகிறது. ஏனெனில் இதில் சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் உள்ளன.
அமிர்தாஞ்சனம் தடவிக் கொண்டால் இதமான நிம்மதியளிக்கிறது. ஏனெனில் இதில் மெந்தால், கற்பூரம் ஆகியவை கலந்துள்ளன.
அமிர்தாஞ்சனம் சிக்கனமானது. ஏனெனில் ஒரு பாட்டில் மருந்தை வெகுநாட்களுக்கு உபயோகிக்கலாம்.
அமிர்தாஞ்சனம் லிமிடெட்
மதறாஸ் . பம்பாய் . கல்கத்தா
புது டில்லி . ஹைதராபாத்
AMRUTANJAN
AMRUTANJAN
75
வருடங்களுக்கும்
மேலாக
புகழ்வாய்ந்தது.
AMR - 13 Tam



எண்ணம் எழுத்தாகிறது!

(இதைப் படிக்கும் தமிழ் எழுத்தாளரின் பெருமூச்சும் கேட்கிறது ; தமிழ்ப் பத்திரிகை ஆசிரியரின் ஏக்கமும் புலப்படுகிறது. என்ன செய்வது?)

பிரபல பத்திரிகைகளுக்கு, புகழ் பெற்ற கலைஞர்களைப் பற்றிக் கட்டுரை எழுதுபவர் மாரிஸ் ஸொலோடோவ். அவரது சுவையான கட்டுரைகள் வேகமாயும் எளிதாயும் படிக்க ஏற்றவை. வெகு சுலபமாக எழுதப் பட்டவை போலிருக்கும். ஆனால் அதற்குப் பின்னே உள்ள உழைப்பு இப்படிப்பட்டது:

''சாடர்டே ஈவினிங் போஸ்ட்'' வார இதழில் ஒரு முறை பக்கலோனி என்னும் ஆப்பராக் கலைஞரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஸொலோடோவ் இந்த வேலையை ஒப்புக் கொண்டு, முதலில் ஆபரா இசைக் கலை பற்றி எட்டு புத்தகங்களைப் படித்து முடித்தார்.

அடுத்து, கட்டுரையாசிரியர் மெட்ரோபாலிடன் ஆபரா தியேட்டருக்குப் போய்த் திரைக்குப்பின் காட்சிகளை ஆராயலானார். நியூயார்க் டைம்ஸ் தினத்தாள் அலுவலகத்துக்குச் சென்று அந்தப் பத்திரிகை நூலகத்தில் பக்கலோனியைப் பற்றி வெளியாகியிருந்த செய்திகளையும் விமரிசனங்களையும் படித்து முடித்தார்.

கடைசியாக, கட்டுரையாசிரியர் பக்கலோனியைச் சந்தித்தார். எட்டு முறை பேட்டி கண்டார். அவருடனே நியூயார்க்குக்கும் பாஸ்டனுக்குமாகப் பிரயாணம் செய்து அவர் மேடை ஏறி இசை நிகழ்ச்சி செய்வதைக் கவனித்தார். பக்கலோனியை நன்கு அறிந்த பத்து நபர்களையும் பேட்டி கண்டார்.

இவ்வளவெல்லாம் செய்தும் ஸொலோடோவ் உடனே கட்டுரை எழுதத் தொடங்கவில்லை. வழக்கம் போல் பல நாட்கள் கட்டுரை பற்றிய சிந்தனையாகவே இருந்து, ஒரு வார காலம் அதை மனதுக்குள் வகைப்படுத்திய பிறகு எழுதத் தொடங்கினார். மூன்று நாட்கள் உட்கார்ந்து இருபது பக்கங்களில் எழுதி முடித்தார், முதல் நகலை. பின்னர் அதைச் செப்பனிட்டார் !

''பெட்டர் ஹோம்ஸ் அண்டு கார்டன்'' பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஒருவருக்கு ஒரு நாள் தோன்றிய எண்ணம் இது : 'யுத்த காலத்தில் ஐரோப்பாவில் போரிட்ட பழைய வீரன் ஒருவன் இன்று மீண்டும் அங்கே சென்றால் — அவனது பழைய இன்ப நினைவும் துன்ப நினைவும் எப்படி எழும் ! இந்த இடைக்காலத்தில் அவனிடம் நேர்ந்த மாறுதல்களும், அந்த இடத்தில் நேர்ந்த மாறுதல்களும் எத்தனை ! நன்கு எழுதத் தெரிந்த ஒரு யுத்த வீரன் எழுதினால், ஆயிரமாயிரம் பழைய வீரர்கள் விரும்பிப் படிக்கும் ஒரு கட்டுரையாக அமையும் இது.'

ஆசிரியர் குழுவினர் இந்த யோசனையை ஏற்றனர். பழைய போர்வீரரும் எழுத்தாளரும் பாரிசில் வாழ்பவருமான டுபிட்ஸ்மன் என்பவரை இந்தக் கட்டுரை எழுதப் பணித்தனர். நிபந்தனை இதுதான் : கட்டுரைக்குச் சம்மானம் 2500 டாலர். கட்டுரையாளர் பிரயாணச் செலவு முழுதும் தரப்படும். எழுதிய பிறகு கட்டுரை ஏற்கப் படாவிட்டால் பிரயாணச் செலவும் சம்மானமாக 1000 டாலர் மட்டுமே உண்டு. கட்டுரை 5000 சொற்களில் இருக்கவேண்டும்.

கட்டுரையாளர் 10,000 சொற்கள் எழுதினால்தான் கட்டுரை பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

டிசம்பர் 15ந் தேதிக்குள் கட்டுரை கிடைக்க வேண்டும் என்று எழுத்தாளரை அவசரப் படுத்தினர். நவம்பர் மாதம் கட்டுரையாளர் பழம் யுத்தகளங்களிடையே ஒரு யாத்திரை தொடங்கினார்.

அடுத்த பத்து வார காலம் பத்திரிகைக் காரியாலயம் கட்டுரையாசிரியரைக் காணோம் என்று தவித்துக் கொண்டிருந்தது ! தந்தியும் கேபிளும் அனுப்பித் தேடியபடி இருந்தது. கடைசித் தேதிக்கு ஒரு மாத காலம் தாமதித்துக் கிடைத்தது கட்டுரை. ரோமிலே ஒரு ஹோட்டல் அறையிலே தங்கி எழுதி முடித்த கட்டுரை; எண்பத்தேழு பக்கக் கட்டுரை.

இதை முப்பத்தைந்து பக்கங்களுக்குச் சுருக்கினார்கள் ஆசிரியர்கள். எத்தனையோ நுட்பமான விவரங்களைத் தந்த கட்டுரையாளர், ஆசிரியர்கள் எதிர்பார்த்த சில முக்கியமான விவரங்களைக் கொடுக்கவில்லை. உடனே ஒரு தந்தி பறந்தது. சுருக்கக் கட்டுரையின் பிரதியும் போயிற்று, கட்டுரையாளர் சரி பார்க்க.

இப்படியாக, பிப்ரவரி மாத மத்தியில், ஏப்ரல் இதழுக்கான கட்டுரையின் டைப் பிரதி தயாராயிற்று. கட்டுரையாசிரியருக்கு, எல்லாச் செலவும் கொடுத்ததுடன், பேசியதற்கு மேல் 1500 டாலரும் அளிக்கப்பட்டதாம்.

— தம்பி சீனிவாசன்

(ஆதாரம் : 'மாஸ் மீடியா')






தயாரிப்பு:
வாண்டுமாமா

32

இது என்ன?

உலகில் ஒரே ஓர் இடத்தில்தான் இந்த விநோதமான செடி விளைகிறது. ஜாவாவிலுள்ள 'பாங்கரங்கே' என்ற எரிமலை உச்சியில் யாருமற்ற தனிமையான பகுதிகளில் — கடல் மட்டத்திலிருந்து பத்தாயிரம் அடிகளுக்கு மேலே—இந்தச் செடிகள் காணப்படுகின்றன. சுதேசிகள் இதை விதியின் மலர்ச்சி என்று அழைக்கிறார்கள். இந்தச் செடி புஷ்பித்தால் கட்டாயம் எரிமலை குமுறி வழியுமாம். அழிவை அறிவிக்கும் இதன் மலரைக் கண்டதும் ஜாவானியர் எரிமலையின் கோபத்திலிருந்து தப்பிப் பிழைக்க ஊரை விட்டே ஓடி விடுவார்களாம். வரும் பொருள் உரைக்கும் விந்தைச் செடி இது.





முத்தான முத்தல்லவோ!

இந்தப் படத்தில் ஒரே நேர்க் கோட்டில் உள்ள எந்த மூன்று முத்துக்களைக் கூட்டினாலும் 27 வர வேண்டும். அதற்கு ஏற்றபடி இந்த முத்துக்களின் மதிப்பை அவற்றுள் எழுத முடியுமா உங்களால்?


விடை: (அடுத்த இதழில்)

அல்லிராணிப் பறவை

பறக்க முடியாத பறவை. மிருகங்களின் தோலைப் போன்ற கெட்டியான உடல், ஒரு பவுண்டு நிறையுள்ள முட்டையிடும். நீண்ட மூக்கு, மூக்கின் அடியில் பூனையின் மீசையைப் போல் ரோமங்கள். இத்தனை விசித்திர அமைப்போடு ஒரு பறவை. இதன் பெயர் கிவி. இது நியூஸிலந்து நாட்டின் தேசியப் பறவையும்கூட. இதனால் பறக்க முடியாது. உடலின் அடியில் உபயோகமற்ற இறகுகள்—ரோமங்களைப் போல அமைந்திருக்கின்றன. விந்தையிலும் விந்தை இதன் மூக்குத் துவாரம் அலகின் நுனியில் இருப்பது. ஏனென்றால், தன் அலகை மூக்காகவும் பயன்படுத்துகிறது. தான் உண்ணும் ஆகாரத்தை முகர்ந்து இனம் பிரித்து அறிந்து கொள்ளும் குணமுடையது. மற்ற பறவைகளைப் போன்ற தோல் இதற்கு இல்லை. மிருதுவாக இருப்பதற்கு மாறாக ரொம்பக் கெட்டியாக, காலணிகள், கையுறைகள் செய்வதற்கு ஏற்ற வகையில் இதன் தோல் இருக்கிறது. நியூஸிலந்து மோரிகள் இப்பறவையின் தோலினால் மேலங்கி செய்து கொள்கிறார்கள், கேடயங்களை மூடித் தைக்கவும் பயன்படுத்துகிறார்கள் என்றால் பாருங்கள். இரவு வேளைகளிலேதான் இவை இரை தேடக் கிளம்பும். இந்த விநோதப் பறவை மரங்களில் கூடு கட்டுவதில்லை. உறுதியான தனது காலினாலும், அலகாலும் பூமியைத் தோண்டிக் குழி பறித்து அதில் வாழுகிறது. கிவியில் பலவகை உண்டு. பெரிய வகையில் நன்றாக வளர்ந்தது பத்தங்குல உயரமும் ஆறு பவுண்டு நிறையும் இருக்கும். பெண் கிவி முட்டையிட்டதும் பிறகு அதை எட்டியே பார்க்காது! ஆண் கிவிதான் அடை காக்கும். முட்டையிலிருந்து குஞ்சு வர எண்பது நாட்களாகும். இடையிடையே ஸ்ரீமதி கிவி ஸ்ரீமான் கிவியைக் காண வரும். கணவர் தம் கடமையைச் சரிவரச் செய்கிறாரா என்று கண்காணித்துப் போகவே இந்த விஜயம். தன் முட்டையைப் பார்க்க அல்ல. ஆண் கிவி அடை காக்காதிருந்தால் தன் அலகால் குத்தி விரட்டி அடை காக்கும்படி செய்யும்.



விந்தையல்லவோ...!



மனிதனுடைய மனம் ஒரு விந்தையான இடம். அதில் தோன்றும் ஆசைகள் பலப் பல விதமானவை. இதோ பாருங்கள் — இப்படியோர் ஆசை ஒரு மன்னருக்கு. தன் புறாக் கூண்டுகளிலிருந்து அழகிய இரண்டு புறாக்களைத் தேர்ந்தெடுப்பார். அவைகளுக்கு அரசாங்க முறைப்படி கோலாகலமாகத் திருமணம் நடத்தி வைப்பாராம். இப்படிப் புறாக்களுக்குத் திருமணம் நடத்தி வைத்து மகிழ ஒரு லட்சம் ரூபாய் வரை செலவு செய்வாராம் இந்த மன்னர். இளவரசர்களின் திருமணங்களுக்கு நிகழும் அத்தனை ஆர்ப்பாட்ட ஆரவாரக் கோலாகலங்களும் இந்தப் புறாக்களின் திருமணத்துக்கும் உண்டு. மணம் முடிந்து புதுக் குடித்தனம் நடத்தச் செல்லும் புறாக்களைப் பட்டத்து யானை மீதமர்த்தி ஊர்வலமாக அழைத்துச் செல்லுவார்கள். யானை தங்க துப்பட்டாக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். நவரத்தினங்கள் சரங்களாகத் தொங்கி ஜ்வலிக்கும். இந்தத் திருமணத்தை மன்னரே முன் நின்று நடத்துவார். சமஸ்தானத்தின் பெரிய அதிகாரிகள் அத்தனை பேருக்கும் பிரமாதமான விருந்து உண்டு. மணமக்களுக்கு விலை உயர்ந்த பரிசுப் பொருள்கள் வழங்கப்படும். அது கட்டாயமும்கூட! இப்படி வருஷத்தில் ஒரு திருமணமா? இல்லை, இல்லை! மூன்று திருமணங்களை நிகழ்த்தி மகிழ்ந்தார் இவர். யார் தெரியுமா? 1856 முதல் 1870வரை பரோடாவின் மன்னராகத் திகழ்ந்த காந்தராவ் அவர்கள் தான். இப்படி 42 புறாத் திருமணங்களை நடத்தினார் என்றால் இது விந்தையல்லவோ!

நாட்டியப் பள்ளி

பரத நாட்டியத்தின் பழைமையும் சிறப்பும் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். பாரதத்துக்கு — முக்கியமாகத் தமிழகத்துக்கு — பரதம் எப்படித் தனிச் சிறப்பு வாய்ந்த நடனமோ அப்படியே ஒவ்வொரு நாட்டுக்கும் ஒருவித நடனமுண்டு. மணிபுரி நடனம், கதக்களி, பாங்கரா இவை எல்லாம் எதைக் குறிக்கின்றன? மணிபுரி; அஸ்ஸாம், கதக்களி, கேரளா, பாங்கரா; பஞ்சாபி. இதே போல ஜப்பானியர்களுக்கு அவர்களுக்கே உரித்தானதொரு நடனம் உண்டு. அதைக் கற்றுக் கொள்ளுவது இலேசுப்பட்ட காரியமல்ல. மிகவும் கடுமையான பயிற்சிகளையெல்லாம் கடந்தாக வேண்டும், ஜப்பானிய நாட்டிய மங்கையாகத் திகழ. ஜப்பானிலே மிகப் பிரபலமான நாட்டியப் பயிற்சி நிலையம் ஸ்ரீமதி அகிகோ டாச்சிபானு நடத்தும் நடனப் பள்ளிதான். டோக்கியோவிலிருந்து இரண்டு மணி நேரப் பிரயாணத்தில் கோபாட்கா (Kobatka Pass) கணவாயில் உள்ளதோர் கான்வென்டில் இந்தப் பள்ளியுள்ளது. நடனப் பயிற்சி பெறும் மாணவி அங்குள்ள ஒரு குளிர்ந்த நீர் வீழ்ச்சியின் கீழே மணிக்கணக்காக நிற்க வேண்டும். அதன் தண்ணீர் 'ஐஸ்'வாட்டரைப் போலிருக்கும். மாணவி நீர்வீழ்ச்சியில் நிற்பதை ஒரு நடன ஆசிரியர் பார்த்துக் கொண்டிருப்பார். மாணவியை அந்த 'ஷவர் பாத்'திலிருந்து வெளியே வரச் சொல்வது எப்போது என்று அவருக்குத்தான் தெரியும். அப்படி அவர் உத்தரவு கிடைத்ததும் அவள் வெளியே வந்து அந்த நனைந்த நிலையிலேயே நடனமாட வேண்டும் — உடலில் சூடு ஏறும் வரை! அதன் பிறகு மண்டியிட்ட நிலையில் பல மணி நேரங்கள் தியானத்திலும் பிரார்த்தனையிலும் கழிக்க வேண்டும். இப்பள்ளியில் பட்டம் பெற்று வெளிவரும் நடனமணிகள் திருமதி டாச்சிபானுவின் இத்தகைய பயிற்சிகளைப் பிரமாதம் என்று புகழ்கிறார்கள். இங்கு நடனம் கற்பவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களை ஒப்பற்ற நாட்டியக்காரர்களாக்குகின்றன.



அத்தியாயம் இருபத்தொன்று

சுகுணாவின் குழப்பம்

முத்துசிவனின் தாயாருக்கு, அவன் நடத்தை பற்றிப் பிறர் சொல்லிக் காட்டிய பிறகே தான் கண்டு கொண்டதாகத் தன்னை ஏமாற்றிக் கொள்ளவும் இயலவில்லை. ஏனென்றால், மைதிலிக்குத் திருமணம் ஆன மறுவாரம் முதலே அவனிடம் ஏற்பட்டுவரும் மாறுதல்களை அவள் படிப்படியாகக் கவனித்து வருகிறாள் அல்லவா?

ஆனாலும் அதற்காக அதிகம் கவலைப் பட்டுக் கொள்ளவில்லை. ஓரளவு கவலை இருந்தாலும் அதைத் தன் மனத்தோடு பூட்டி வைத்துக் கொண்டு, அவ்விஷயமாய் மேற்கொண்டு யாரேனும் புத்தி சொல்லவோ, குறை கூறவோ வந்தால் அவர்களிடம் சற்றுக் கடுமையாகவே பேச ஆரம்பித்தாள்:

''என் பிள்ளை கண்டவர்களோடு சேர்ந்து கண்ட கண்ட இடங்களிலெல்லாம் சுற்றுகிறானா? சுற்றட்டுமே! அதனால் யார் குடியும் கெட்டுப் போகாது! காலமெல்லாம் தன் தம்பி



கிளிஞ்சல் கோபுரம்

ஜெயகாந்தன்

தங்கைகளுக்காக உழைத்துப் போட்டுத் தனக்கென்று ஒரு சுகமும் தேடிக் கொள்ளாமல் நொறுங்கிக் கிடந்த அவன் இப்போது கொஞ்சம் சந்தோஷமாகத் தான் இருக்கட்டுமே! எந்த வீட்டு ஆண் பிள்ளையானாலும் இறக்கை முளைத்து நரைக்கிற வரையில் ரொம்ப யோக்கியனாகவே இருந்தான் என்று யார்தான் அவ்வளவு நிச்சயமாகச் சொல்லிவிட முடியும்? எல்லாம் ஆடிப்பாடி ஓய்ந்தபின்தானே உபதேசம் பண்ணுகிறார்கள்! என் பிள்ளையும் நாளைக்கு அப்படித்தான் உபதேசம் பண்ணுவான்; கவலைப்படாதீர்கள்!''

ஏதோ ஏட்டிக்குப் போட்டியாக அவள் இப்படி விட்டுக் கொடுக்காமல் பேசினாலும் அவர்களின் ஒரு யோசனையை மட்டும் அவளது உள் மனம் அங்கீகரித்துக் கொள்ளவே செய்தது. 'முத்துசிவனுக்குத் திருமணம் செய்துவிட வேண்டும்' என்ற யோசனைதான் அது.

'நியாயமான யோசனை. ஆனால் இதை யார் அவனிடம் சொல்வது? நான் சொல்ல முடியுமா? இந்தப் பதினைந்து வருட காலத்தில் அவனுக்கு எந்த ஒரு காரியத்திலும் நான் யோசனை சொன்னதே கிடையாது. எனது மற்ற நான்கு பிள்ளைகளுக்கும் அவனே காலா காலத்தில் பெண்ணும் மாப்பிள்ளையும் தேடி அழகாகக் கல்யாணம் நடத்தி வைத்தவன். அந்தக் காரியங்களுக்குக் கூட நான் அவனுக்கு யோசனையோ, புத்தி மதியோ, வழிவகைகளோ சொன்னதில்லை; அவனும் என்னிடம் கேட்டதில்லை. ஆகவே, அவனுடைய கல்யாணத்துக்கு நானா யோசனை சொல்ல வேண்டும்? அவனுக்குத் தெரியாததையா நான் சொல்லி விடுவேன்? இம்மாதிரி விஷயத்தில் நூறு பேருக்கு யோசனை சொல்லக் கூடியவன் ஆயிற்றே!'

அன்னபூரணியம்மாள் தனக்குச் சரியெனப்பட்ட அந்த ஒரு விஷயத்துக்கும் இப்படிச் சில சமாதானங்களைத் தேடிப் பிரமிப்படைந்து கொண்டு அமைதியாகிப் போன நிலையில் ஒரு நாள், சுகுணாவின் தாயார் சொர்ணத்தம்மாள் திடீரென்று வீட்டுக்கு வரவே, அவளுக்கு வியப்பும் திகைப்பும் குழப்பமுமாகி விட்டன. மற்றவர்களைப் போல் இவளும் தன் பிள்ளையின் மேல் ஏதேனும் குற்றங்குறை சொல்ல வந்திருப்பாளோ என்று எண்ணித் திகைத்து போன அவள் அதைக்

கொஞ்சமும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் முகத்தில் மகிழ்ச்சியைப் பூசிக் கொண்டு வரவேற்றாள்.

காரிலிருந்து டிரைவர் எடுத்து வந்த ஒரு பெரிய வெள்ளித் தட்டை வாங்கி அன்னபூரணியம்மாளிடம் கொடுத்த சொர்ணத்தம்மாள், சற்று நேரம் கூடத்து அறையில் உட்கார்ந்து அந்நியோன்யமாகப் பேசிக் கொண்டிருந்தாள். பிறகு அவளே காப்பி கேட்டு வாங்கிப் பருகிவிட்டு விடைபெற்றுப் போய் விட்டாள்.

அவள் வந்த விஷயம் இதுதான்: திருவேற்காடுகருமாரியம்மனுக்குக் கனகசபை நேற்று விசேஷ பூஜை நடத்தி ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கினராம். அந்தப் பூஜையில் அம்மனுக்குப் படையலானதை அன்னபூரணியம்மாளுக்குக் கொடுக்கவே அவள் வந்தாளாம்.

ஒவ்வொரு வருஷமும் கனகசபை அந்த அம்மன் பூஜையை ஏக தடபுடலாக நடத்துவது வழக்கம்தான். அப்போதெல்லாம் சொர்ணத்தம்மாள் இம்மாதிரி வீடு தேடி வந்து அன்னபூரணியம்மாளுக்குப் பிரசாதம் கொடுத்து மரியாதை செய்துவிட்டுப் போனது கிடையாது. இந்தத் தடவை மட்டும் இவ்வளவு கரிசனத்தோடு அவள் வரக் காரணம் என்ன? அன்னபூரணி மெல்லச் சிரித்துக் கொண்டாள்.

'தன் பெண்ணுக்கும் என் பிள்ளைக்கும் வெகு சீக்கிரம் திருமணம் நடந்து இரு குடும்பங்களும் நெருங்கிய உறவு பூண வேண்டும் என்று அவள் அந்தக் கருமாரியம்மனிடம் பிரார்த்தனை பண்ணிக்கொண்டிருப்பாள். அதனால்தான் அம்மன் பிரசாதத்தோடு என்னைப் பார்க்க வந்தாள் போலும்.'

அன்று மாலை நான்கு மணிக்கெல்லாம் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்து



விட்டான் முத்துசிவன். வந்தனுவுடன் எங்கேயாவது கேளிக்கை நிகழ்ச்சிக்குப் போக அவன் திட்டமிட்டிருக்கலாம். அவசரம் அவசரமாகக் குளித்து வேறு உடை உடுத்திக் கொண்டு புறப்படத் தயாராஞன்.

அன்னபூரணியம்மாள் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் ஏதோ பேச்சுக் கொடுத்து அவனை நிறுத்திக் கொண்டு, சற்று முன் கனகசபையின் மனைவி வீட்டுக்கு வந்து போன விவரத்தைச் சொன்னுள். அதை அவன் காதில் வாங்குவாஞே வாங்காமலே போய்விடுவாஞே என்று எண்ணிய அவளுக்கு ஒரே வியப்பாகி விட்டது.

''அப்படியாம்மா? அவங்க என்ன சொன்னுங்க?'' என்று தன்னை மீறிய ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டே உட்கார்ந்து விட்டான் முத்துசிவன்.

உள்ளூற மகிழ்ச்சியடைந்து கொண்ட அன்னபூரணியம்மாள், ''உன்னைப் பற்றி அந்த மனுஷி ரொம்ப விசாரிச்சா தம்பி! நீ ஏன் அவங்க வீட்டுப் பக்கமே வருகிறதில்லேன்னும் கேட்டாள். பிள்ளைக்கு ஆபீஸிலே ரொம்ப வேலேன்னு சொல்லி வைச்சேன்.''

மெல்லத் தலையாட்டிக் கொண்டான் முத்துசிவன். இன்னும் என்னவோ சொல்ல எண்ணி, அதை எப்படிச் சொல்வதெனத் தெரியாமல் தயங்கிய அன்னபூரணி, 'இப்போது வேண்



டாம்' எனத் தீர்மானித்தவள் போல் தன் காரியங்களைக் கவனிக்கப் போய் விட்டாள்.


வெளியே போகப் புறப்பட்ட முத்து சிவன், 'போகலாமா, வேண்டாமா?' என்று யோசிப்பவன் மாதிரி நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டான். சற்றைக்குப் பின் சட்டென்று நிமிர்ந்து தன் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான். நாலரை ஆகியிருந்தது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் அவசரமாக எழுந்து போய் ஸ்கூட்டரில் ஏறிக் கிளம்பி விட்டான்.

பெண்கள் உயர்நிலைப் பள்ளியொன்றிலிருந்து தன் சக ஆசிரியைகள் ஐந்தாறு பேர்களுடன் வெளியே வந்த கருணா சற்றுத் தூரம் அவர்களோடு பேசிக் கொண்டு சென்ற பின், வேறொரு சாலையில் தனியே திரும்பி, அருகிலிருந்த பஸ் நிலையத்தை நோக்கி நடந்தாள்.

அவளுக்குச் சொந்தக் கார் உண்டு என்றாலும் பள்ளிக்கு பஸ்ஸில் வந்து போவதையே வழக்கப்படுத்திக்கொண்டிருந்தாள். இது தவிர உடை உடுத்துவதிலும், நகை நட்டுகள் அணிவதிலும் கூட மிக எளிமையையே கடைப்பிடித்தாள். எவ்வளவுதான் பணம் காசு இருந்தாலும் ஒருவர் செய்யும் தொழிலுக்குப் பொருத்தமில்லாத ஆடையணிகளையும், போக்குவரத்து சாதனங்களையும் உபயோகப்படுத்தித் தம் சகாக்களின் சராசரி அந்தஸ்து நிலையிலிருந்து தனித்துப் போய்த் தம்மை உயர்த்திக் காட்டிக் கொள்வது அநாகரிகம், அசட்டுத்தனம், பண்பறியாமை என்பதாலேயே அவள் அவ்வாறு நடந்து கொண்டாள். அத்துடன் இப்படி நடந்து கொள்வதன் மூலமே ஒரு கௌரவத்தையும் மதிப்பையும் தேடிக் கொள்ளும் நோக்கில் அதைப் போலி நடிப்பாக்கி விடாமல் தன் சொல், செயல், பாவனைகள் அனைத்திலும் யதார்த்த பூர்வமாகக் காட்டி வந்தாள்.

இடதுபுற நடைபாதையிலிருந்து, வலது புறமிருந்த பஸ் நிலையத்தை நோக்கிச் செல்ல, சாலையின் குறுக்கே இறங்கினாள் கருணா. மறுகணம், அவளுக்குப் பின்னால் மிதமான வேகத்தில் ஒரு ஸ்கூட்டர் வந்து ஓசையின்றி நின்றது.

பயமும் கோபமும் கலந்த துடிப்புடன் நின்று திரும்பிய அவள் சட்டென்று ஓரடி பின்னால் நகர்ந்து கொண்டு வியப்பும் திகைப்புமாகக் கண்ணிமைகளைப் ப ட ப ட வெனக்



"நேற்று உன் கணவருடன் சினிமாவுக்குப் போயிருந்தாயே, படம் எப்படி?"

"சுத்த மோசம். என் மாமியாரைப் பற்றி அவரிடம் பாதிதான் சொல்லியிருப்பேன். அதற்குள் படம் முடிந்துவிட்டது!"

கொட்டியபடி பார்வையை நிமிர்த்தினாள். ஸ்கூட்டரை அவள் அருகில் கொண்டு வந்து நிறுத்தியவன் முத்துசிவன்தான்.

இரண்டு கால்களையும் இலேசாகத் தரையில் ஊன்றியபடி இளநகையுடன் அவளை ஏறிட்டுப் பார்த்த அவன், ''வீட்டுக்குத்தானே போகிறாய்?'' என்று கேட்டான்.

'ஆம்' என்பதாக மெல்லத் தலையாட்டினாள் கருணா.

''இப்படிப் பின்னால் ஏறி உட்கார். உன் வீட்டண்டை கொண்டு போய் இறக்கி விடுகிறேன்.''

''வேண்டாம். உங்களுக்கு வீண் சிரமம்...''

''எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை. நீ உட்காரலாம்.''

முத்துசிவனா பேசுகிறான்? அவனுடைய இந்தப் பேச்சில்தான் என்ன கம்பீரம்! எவ்வளவு மிடுக்கு! அவனுக்கே உரிய அந்தப் பழைய கூச்சம், குழைவு, மென்மையான சிரிப்பு, குழந்தைத்தனமான பார்வை எல்லாம் எங்கு போயின? — வியப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் கருணா.

உட்கார்ந்தவாறே ஸ்கூட்டரைச் சற்றுப் பின்னால் நகர்த்தினான் முத்துசிவன். சாலையில் போவோர் வருவோரின் கவனம் தங்கள் மீது திரும்பும் வகையில் பிகுவோ, சிணுங்கலோ, நாணப் புன்னகையோ காட்டாமல், சாதாரணமாக வந்து ஒரு நெருங்கிய சொந்தக்காரி போல் பின் ஸீட்டில் ஏறி ஒருக்களித்து அமர்ந்தாள் கருணா.

முத்துசிவனும் நிதானமாக ஸ்கூட்டரைக் கிளப்பிச் சென்றான்.

சுகுணாவுக்கு எல்லாம் ஏதோ கனவு காண்பது போல் இருந்தது. திடீரென்று தன் எதிரே மாரவேள் தோன்றித் தன்னை அவனது மலர்த் தேரில் தூக்கி அமர்த்திக் கொண்டு விண்வெளியில் உல்லாச பவனி வருவது போன்ற பிரமை! இந்தப் பிரமையால் தன்னை மீறி ஏதேனும் நிகழ்ந்துவிடுமோ என்று அஞ்சியவள் போல் ஸீட்டின் அடிப்பாகத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். முத்துசிவன் ஒரே சீராகவும், மிதமான வேகத்திலும் ஸ்கூட்டரைச் செலுத்திச் சென்ற அழகைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு வியப்புடன் கூடிய இன்பக் கிளுகிளுப்பாயிருந்தது. இன்று அவன் என்ன கவர்ச்சிகரமான உடை உடுத்துக் கொண்டிருக்கிறான்! இந்தக் கோலத்தில் இதற்கு முன்னால் அவனை அவள் பார்த்ததே இல்லை.

ஒரு பெரிய ஹோட்டலண்டை ஸ்கூட்டரை நிறுத்தினான் முத்துசிவன். சுகுணாவும் தயக்கத்துடன் கீழே இறங்கினாள்.

"வா, காப்பி சாப்பிட்டு விட்டுப் போவோம்."

சுகுணாவின் பதிலுக்காகக் காத்திராமல், அந்த ஹோட்டலின் 'மாடிப் பூங்கா' படிகளில் ஏறினான் முத்துசிவன். அவளும் மௌனமாக அவனைப் பின்தொடர்ந்தாள். இருவரும் சற்று ஒதுக்குப்புறமாயிருந்த ஒரு மேசையின் எதிரில் போய் அமர்ந்தனர்.

இரண்டு கப் காப்பி மட்டும் கொண்டு வரச் சொன்னான் முத்துசிவன். காப்பி வந்தது. ஒரு கோப்பையைச் சுகுணாவின் அருகில் நகர்த்தி வைத்துவிட்டு அவளை ஒரு தினுசாகப் பார்த்துப் புன்முறுவல் பூத்தவாறே தன் கோப்பையிலிருந்த காப்பியைப் பருகினான் அவன். இவ்வளவையும் வெகு அதிசயத்தோடு பார்த்துக் கொண்டிருந்த சுகுணாவுக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்துவிட்டது. களீரெனச் சிரித்த அவள் தன் கை வளைகள் குலுங்கக் காப்பியை எடுத்து அழகாக உறிஞ்சிப் பருகலானாள்.

முத்துசிவன் அவசரமாகச் சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். அவன் சிகரெட் புகைப்பது சுகுணாவைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது. காப்பி பருகுவதையும் மறந்தவளாய் அவனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிகரெட் புகையின் மணத்திலும் விறுவிறுப்பிலும் லயித்தவனாய்ச் சிறு பொழுது மௌனமாயிருந்த முத்துசிவன் மெல்ல நிமிர்ந்து மேசையில் இரு கைமுட்டிகளையும் ஊன்றியபடி அவளை ஒரு கணம் கூர்ந்து பார்த்துவிட்டு, "ஆமாம்; என்மேல் உனக்கு என்ன கோபம்?" என்று குறும்பு இழைந்த குரலில் கேட்டான்.

அவனை இதமாக நோக்கி இளநகை பூத்த சுகுணா, "எனக்குக் கோபமா? நீங்கள்தான் என்மேல் ஏதோ கோபமாயிருக்கிறீர்கள் என்று நான் எண்ணிக்கொண்டிருக்கிறேன்!" என்றாள் இனிய மென்குரலில்.

"வாஸ்தவம். எனக்கு உன்மேல் ரொம்பக் கோபம்தான்."

"நான் என்ன செய்தேன்?"

"என் தங்கை மைதிலியை மாப்பிள்ளை வீட்டாரோடு ரயிலேற்றி அனுப்பிவிட்டு வந்த என்னை செண்ட்ரல் ஸ்டேஷனில் நீ பார்த்தாய் அல்லவா?"

"பார்த்தேன்."

"ஏன் என்னிடம் எதுவும் பேசவில்லை?"

"அப்போது என் சிநேகிதிகள் கூட இருந்தார்கள்."

"என்னைப் பார்க்கத்தானே அங்கு வந்தாய்?"

"ஆமாம்; பார்க்க மட்டும்தான்!"

"சரி; அடுத்த நாள் உன் வீடு தேடி வந்தப்பவும் ஒன்றுமே பேசவில்லையே?"

"அப்பாவும் அம்மாவும் இருந்தார்கள்..."

"இப்படிச் சொல்லித் தப்பிச்சுக்குவேன்னு எனக்குத் தெரியுமே!"

'இல்லை' என்பது போல் மெல்லத் தலையசைத்த சுகுணா, "அதற்காகவா இத்தனை நாளும் என்னைப் பார்க்காமலே இருந்துவிட்டீங்க?" என்று கண்களை அகல மலர்த்திக் கொண்டு கேட்டாள்.

"நான் மட்டும்தானா? நீயும்தான்!"

"நீங்க வருவீங்கன்னு நான் பொறுமையோடு காத்திருந்தேன்."

"நானும்தான்!" என்று வீம்பாகச் சொல்லிச் சிரித்தான் முத்துசிவன்.

"ஐயோ, பாவம்!" என்று கேலியாக அதரங்களை நெளித்து முறுவலித்த சுகுணா, "அப்படீன்னா சந்தர்ப்பம் உங்களைச் சதி செய்துவிட்டதுன்னு சொல்லுங்க!" என்றாள் இனிய குரலில். "அதாவது, என்னைப் பார்க்கக் கூடாது என்றிருந்த நீங்கள் இன்று அசந்தர்ப்பமாகப் பார்த்துவிட்டீர்கள் இல்லையா?"

"பார்க்கக் கூடாதுன்னு இருந்திருந்தால் உன்னை நான் பார்த்தும், பார்க்காமலே போய் விட்டிருக்கலாமே!"

இப்படி அவன் சொன்னது சுகுணுவுக்குத் தன் செவிகளில் மதுர ரஸம் பாய்ந்தாற் போலிருந்தது. அத்துடன் அவன் இப்போது பேசும் பாணியும் அவனுடைய பாவனைகளும் அவளுக்கு வியப்பூட்டின. இப்படியெல்லாம் அவள் இதற்கு முன்னல் கேட்டதுமில்லை; பார்த்ததும் கிடையாது.

''சரி; போகலாமா?'' என்று அவளைக் குறுகுறுவெனப் பார்த்துக் கொண்டு கேட்டான் முத்துசிவன்.

'போகலாம்' என்பது போல் அழகாகத் தலையசைத்தவாறு எழுந்தாள் சுகுணு.

''எங்கே போகலாம்?'' என்று மறுபடியும் அதே குறுநகையுடன் வினவினான் அவன்.

சுகுணுவுக்கு இந்தக் கேள்வி என்னவோ போல் இருந்தது. தன்னோடு அவன் எங்காவது போய்த் தனிமையில் உட்கார்ந்து இன்னும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்க விரும்பியே அப்படிக் கேட்கிறான் என்பதை அவள் புரிந்து கொண்டாள். ஆயினும் அதைப் புரிந்துகொள்ளாத மாதிரி மெல்லச் சிரித்துக் கொண்டே, ''ஏன்?... எங்கேயாவது போக வேண்டுமா?'' என்று வினவினாள்.

''இல்லை; உன்னைத்தான் கேட்கிறேன்.''

''நான் வீட்டுக்குப் போக வேண்டும்; நீங்கள்?''

''நானும்தான்!'' என்று அசட்டுப் புன்முறுவலுடன் கூறிக் கொண்டே எழுந்தான் முத்துசிவன்.

இருவரும் ஹோட்டலை விட்டுக் கீழே வந்து ஸ்கூட்டரில் ஏறிக் கிளம்பினர். சுகுணுவின் வீட்டுக்குச் சற்று இப்பாலேயே ஸ்கூட்டரை நிறுத்திய முத்துசிவன், உட்கார்ந்தவாக்கில் சட்டென்று திரும்பி இடது கையால் சுகுணுவின் இடையை வளைத்துப் பற்றி அவள் கீழே இறங்க உதவினான். எதிர்பாராத விதமாக அவன் இவ்வாறு செய்தது சுகுணுவுக்கு ஓர் இன்ப அதிர்ச்சியாகி விடவே உடல் கூசித் தலை கவிழ்ந்தாள். சற்றைக்குப் பின், அவனிடம் ஏதோ சொல்ல, அல்லது எதையோ கேட்க விரும்புகிறவள் போல் அவனைக் கடைக் கண்ணுல் பார்த்தபடி ஒரு நிமிடம் தயங்கி நின்று விட்டுப் பிறகு ஏதும் சொல்லாமல் நாணப் புன்னகையுடன் அங்கிருந்து தன் வீட்டை நோக்கி விரைந்து சென்று விட்டாள்.

முத்துசிவனும் ஸ்கூட்டரைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டான். ஆனல் அவன் தனது வீட்டுக்குச் செல்லவில்லை; நேரே வந்தனுவின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்!

> **விடை :**
> 1. பீஹார்
> 2. நாகாலாந்து
> 3. பஞ்சாப்
> 4. மேற்கு வங்காளம்
> 5. உத்தரப்பிரதேசம்

ஆமாம்; வந்தனுவுடன் ஏற்படுத்திக் கொண்ட நட்புறவில் சலிப்படைந்தோ, அல்லது அவளுடைய உறவு வேண்டாமெனத் தீர்மானித்தோ இன்று அவன் சுகுணுவைப் பார்க்கச் சென்றான் என்று சொல்ல முடியாது. மேலும், அவனுடைய மதிப்புக்குகந்த காதலியாக அவள் இருப்பவள் என்ற வகையிலே—அந்தக் காதல் உணர்வால் கிளர்ந்த பாச வேட்கையுடன் — அவளைச் சந்திக்கப் போனான் என்றும் கூற இயலாது. இத்தனை நாட்களும் வந்தனுவுடன் உல்லாசமாக நேரத்தைப் போக்கியது போல் இன்று சுகுணுவுடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்கலாமே என்ற ஒரு 'ருசி மாற்ற' நோக்கத்தில்தான் அவளைச் சந்திக்கச் சென்றான். அப்படிச் சென்ற நோக்கம் சரிவர நிறைவேறுததால் வழக்கம் போல் வந்தனுவைத் தேடிப் போய் விட்டான்; அவ்வளவே!

தன் தந்தையார் காலமான பின் குடும்பத்தின் சகல பொறுப்புக்களையும் ஏற்க வேண்டியவனுன அவன் அப்போது தனக்குத் தானே செய்து கொண்ட இலட்சிய சபதம் ஒன்றே ஒன்றுதான் — அதாவது, அநாதரவாக விடப்பட்ட தம்பி, தங்கைகளை நல்ல முறையிலே வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கிக் கல்யாணம் பண்ணிக் குடியும் குடித்தனமுமாக வைத்து விடவேண்டும் என்பது. இதற்கு மேல் அவன் தன்னைப் பற்றியோ தனது எதிர்காலம் பற்றியோ எவ்வித முடிவும் செய்ததில்லை; எந்தவிதத் திட்டமும் போட்டுக் கொண்டதில்லை; இவ்விஷயமாய் வெறும் கற்பனைக்குக் கூட அவன் இடம் கொடுத்ததில்லை. எனவேதான் அந்த ஒரே இலட்சிய சபதத்தில் வெற்றி கண்டதும், அவ்வெற்றிப் போதையில் மூழ்கித் திளைத்த அவனுடைய மனம் கட்டறுந்த காளையாகக் கண்மண் தெரியாமல் இப்போது ஓட ஆரம்பித்து விட்டிருக்கிறது. 'நலிந்து சாய்ந்துவிட்ட என் குடும்பத்தைத் தூக்கி நிறுத்தி. தம்பி

தங்கைகளுக்கு நல்வாழ்வு தேடி வைக்க வேண்டும்' என்ற அந்த ஓர் இலட்சியத்தோடு — அந்த இலட்சியம் நிறைவேறுவதற்கு முன்னோ, நிறைவேறிய பின்னோ — தன்னுடைய சொந்த எதிர்காலத்துக்கும் ஒரு திட்டம் வகுத்து அதை மற்றோர் இலட்சியமாக அவன் ஏற்றுக் கொண்டிருந்தானானால் இன்று இப்படித் தறிகெட்ட தனமாக நடந்து கொண்டிருக்கமாட்டான். அந்த 'இரண்டாவது இலட்சியத்தை' அவ்வளவு முக்கியமானதாக எடுத்துக்கொள்ளாமல் அலட்சியப்படுத்தி விட்டான். இத்தனை காலமும் துய்த்தறியாத சுகங்களையெல்லாம் ஒரேயடியாகத் துய்த்துவிட வேண்டுமென்ற வேட்கையுடன், ஒரு கட்டுத் திட்டமோ வரைமுறையோ இல்லாமல் — காய்ந்த மாடு கம்பங் கொல்லையில் புகுந்தாற்போல் — களியாட்டம் போட ஆரம்பித்த அவன், 'கல்யாணமா? அதற்கென்ன இப்போது அவசரம்? இவ்வளவு காலம் என்னைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல், நான் ஏற்றுக்கொண்ட இலட்சியம் எனும் சிறைக்குள் அடைக்கப்பட்டுக் கிடந்து இப்போதுதானே விடுதலையாகி எனக்குரிய இன்ப உலகில் காலெடுத்து வைத்திருக்கிறேன்! அதில் இன்னும் காண வேண்டியவையும் சுகிக்க வேண்டியவையும் எவ்வளவோ இருக்கின்றன; அவற்றையெல்லாம் முழுக்க அநுபவிக்காமல் அரைகுறையாக விட்டுவிட்டுக் கல்யாணம் — குடும்பம்—என்ற இன்னொரு சிறைக்குள் ஏன் அத்தனை அவசரமாக ஓடிப் போய் என்னை அடைத்துக்கொள்ள வேண்டும்'. என்று தனக்குத்தானே சமாதானமும் சொல்லிக் கொண்டான்.

இப்படிப்பட்டதொரு 'சமாதானம்' தேடிக் கொண்டதுமே அவன் மனத்திலிருந்து சுகுணாவின் காதற் கனல் கொஞ்சம் கொஞ்சமாக ஆறி நீறு பூக்கத் தொடங்கியது. இப்போது அவனுக்கு அவள் தன்னைக் காதலிப்பதும், அந்தக் காதலை அடைந்தே தீருவதென்ற சபத விரதம் பூண்டு கன்னியாகவே காலம் கழித்து வருவதும் வேடிக்கையாக மட்டுமல்ல; பைத்தியக்காரத்தனமாகவும் பட்டது.

அவ்வாறாயின் அவன் அவளைக் காதலிக்கவில்லையா? நிச்சயமாக ஒரு காலத்தில் காதலிக்கவே செய்தான். ஆனால் அந்தக் காதல் இப்போது அவனுடைய மனத்தின் எங்கோ ஒரு மூலையில் போய்ப் பதுங்கி ஒதுங்கி விட்டது. இன்றைய அவனது தறிகெட்ட மன நிலையில் அது எங்கே இருக்கிறது என்று அறிய அவனால் இயலாது போனதன்றி, அப்படி ஒன்று அங்கே இருந்ததா என்ற சந்தேகமும் அவனுக்குத் தோன்றி விட்டது.

பாவம், சுகுணா! அவனது இப்புதிய போக்கை இன்னமும் புரிந்து கொள்ளாமலேதான் இருந்தாள். அதனால் அவனை அவளே அடிக்கடி சந்திக்க வந்து கொண்டுமிருந்தாள்.

முத்துசிவனுக்கு ஒரே மகிழ்ச்சி, உற்சாகம்! நேரத்தை உல்லாசமாகப் போக்க இரண்டு அழகிய 'பெண் சிநேகிதிகள்' கிடைத்து விட்டார்களே என்பதால் விளைந்த உற்சாக மகிழ்ச்சி அது!

ஒரு நாள் வந்தனாவுடன் ஊரைச் சுற்றுவான்; மறுநாள் சுகுணாவுடன் சேர்ந்து இழைய இழையப் பேசி நேரத்தை இன்பமாகக் கழிப்பான். அவளை அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்கும், சினிமாவுக்கும், பீச்சுக்குமாகப் போய் வரத் தொடங்கினான். சில சமயம் அவனது பேச்சும், சேஷ்டைகளும் சற்று வரம்பு மீறும்போது அவள் உள்ளூறக் கலக்கமும் குழப்பமும் அடைவாள். ஆயினும் அவற்றுக்காக முறுக்கிக் கொள்ளவோ கடிந்து கொள்ளவோ அவளுக்குத் துணிவு வருவதில்லை. அதையெல்லாம் மிக இலேசாக எடுத்துக் கொண்டு அவனைக் கேலியும் கிண்டலும் பண்ணுவதோடு தன்னைச் சமாளித்துக் கொள்வாள்.


ஒரு நாள், தங்கள் திருமண விஷயமாய் அவனிடம் பேச்சுக் கொடுத்து அதை அவன் எப்போது நடத்தும் உத்தேசத்தில் இருக்கிறான் என்று அறிய முயன்றாள் சுகுணா.

முத்துசிவனோ அதற்குப் பிடிமானமான பதிலேதும் கூறாமல் தட்டிக் கழித்துவிட்டான். மற்றொரு நாளும் அவ்விஷயமாய் அவள் கேட்க, அவனும் முன்போலவே மழுப்பலாக ஏதோ சொல்லிப் பேச்சை மாற்றிக் கொண்டான்.

இதனால் சுகுணாவின் மனம் இலேசாக மிரட்சியுற்றது. இனம் புரியாததொரு சந்தேகமும் அதில் தோன்றி உறுத்த ஆரம்பித்தது. எனினும் ஒரேயடியாகத் திகிலடைந்து விடாமல் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு அவனிடம் அவ்விஷயமாய் நிச்சயமான பதில் ஒன்றைப் பெற்று விடுவது என்ற தீர்மானத்துடன் ஒரு நாள் மாலை ஐந்து மணி வாக்கில் அவன் வீட்டுக்கே வந்து சேர்ந்தாள்.

அப்போது முத்துசிவன் வீட்டில் இருந்தான். அன்னபூரணியம்மாள் எங்கோ வெளியே போய்விட்டிருந்தாள்!

(தொடரும்)



விற்பனைக்கு தேவை கவர்ச்சி!
எனவே அழகு சாதனங்களை தயாரிப்போர்,
பாக்கிங் துறையில் சிறந்த மெட்டல்பாக்ஸ் துணையை நாடுகின்றனர்



கவர்ச்சியாக பாக்செய்த அழகு சாதனப் பொருட்களே இன்று கவனத்தைக் கவரும். விற்பனைக்கும் உதவும். பல வகையான அழகு சாதனப் பொருள் டப்பாக்களை மெட்டல்பாக்ஸ் பிரு வளமே டிசைன் செய்து, அச்சிட்டு தயாரிக்கின்றது. எடுத்தாள வசதியுள்ள மூடிகளைக் கொண்ட எழில் மிகு டப்பாக்கள், காத்தால் பொருள் கெடாமல் ஈடுகொடுக்க தேவையான வசதிகளும், தொழில் நுட்ப அறிவும் மெட்டல் பாக்ஸ் மட்டுமே பெற்றுள்ளது.

மெட்டல் பாக்ஸ்-இந்தியாவின் மாபெரும் உலோக, காகித, பிளாஸ்டிக் பாக்கிங் சாதன தயாரிப்பாளர்கள். நாடு முழுவதும் விசேஷ நிலையங்கள் உள. அவர் தம் ஆராய்ச்சியும், அநுபவமும் பாக்கிங் தொழிலின் முன்னேற்றத்துக்கு உதவுகின்றன. அவர்களின் புதிய பாக்கேஜுகள், உத்திகள், தொழில் துறைக்கும் தேசத்துக்கும் லாபகரமானவை. அவை வெளிநாடுகளில் இந்தியப் பொருள்களின் விற்பனைக்கு துணை புரிகின்றன. எனவே பெரிய, சிறிய உற்பத்தியாளர்கள் புதுமை பாக்கிங் சாதனங்கள் தயாரிக்க மெட்டல் பாக்ஸ் துணையை நாடுவதில் வியப்பொன்றுமில்லை.

MB மெட்டல் பாக்ஸ்

MB-4984

சர்க்கார் தரப்பு வக்கீல் கம்மின்ஸ் குற்றவாளிக்குப் பாதகமான ஒன்பது அம்சங்களை எடுத்துக் கூறிவிட்டுச் சற்று நிறுத்தினார். நீதி ஸ்தலத்தில் ஒரே அமைதி. நீதிபதி முன் இருந்த மேஜையின்மேல் ஒரு கைத் துப்பாக்கி, ஒரு சிறிய தொப்பி, வெல்வெட் கழுத்துப் பட்டையுள்ள முக்கால் திட்ட மேல் கோட்டு எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. நீதி ஸ்தலத்தில் குழுமியிருந்தவர்கள் எல்லோருமே ஜூரர்கள் தீர்ப்பு அளிப்பதற்கு முன்பே, கூண்டில் நிற்கும் ஹரால்ட் இஸ்ரேல் குற்றவாளி தான் என்று தீர்மானித்து விட்டார்கள். இனி மேலும் குற்றவாளிக்குச் சாதகமாக அவனைத் தப்ப வைக்க எந்த விஷயம் உதவப்போகிறது?

சர்க்கார் வக்கீல் மீண்டும் தொடர்ந்தார்: ''சாட்சியங்களின் அடிப்படையில் ஹரால்ட் இஸ்ரேல் குற்றவாளி என்ற முடிவுக்கு நாம் விரைவில் வந்துவிடலாம்.

''ஆனால் சர்க்கார் வக்கீல் என்ற முறையில் குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பது எப்படி என் கடமையோ, அதேபோல் கூண்டில் குற்றம் சாட்டப்பட்டு நிற்கும் நபர் ஒரு வேளை நிரபராதியாகவும் இருக்கலாம் என்ற அடிப்படையில் அவனைக் காப்பாற்ற முயலுவதும் என் கடமையாகிறது. அதையும் ஆராய்ந்து பார்க்கலாம்'' என்று தொடங்கினார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டில் அமெரிக்க நாட்டில் உள்ள பிரிட்ஜ்போர்ட் என்ற ஊரில் ரெவரண்ட் ஹூபர்ட் டாம் என்னும் பாதிரியார் மக்களின் அபிமானத்துக்குப் பாத்திரமாக விளங்கினார். பல ஆண்டுகளாக அதே ஊரில் இருப்பவர். தங்கமான மனிதர். தினமும் முன்னிரவு வேளைகளில் அவர் சாப்பாட்டுக்குப் பிறகு சற்றுத் தூரம் தனிமையில் உலாவப் போய்விட்டு வருவது வழக்கம். அன்றும் அப்படித்தான் உலாவப் போனார். இரண்டு தெருக்கள் சந்திக்கும் இடத்தில் திடீரென்று ஓர் ஆசாமி பாதிரியாரின் முதுகுப் பக்கத்தில் தோன்றினான். விருட்டென்று கோட்டுப் பையிலிருந்த கைத் துப்பாக்கியை எடுத்துப் பாதிரியாரின் முதுகில் சுட்டான். அந்த வெடி ஓசை, பரவியிருந்த இருளைக் கிழித்துக் கொண்டு ஒலித்தது. பாதிரியார் சுருண்டு விழுந்து அமரரானார். சுட்டவன் வந்த வழியாகவே திரும்பி ஓடினான்.

போலீஸ் விசாரணையில், சுட்டுவிட்டு ஓடிய நபர் நடுத்தர உயரமுள்ளவன் என்றும், சிறிய குல்லாயும் வெல்வெட் கழுத்துப் பட்டையுள்ள முக்கால் திட்ட கோட் அணிந்திருந்தான் என்றும், அவன் சுட்டுவிட்டு ஓடும்போது அவன் கையிலிருந்த துப்பாக்கி பளிச்சிட்டதாகவும் ஏழு நபர்கள் தகவல் கொடுத்தார்கள். கொலைக்கு என்ன நோக்கம் இருக்க முடியும் என்று யாராலும் ஊகிக்க முடியவில்லை. பாதிரியாரின் இறுதிச் சடங்குகளுக்கு அந்த ஊரிலிருந்து பன்னிரண்டாயிரம் மக்களும் வந்திருந்தார்கள். அவர்களில் யார் கொலைகாரனாக இருக்க முடியும் என்று யாராலும் ஊகிக்க முடியவில்லை.

நாட்கள் ஓடின. போலீஸார் கொலையாளியைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்குக் கணிசமான பரிசுத் தொகை கொடுப்பதாகவும் அறிவித்தனர்.

திடீரென்று ஒரு நாள் கொலையாளி அகப்பட்டு விட்டான் என்ற செய்தி வந்தது. நடுத்தர உயரத்துடன் பக்கத்துக் கிராமத்தில் பட்டினியாகச் சுற்றிக் கொண்டிருந்த ஹரால்ட் இஸ்ரேல் என்னும் ஆசாமியைப் போக்குவரத்துப் போலீஸ் படையினர் பிடித்து உள்ளே தள்ளிவிட்டார்கள். அவன் சிறிய குல்லாயையும் வெல்வெட் காலர் உள்ள முக்கால் திட்ட கோட்டையும் அணிந்திருந்தான். அவன் கோட் பையில் ஒரு கைத் துப்பாக்கியும் இருந்தது. பாதிரியாரின் உயிரைக் குடித்த குண்டு எந்த ரகத் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்டிருக்குமோ அந்த ரகத் துப்பாக்கியேதான்.

ஹரால்ட் இஸ்ரேல், தான் ஒரு காலத்தில் சிப்பாயாக இருந்தவன் என்றும், இப்போது

குற்றவாளிக்கு மரண தண்டனை கிடைப்பது நிச்சயம் என்ற நிலை!
அந்தச் சமயத்தில் ஒரு திடீர்த் திருப்பம்!



வேலையில்லாத காரணத்தினால் பிரிட்ஜ் போர்ட் நகரில் யாராவது தெரிந்தவர்கள் இருந்தால் வேலை வாய்ப்புக் கிட்டுமே என்று நம்பி வந்ததாகவும், குற்றம் நடந்ததாகச் சொல்லப்படும் நேரத்தில் பிரிட்ஜ்போர்ட்டிலுள்ள சினிமாக் கொட்டகை ஒன்றில் படம் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் சொன்னான். ஆனால் அதைப் போலீஸார் நம்பவே இல்லை. பொதுமக்களும் அகப்பட்ட குற்றவாளியை உடனே விசாரணைக்கு அனுப்ப ஆவேசப் படபடப்பைக் காண்பித்தார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து ஹெரால்ட் இஸ்ரேலே, போலீஸாரிடம் எதிர்பாராத வகையில் ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தான். வேலையில்லாக் கொடுமையாலும் பசி வேதனையினாலும் ஒருவிதப் பைத்திய மனோ நிலைக்கு விரட்டப்பட்டு, விவரம் புரியாத வெறியினால் தன் முன்னால் சென்று கொண்டிருந்த நபரைச் சுட்டுவிட்டதாக வாக்குமூலம் கொடுத்தான். இதன் விளைவாகக் குற்றவாளிக்கூண்டில் நின்ற இஸ்ரேலுக்குப் பாதகமாகக் கம்மிங்ஸ், ஒன்பது வாதங்களை எடுத்துக் கூறினார்.

அதன்பிறகு அதே வழக்கில் வெற்றிபெறும் நிலையில் இருந்த சர்க்கார் தரப்பு வக்கீல் கம்மிங்ஸ், குற்றவாளியின் சார்பிலும் வாதாடத் தொடங்கினார்.

"முதலாவதாக ஹெரால்ட் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன் வந்தபோது அவன் மிகுந்த பதற்றமான நிலையில் இருந்திருக்கிறான். சாட்சியங்களெல்லாம் தனக்கு விரோதமாக இருக்கின்றனவே என்ற நினைவில் அவன் மனமுடைந்த நிலையில் இருந்தான். வாக்குமூலம் கொடுத்து முடிந்தவுடன், அவன் ஏதோ ஆவேசத்திலிருந்து விடுதலை அடைந்தவன் போல் நிம்மதியாகப் படுத்துத் தூங்கி விட்டான். சற்று நேரம் நிம்மதியாக ஓய்வு பெற அவன் எதை வேண்டுமானாலும் வாக்குமூலமாகக் கொடுக்கத் தயார் என்று சொன்னதை, அவனைக் கவனிப்பதற்காக, அனுப்பப்பட்ட டாக்டர்கள் கேட்டிருக்கிறார்கள். ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட போது ஹெரால்டுக்குச் சரியான மனோ நிலை இல்லை என்பதை அதே டாக்டர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். ஆகவே, அந்த வாக்குமூலத்தை ஹெரால்டுக்கு எதிராக உபயோகப்படுத்தச் சட்டப்படி இயலாது.

இரண்டாவதாக, குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஹெரால்ட் போலீஸாரை, தான் ஓடிய வழிகளிலெல்லாம் அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. இதில் புதிதாக எடுத்துக் கொள்ள ஒன்றுமில்லை. போலீஸார் அழைத்துச் சென்றபடி ஹெரால்ட் நடந்தான். சோர்வுற்ற நிலையில் அவன் போலீஸார் சொன்னபடி அவர்கள் முன் நடந்திருக்கிறான். வழக்குக்கு உதவும் விஷயம் இதில் ஒன்றும் இல்லை.

மூன்றாவதாக, குல்லா, கோட்டு முதலியவற்றைப் பொறுத்த வரையில், பல சாட்சிகளுக்குப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்த பிறகுதான் இவைகளின் நிறம், தோற்றம் நினைவுக்கு வந்திருக்கின்றன. சாட்சிகள், கொலை புரிந்தவன் பச்சை நிறக் குல்லாய் அணிந்திருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். இருட்டில் அதனைச் சிலர் சாம்பல் நிறமாகக் கூட நினைத்திருக்கலாம். ஆனால் இஸ்ரேல் அணிந்துள்ள குல்லாயோ நல்ல பழுப்பு நிறம். இந்த நீதிமன்ற மண்டபத்திலேயே பலர் இதே போன்ற பழுப்புக் குல்லாயையும், வெல்வெட் கழுத்துப் பட்டை உள்ள முக்கால் திட்டக் கோட்டையும் அணிந்து அமர்ந்திருக்கிறார்கள். இன்றைய நாகரிகத்தைக் குறிப்பிடும் உடுப்புக்கள் இவை. ஆகையால் இதை வைத்து இஸ்ரேல் குற்றவாளிதான் என்பதாக உறுதியாகக் கூறிவிட முடியாது.

நான்காவதாக, இதே இஸ்ரேலை, உயிர் இழந்த பாதிரியார் விழுந்த இடத்திலிருந்து ஓடின நபராகப் பார்த்தோம் என்று சில சாட்சிகள் அழுத்தம் திருத்தமாகக் கூறினார்கள். அந்தக் குற்றம் நடந்த இடத்துக்கு முன்னிரவு வேளையிலேயே மற்றும் சில அதிகாரிகளுடன் நான் போய்ச்சில பரிசோதனைகள் நடத்திப் பார்த்தேன். என்னுடைய உதவியாளர்களில் ஒருவர் பாதிரியாராக நடித்துக் கீழே விழுந்தார். மற்றொருவர் ஹெரால்ட் போல் ஓடினார். சாட்சிகள் நின்றிருந்ததாகச் சொல்லப்படும் தூரங்களில் வெவ்வேறு நபர்களை நிறுத்தினேன். குற்றம் நடந்த இடத்துக்கும் அருகில் இருக்கும் விளக்குக் கம்பத்துக்கும் ஐம்பதடி தூரம் இருக்கும். இந்த மங்கிய ஒளியில், ஓடுபவராக நடித்த நபரை, சாட்சியங்களாக நின்று நடித்தவர்களால், இரண்டு மூன்று வினாடி அவகாசத்தில் இனம் கண்டுகொள்ள முடியவில்லை. ஆகவே, இஸ்ரேல்தான் ஓடினான் என்று எதிர்பாராத நிலையில் நின்று கவனித்த சாட்சிகள் ஒப்பியடித்துக் கூறுவது வியப்பாக இருக்கிறது. நம்ப முடியாததாகவும் இருக்கிறது.

ஐந்தாவதாகக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஏற்கனவே அறிமுகமான ஹோட்டல் பணிப் பெண் கண்ணாடி ஜன்னல் வழியாக வெளியே போய்க்கொண்டிருந்த இஸ்ரேலைப் பார்த்ததாகச் சொன்ன விஷயத்தையும் பரிசீலித்தேன். அதே ஹோட்டலுக்குப் போய், அந்தப் பணிப்பெண் அமர்ந்திருந்த ஆசனத்திலேயே அமர்ந்து கண்ணாடி ஜன்னல் வழியாகத் தெருவைக் கவனித்தேன். எனக்கு ஒன்றுமே



"முன்னே எல்லாம் எவ்வளவு உதைத்தாலும் ஸ்கூட்டர் 'ஸ்டார்ட்' ஆகாதே! இப்போ எப்படி ஒரே உதையில் 'ஸ்டார்ட்' செய்து விடுகிறீர்கள்?"

"இப்போ எல்லாம் உதைக்கும் போது உன்னை நினைத்துக் கொள்கிறேன்!"

தெரியவில்லை. காரணம், அந்தக் கண்ணாடி ஜன்னல் வண்ணப் புகை ஏற்றப்பட்ட கண்ணாடியை உடையது. வெளிச்சம் தெரியும். ஆனால் அப்பாலுள்ள உருவங்கள் தெரியாது. ஹோட்டல் பணிப்பெண், பரிசுக்கு ஆசைப் பட்டுப் பொய் சொன்னதாக ஒப்புக் கொண்டு விட்டாள்.

ஆறாவதாக, குற்றம் நடந்த வேளையில், இஸ்ரேல் சினிமாக் கொட்டகையில் இல்லை என்று மறுக்கச் சாட்சி யங்கள் இல்லை. மாறாக அவனை உள்ளே பார்த்தவர்கள் சிலர் இருக்கிறார்கள்.

ஏழாவதாக, இஸ்ரேல் தங்கியிருந்த இடத்திலிருந்து ஓர் உலோகக் கவசம் — துப்பாக்கியிலிருந்து குண்டு வெடிக்கப்பட்டபின் எஞ்சிய கூடு — கிடைத்த விஷயம். அவன் அறையிலிருந்து பாதிரியாரைக் கொன்ற தோட் டாவின் ஒரே ஒரு கவசம் மாத்திரம் கிடைக்கவில்லை. அதைப்போல் பல உலோகக் கவசங்கள் கிடைத்தன. எப்படி? இஸ்ரேலும் அவனுக்கு அறிமுகமான இரு நண்பர்களும் மாறி மாறி சிப்பாய்கள். ஸ்நான அறையில் அடிக்கடி குறி பார்த்துத் துப்பாக்கி சுடும் போட்டியில் ஈடுபடுபவர்கள். இதை அந்த அறைக்குச் சொந்தக்கார மாது ஒப்புக் கொண்டிருக்கிறாள். இவற்றில் ஒன்றுதான் பாதிரியாரைக் கொன்றது என்று உறுதி செய்ய முடியாது.

எட்டாவதாக, பாதிரியாரின் உடலிலிருந்து எடுக் கப்பட்ட குண்டு இந்த இஸ்ரேலின் துப்பாக்கியிலிருந்து வந்ததுதானா என்ற என் சந்தேகத்தையும் வெவ்வேறு மூன்று ஆயுத நிபுணர்களைக் கொண்டு போக்கிக் கொண் டேன். பாதிரியாரின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட குண்டி லுள்ள வரிகள் சரியானபடி ஒப்பிடப்பட வில்லை. அந்தக் குண்டு இஸ்ரேலின் துப்பாக்கியிலிருந்து வெளி வந்ததில்லை.

ஒன்பதாவதாகவும் கடைசியாகவும் இஸ்ரேலின் துப்பாக்கி அவன் ஓடும்போது பளிச்சிட்டதாகச் சில சாட்சிகள் கூறி யிருக்கிறார்கள். ஆனால் இஸ்ரேலின் துப்பாக்கி கறுப்பு நிறமானது. மெருகு இல்லாதது. எந்தச் சூழ்நிலையிலும் பளிச்சிடக்கூடிய தன்மை வாய்ந்தது இல்லை.

கனம் நீதிபதி அவர்களே! இந்த ஒன்பது அம்சங் களின் அடிப்படையில், இஸ்ரேல் நிரபராதி என்ற முடிவுக்கும் கோர்ட்டார் வரலாம். கோர்ட்டார் உத்தர விட்டால் இந்த வழக்கை நான் சர்க்கார் சார்பில் வாபஸ் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.''

ஃ ஃ ஃ

கம்மிங்ஸ் தம் பேச்சை நிறுத்தினார். நீதிபதி உட னடியாக வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ள அனுமதி கொடுத்து விட்டார். ஹாரால்ட் இஸ்ரேல் விடுதலை அடைந்து வெளியே நடந்தான்.

பாதிரியாரின் உயிரைப் போக்கியவன் அகப்படவே இல்லை. ஆனாலும் ஒரு நிரபராதி தண்டனை அடையாமல் தப்பினான் என்று பிரிட்ஜ்போர்ட் மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

கம்மிங்ஸின் இந்தப் புகழ்பெற்ற நீதி ஸ்தலப் பேச்சு பிரசித்தமடைந்தது. வழக்கில் வெற்றி பெறுவதைவிட உண்மைக்கு மதிப்புத் தருவதே முக்கியம் என்பதை உணர்த்தும் வகையில் கம்மிங்ஸின் வாதங்கள் சட்டம் படிக்கும் மாணவர்களுக்கெல்லாம் வழிகாட்டும் பாட மாக வைக்கப்பட்டது. உண்மை கற்பனையைவிடப் பிர மிப்பூட்டக்கூடியது என்பதை இந்தச் சம்பவம் நிரு பித்தது.

(ஆங்கிலக் கட்டுரை ஒன்றை ஆதாரமாகக் கொண்டு எழுதியவர் :

— பட்டினத்தார்)

மரணம் எப்படி இருக்கும் ?

இத்தாலியில் தற் கொலை புரிந்துகொண்ட இயோவானு மோல்டினி என்னும் தொழிலதிபர் தாம் மாத்திரைகள் உட் கொண்டதிலிருந்து மர ணம் அடைவதற்குள் ளாகத் தம் உடல் நிலை எப்படி இருந்தது என்ப தற்குக் குறிப்பு எழுதி வைத்துவிட்டுச் சென் றார். அவர் கூறாதது தாம் தற்கொலை செய்து கொண்டது எதற்காக என்பதைத்தான்.



மணி 4-08: ''மாத் திரையின் விளைவுகள் ஆரம்பமாகின்றன. இத யம் மிக வேகமாகத் துடிக்கிறது. நிமிஷத் துக்கு 142 முறை வீதம் துடிக்கிறது. இருந்தா லும் என்னால் எழுத முடிகிறது.''

மணி 4-10: ''என் நாக்கு கெட்டியாகிவிட் டது. இருந்தாலும் என் னால் நன்றாகப் பேச முடியும்.''

மணி 4-13: ''நிலை குற்றுவது போல் இருந் தாலும் கால்களால் தாங் கிக்கொள்ள முடிகிறது. படுக்கையில் உட்கார்ந்து எழுந்திருக்க முடிகிறது. கைகளை வழக்கம்போல் இயக்க முடிகிறது.''

மணி 4-15: ''நான் எழுந்திருக்கும்போது..''

மணி 4........

ஆதாரம்: 'பர் மிரால் ஜர்னல்'
தகவல்: வி. ந. ஸ்ரீதரன்

தலைமை தாங்கத் தலைவர் தேவை!

ஒரு பள்ளிக்கூடத்தில் ஆண்டுவிழாவின் தேதி நெருங்கிக் கொண்டிருந்தது. விழாவுக்குத் தலைமை வகிக்க யாரைக் கூப்பிடுவது என்பதை யோசிக்க ஆலோசனைக் கமிட்டி அங்கத்தினர்கள் கூடினார்கள்.

''நர்கிஸ் ஊரில் இருப்பதாகத்தான் தெரிகிறது. அவளைக் கேட்டுப் பார்ப்போமா?'' இளம் ஆசிரியரான கர்ணுட் யோசனை சொன்னார்.

''விளையாடாதீர்கள். 'ஸீரியஸா'ன விஷயத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காகக் கூடியிருக்கிறோம்!'' தலைமையாசிரியர் கண்டித்தார்.


''நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை. 'ஸீரியஸா'கத்தான் சொல்லுகிறேன். வருடத்துக்கு ஒரு விழா. அதை வெற்றிகரமாகவும் கொஞ்சம் தடபுடலாகவுமே கொண்டாடுவோமே!''

''நீங்கள் சொல்வது முற்றிலும் சரி.''

''முந்தாநாள் ராமாராவை அகஸ்மாத்தாகச் சந்தித்தேன். நமது பள்ளிக்கூட விழாவைப் பற்றியும் பேச்சு அடிபட்டது. நமது நிகழ்ச்சிகளைப் பற்றிக் கொஞ்சம் தரம் இறக்கிப் பேசினான்'' என்று கேசவராவ் சேர்ந்து கொண்டார்.

முதலில் பேசிய கர்ணுட் மீண்டும் சொல்லலானார். ''ஜனங்கள் ஏன் நம்மைக் கேலி செய்ய மாட்டார்கள்? போன வருஷம் பெரிதாகப் பந்தல் போட்டு ஏசப்பட்ட நாற்காலிகளைப் பரப்பினோம். நடந்தது





அரசாங்கச் செலவைக் குறைக்க 'டைம் அண்ட் டைட்' என்ற லண்டன் பத்திரிகையில் வாசகர் ஒருவர் யோசனைகள் சொல்லும் போது இப்படி எழுதுகிறார்: ''இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மக்களிடமிருந்து வரியைக் கறப்பதற்காக வருமான வரிச் சட்டத்தில் உள்ளவை போன்ற கடுமையான விதிகளை நம் நாட்டுச் சட்டத்திலிருந்து நீக்கிவிட வேண்டும்.''

— பாபு.



என்ன? கால்வாசிப் பந்தலும் நிறையவில்லை. தலைமைக்குக் கூப்பிட்ட மனிதரோ மகா மோசம். அவரை எதற்காகத் தேர்ந்தெடுத்தோம் என்பது எனக்கு இன்னமும் விளங்காமலேயே இருக்கிறது.''

''நான் என்னத்தைக் கண்டேன்? எல்லாப் பத்திரிகைகளிலும் மேற்படியாரின் சஷ்டியப்தபூர்த்தியைப் பற்றிப் படங்களுடன் நிறையப் போட்டிருந்தார்கள். மிக முக்கிய மானவராக இருக்க வேண்டும் என்று எண்ணினேன். கூப்பிட்டவுடனேயே ஒப்புக் கொண்டுவிட்டார். போன வருஷத்தை மறந்து விடுங்கள். இவ்வருஷ விழாவுக்கு யாரை அழைப்பது என்பதை உடனடியாகத் தீர்மானித்தாக வேண்டும். அழைப்புக்களை இரண்டு நாட்களுக்குள் அச்சடிக்கக் கொடுத்தாக வேண்டுமே?'' என்று தலைமையாசிரியர் கவலையுடன் கூறினார்.

யாரைக் கூப்பிடுவதென்பது ஒரு பிரச்னையாகவே இருந்தது.

மந்திரிகளில் யாரையாவது கூப்பிடுவதா அல்லது வேறு யாரையாவது போய்ப் பார்ப்பது உசிதமாயிருக்குமா? எதிர்க் கட்சிக்காரர்களைக் கூப்பிட்டால் அவர்கள் அழகாக, சற்றுக் காரசாரமாகப் பேசுவார்கள். கேட்பதற்கு அலுப்புத் தட்டாமல் இருக்கும். ஆனால் ஆளும் கட்சியின் அதிருப்திக்கு அனாவசியமாக இடம் கொடுப்பானேன்? எதிர்க் கட்சிகளிலிருந்து தலைவரைப் பொறுக்கும் யோசனை கைவிடப்பட்டது.

கர்னாட் தமது யோசனையை விடாமல் வற்புறுத்தினார். ''நர்கிஸின் பெயரைக் கேட்டு நாம் ஏன் மிரள வேண்டும்? அவள் நமது நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தாளானால் நமது பள்ளிக்கூடத்துக்கு எவ்வளவு பெருமைப் படக்கூடிய விஷயமாக இருக்கும்! ஒரு பத்திரிகை விடாமல் எல்லாத் தினசரி — வார — மாதாந்திரப் பத்திரிகைகளிலும் ஆசிரியர்கள் குழாமுடன் படங்கள் வெளிவருமே. அதை யோசியுங்கள். டிக்கட்டுகள் மூலம் நிகழ்ச்சிக்கான செலவையும் நீக்கிப் பள்ளிக்கூடத்துக்காக நிறையப் பணம் புரட்டலாமே?''

''அவள் இருப்பிடம் உங்களில் யாருக்காவது தெரியுமா? யார் போவீர்கள்?'' என்று தலைமை ஆசிரியர் கேட்டார்.

''அவர் சர்க்கார் விருது பெற்றவராயிற்றே? செகரடேரியட்டுக்கு டெலிபோன் செய்தால் உடனே விலாசம் தெரிகிறது. அட, யாரையுமே கேட்க வேண்டாம். டெலிபோன் டைரக்டரி இருக்கவே இருக்கிறது.''

ஆயினும் என்ன காரணத்தாலோ தலைமையாசிரியருக்குப் பிரபல நட்சத்திரத்தைக் கூப்பிடுவதில் உற்சாகம் உண்டாகவில்லை. யோசனை கைவிடப்பட்டது.

''வேறு யாரையாவது யோசிப்போம்.''

''வந்து... வந்து...'' ஸ்ரீமான் ஆப்டே ஏதோ சொல்ல முன்வந்தார்.

''நமது பழைய கணக்கு வாத்தியார் இப்போது ரிடையர் ஆகிவிட்டாரே— ஸ்ரீமான் கோரே குருஜி? — அவரைக் கூப்பிட்டுப் பார்த்தாலென்ன? போன வருஷம் தில்லியில் சன்மானம் பெற்ற பல ஆசிரியர்களில் கோரே குருஜியும் ஒருவர்.''

''ஐய, வேண்டவே வேண்டாம். தில்லியில்தானே அவருக்குச் சன்மானம் கிடைத்தது? நமது ஊரில் இல்லையே? போயும் போயும் ஒரு வாத்தியாரையா கூப்பிடுவது? அதுவும் கோரே குருஜியை?'' ஏகமனதாக ஆலோசனை நிராகரிக்கப்பட்டது. ஸ்ரீ ஆப்டேக்கு மன வருத்தம்.

''அப்படியானால் பட்டணத்தில் பெரிய புள்ளியாக இருக்கும் சேட்... அவரைக் கூப்பிடுங்கள். முக்கிய தெருக்களிலெல்லாம் அவருடைய கடைகள்தான் இருக்கின்றன. நிறையப் பணமும் கொடுப்பார்.'' பேச்சில் கொஞ்சம் கிண்டல் இருந்தது.

பிறகு எழுத்தாளர்களில் யாரையாவது கூப்பிட்டுப் பார்க்கலாமென்ற யோசனை எழுந்தது. எழுத்தாளர்களில் பல ரகத்தினர் — நாடக ஆசிரியர், நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், இலக்கிய பண்டிதர்— பொருளாதார, வைத்திய, மனோதத்துவ, அரசியல் நிபுணர்களெனப் பலர் இருப்பதால் அந்த யோசனையும் கைவிடப்பட்டது. யாரைத் தேர்ந்தெடுப்பது?

கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது. ஆலோசனைக் கமிட்டியின் ஓர் அங்கத்தினர் நகர சபையில் கவுன்சிலராக இருந்தார். தமது கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, ''சீக்கிரம் முடிவு செய்யுங்கள். எனக்கு ஒரு மீட்டிங் இருக்கிறது'' என்றார்.

தலைமையாசிரியரின் முகம் திடீரென்று பிரகாசம் அடைந்தது. விரல்களைச் சொடுக்கி ''ஐடியா'' என்றார்.

ஒரே குரலில் எல்லோரும் ''சொல்லுங்கள்'' என்றார்கள்.

''மேயர் பதவிக்குப் போட்டியிடவிருக்கும் நாகப்பா அவர்கள். கல்வித் துறையில் புல

ருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. கல்வி இலாகாவிலும் இருக்கிறார். நமக்கு உதவி செய்வார்'' என்று தலைமை ஆசிரியர் கூறினார்.

''மேயர் போட்டியில் நாகப்பா வெற்றி பெறுவார் என்பது என்ன நிச்சயம்?'' சிலருக்குச் சந்தேகம் தோன்றிற்று.

''நாகப்பாதான் வெற்றி பெறப் போகிறார். பார்த்துக் கொண்டே இருங்கள்.'' தலைமையாசிரியர் சமாதானம் சொன்னார்.

நாகப்பா அவர்களைக் கூப்பிடுவது என்பது எல்லோருக்கும் சம்மதமாக இருக்கவே அவ்வண்ணமே தீர்மானித்தார்கள்.

தலைமையாசிரியரின் கடிதத்துடன் மறுநாள் கர்னாட், ஆப்டே இருவரும் நாகப்பாவைத் தங்கள் பள்ளிக்கூட வருடாந்திர விழாவுக்குத் தலைமை வகிக்க அழைத்தார்கள். அவரும் தமது 'எங்கேஜ்மெண்ட்' நாளை ஆலோசித்துத் தடையொன்றும் இல்லாமல் இருக்கவே அழைப்பை ஒப்புக் கொண்டார்.

அம்மாதம் இருபத்தி நான்காம் தேதி பள்ளிக்கூட ஆண்டுவிழா ஸ்ரீ நாகப்பாவின் தலைமையில் பல அழகான நிகழ்ச்சிகளோடு நடைபெறவிருப்பதாக அழைப்புத் தாள்கள் பிரமாதமாக அச்சிடப்பட்டு வந்துவிட்டன. அவைகளைப் பள்ளிக்கூட நிர்வாகிகள் வெகு கவனத்துடன் பல முக்கியமானவர்களுக்கு அனுப்பினார்கள். பிறகு விழாவுக்கான ஏற்பாடுகளும் வெகு நன்றாகச் செய்யத் தொடங்கினார்கள். பள்ளிக்கூடத்தின் பக்கவாட்டமாகப் பெரிய பந்தல் போட்டு வர்ணக் காகிதங்களாலான பூக்களால் அலங்கரித்தார்கள். வாயிலிலிருந்து பந்தல்வரை பாதையின் இரு புறங்களிலும் பூந்தொட்டிகள் வைத்துத் தோரணங்கள் கட்டியாயிற்று. பந்தலில் நிறைய நாற்காலிகளும் போட்டு, மேடையிலும் உயர்ந்த விரிப்புகளும் திரைச்சீலைகளும் போட்டார்கள். மைக்குக்கும், சிற்றுண்டி—குளிர் பானங்களுக்கும் ஆர்டர் கொடுத்தார்கள். எல்லாம் தலைமை ஆசிரியரின் சொந்த மேற்பார்வையிலேயே நடந்தன. ஏற்பாடுகள் வெகு நன்றாக அமைந்துவிட்ட திருப்தியுடன் தலைமை ஆசிரியர் இரவில் மன அமைதியுடன் தூங்கி எழுந்தார். மற்ற ஆசிரியர்களும் இந்த விழாவுக்குப் பிறகு மறு வருஷம் வரை ஓய்வு என்று ஆனந்தத்தில் மூழ்கியிருந்தார்கள்.

அடுத்த நாள் கொஞ்சம் நிதானமாகவே தூக்கத்திலிருந்து எழுந்த தலைமையாசிரியர் காலைப் பத்திரிகையைப் புரட்டிப் பார்க்கலானார். ''இன்றைய நிகழ்ச்சிகள்'' பத்தியில் அவரது பள்ளிக்கூட நிகழ்ச்சியும் 'அச்சுப் பிழை ஒன்றும் இல்லாமல் வெளிவந்ததைப் பார்த்துச் சந்தோஷமடைந்தார். வேறு செய்திகளைப் படிக்க ஆரம்பித்தார். ஒரு செய்தித் தலைப்பைப் படித்ததும் ஒரு கணம் செயலற்றுப் போய்விட்டார். ''கார்ப்பரேஷன் கூட்டத்தில் கலாட்டா. கைகலப்பில் மேயர் பதவிக்குப் போட்டியிடவிருக்கும் நாகப்பா உட்படப் பலருக்குக் காயம். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்'' என்று பெரிய எழுத்துக்களில் போடப்பட்டிருந்தது.

அவர் கதிகலங்கி நின்ற அதே சமயம் அவரது சக ஆசிரியர்கள் சிலர் வந்து சேர்ந்தனர். நிலைமையைச் சமாளிப்பதற்கு கோரே குருஜியை அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைத் தலைமை ஆசிரியருக்குத் தெளிவாக எடுத்து விளக்கினார்கள். எல்லோரும் அடுத்த அரை மணி நேரத்துக்குள் கோரே குருஜியின் வீட்டுக்குச் சென்று விழாவுக்குத் தலைமை வகிக்க அவரை வற்புறுத்தி வேண்டிக் கொண்டார்கள். அவரும் இணங்கினார்.

மாலையில் வருடாந்திர விழா மிக வெற்றிகரமாக நடந்தது. நிறையப்பேர் வந்திருந்தார்கள். சில வாக்கியங்களே பேசுவதாயிருந்த கோரே குருஜீ நீண்ட சொற்பொழிவு நடத்தினார். அதற்குக் காரணம் சில மாணக்கர்கள் அவரிடம் காகிதத் துண்டு ஒன்றில் ''தயவுசெய்து நீண்ட நேரம் பேசுங்கள். எங்கள் ஒத்திகைக்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டியிருக்கிறது'' என்று விண்ணப்பித்துக் கொண்டதுதான்!

[''காதம்பினி''யில் வெளிவந்த வைஜயந்தி காலே என்பவரின் மராட்டிக் கதையைப் பின்பற்றித் தமிழில் எழுதியவர் லக்ஷ்மி தேவ்தாஸ் காந்தி.]

அட்டைப்பட விளக்கம்

ரோஜா மலரும் வண்ணாத்துப் பூச்சியும்

''ரோஜா மலரே! நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்! செக்கச் சிவந்த இதழ்கள்! உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நறுமணம்! எல்லாவற்றையும்விட மயக்கம் தரும் இன்னறும் தேன்! ஆகா....!''

''வண்ணாத்துப் பூச்சியாரே! நீரும்தான் எவ்வளவு அழகாக இருக்கிறீர்! உமது சிறகுகளில் எத்தனை வண்ணங்கள்! அதனைவிட எத்தனை அழகான கோலங்கள்! பார்ப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தும் அழகல்லவா உங்கள் அழகு!''

''அப்படியானும் ரோஜாப் பெண்ணே! என்னைக் கண்டால் உனக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்லு....!'' என்றது வண்ணாத்துப் பூச்சி.

''இதை வேறு வாய்விட்டுச் சொல்வார்களாக்கும்.... உக்கும்...'' என்று ரோஜாப் பெண் முகத்தைப் பொய்க் கோபத்துடன் திருப்பிக் கொண்டது.

அதுவரை மலரை சிங்காரமிட்டுச் சுற்றிவந்த வண்ணாத்துப் பூச்சி, ''கோபித்துக் கொள்ளாதே, கண்ணே!'' என்று சொல்லி மலரில் அமர்ந்து தேனை உறிஞ்சியது. ரோஜாப் பெண் இவ்வுலகை மறந்தது!

''சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை!'' —பாரதியார்

வண்ணப் படம்: ஆர். பி. எஸ். மணி

ஒரே ஒரு வேண்டுகோள் !

புகை பிடிப்பதால் புற்று நோய் வரும் என்கிற எண்ணத்தைத் தகர்த்தெறிய வேண்டுமென்று அமெரிக்காவில் சிகரெட் தயாரிக்கும் ஒரு கம்பெனியார் ஆசைப் பட்டார்கள். டெல்லையி மன்னார்குடியில் ஒரு கிழவனார் எண்பது வருடங்களாகச் சிகரெட் பிடித்து வருகிறார் என்று கேள்விப் பட்டதும், தங்கள் பிரதிநிதியை அனுப்பி வைத்தார்கள், கிழவரைப் பேட்டி கண்டு வருவதற்காக.

''தாத்தா ! நீங்கள் உண்மையிலேயே எண்பது வருடங்களாகப் புகை பிடிக்கிறீர்களா??'' என்று ஆரம்பித்தார் பிரதிநிதி.

''ஆமாம்!'' என்று தலையாட்டினார் கிழவர்.

''புற்று நோய் ஒன்றும் உங்கள் கிட்டத் தில்கூட அணுகியது கிடையாது என்று கேள்விப்பட்டோம் !''

''உண்மைதான் !''

''இந்த ஊரை விட்டு நியூயார்க் அல்லது வேறெங்காவது போயிருக்கிறீர்களா நீங்கள்?''

''கிடையாது !''

''ஜெட் விமானத்தில் பிரயாணம் செய்ததுண்டா ?......''

''இல்லை; ஆனால் பிரயாணம் செய்ய வேண்டும் என்கிற ஆசை மட்டும் நிறைய உண்டு!....''

''வால்டிராப் ஹோட்டலில் தங்க வேண் டும் என்று ஆசைப்பட்டிருக்கிறீர்களா ?....''

''ஆசைப்பட்டு என்ன பிரயோஜனம்? எனக்கு ஏது அதற்கெல்லாம் வாய்ப்பு ?''

''கவலைப்படாதீர்கள்! நீங்கள் ஆசைப் பட்டதெல்லாம் நடக்கப் போகிறது.... என்னுடன் நியூயார்க்குக்கு வரப் போகி றீர்கள்.... ஜெட் விமானத்தில்தான்.... 'வால்டிராப்'பில் சொகுசாகத் தங்கப் போகிறீர்கள்.... அத்தனையும் எங்கள் கம்பெனிச் செலவு.... அப்புறம் நாமே மறுநாள் காலை பத்து மணிக்கு டெலி விஷனில் காட்டியளிக்கப் போகிறீர்கள்.... எண்பது வருடங்களாகச் சிகரெட் பிடித் தும் புற்றுநோய் வராத அதிசய மனிதராயிற்றே நீங்கள்! அதனால் எங்கள் கம்பெனி டெலிவிஷன் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப் போகிறது.''

''ஒரே ஒரு வேண்டுகோள்: டெலிவிஷ னில் தோன்றுவதை மத்தியானமாக வைத்துக் கொள்ளுங்களேன். காலையில் வேண்டாம்!''

''ஏன்?....''

''காலையிலே ஆரம்பித்தால் பிற்பகல் ஒரு மணி வரை என்னுடைய பாழாய்ப் போன இருமல் ஓய்வதில்லை. அதற்காகத் தான் சொல்கிறேன்!'' - எஸ். வி. ஆர்.





''முதல் தேதி வந்துவிட்டது என்றோ, முப்ப தாம் தேதி ஆகிவிட்டதே என்றோ மூக்கால் அழும் பழக்கம் எனக்கு எப்போதுமே கிடையாது ஸார்!''

''ஆமாம்! பத்து வருஷமா நானும் பார்த்துக் கொண்டுதான் வருகிறேனே ! எந்தத் தேதியிலும் நீங்கள் ஒரே மாதிரிதான் தவிக்கிறீர்கள். பாவம் !''

லபோர்.


ஆட்டுத் தமிழ் !

நாட்டுத் தமிழ், எட்டுத் தமிழ், பாட்டுத் தமிழ் என்றெல்லாம் தமிழை வகைப்படுத் திச் சொல்கிறார்களே அதுபோல், ஆட்டுத் தமிழ் என்றும் ஒன்றும் சென்னைப் பக்கங் களில் உண்டு தெரியுமா ?

'என்னமே, நான் சொல்லிக்கினே இருக் கேன் ; நீ குந்திக்கினே இருக்கியே ! புரியலி யாமே ! போமே ; வேலையைப் பாருமே !''

- தமிழ்முகன்

தமிழ் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் உள்ள அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தர் களில் மாணவன் பேருக்கு நேரே பெருக்கல் அடையாளம் போட்டிருந் தால் அவன் ஆஜர் என்று அர்த்தம். புதுவைப் பள்ளி அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தர்களில் மாணவன் பெயருக்கு நேரே கூட்டல் அடையாளம் போட் டிருந்தால் பையன் பள்ளிக்கு வர வில்லை என்று பொருள். முன்னது ஆங்கில முறை ; பின்னது பிரெஞ்சு முறை. புதுவைப் பள்ளிகளுக்கு வாரத்தில் ஒன்றரை நாட்கள் விடு முறை. வியாழன் மதியமும் ஞாயிறு அன்றும். - சக்கிரபுத்தி



ஏணிமரம்

மன்னார்குடி விசுவநாதன்



சபேசன் சொன்ன செய்தியைக் கேட்ட ஆளவந்தார் சற்று நேரம்வரை எதும் பேசாமல் யோசனையில் ஆழ்ந்து விட்டார்.

தன்முன் திவானில் உட்கார்ந்துவிட்ட பிரபல கண்டிராக்டர் ஆளவந்தாரைப் பிடித்து உலுக்கிய சபேசன், மீண்டும் தான் முதலில் சொன்ன செய்தியைச் சொன்னான்: ''என்னங்க... இது பெரிய கண்ட்ராக்ட். மொத்தம் பத்து லட்சம் தருவாங்க... உங்க சர்வீஸிலே இதுமாதிரி பெரிய கண்டிராக்ட்டை நீங்க எடுத்திருக்க மாட்டீங்க... நீங்க மட்டும் மனசு வைச்சு முயற்சி பண்ணினால் கண்டிப்பா உங்களுக்கே கிடைக்கும். டெண்டர் நோட்டீஸ் இப்பத்தான் வந்திருக்கு. அப்ளிகேஷன் நாளை மறுநாள் வரைக்கும் கொடுக்கலாம். இந்நேரம் ரொம்பப் பேர் 'அப்ளிகேஷன்' கொடுத்திருப்பாங்க...''

மெல்லக் கனைத்துக் கொண்டே தம் இருக்கையினின்றும் எழுந்து நின்ற ஆளவந்தார் இன்னும் யோசனை கலையாமலே தமது பிரும்மாண்டமான மாளிகையின் வெளித் தாழ்வாரத்தில் மெல்ல நடை போடலானார். தம்முடைய ஜிப்பாவினுள் கையை விட்டுத் துழாவி ஒரு சுருட்டை எடுத்து வாயில் வைத்தார். பக்கத்தில் விரைந்து வந்த சபேசன் நெருப்புக் குச்சியைப் பற்ற வைத்து அவர் சுருட்டுப் பிடிக்க உதவினான்.

சுருட்டுப் புகையை நன்றாக இரண்டு மூன்று தடவை உள்ளுக்கு இழுத்து வெளியே விட்ட பின் ஆளவந்தார் சபேசன் பக்கம் திரும்பினார். ஆளவந்தார் எந்தப் பக்கம் திரும்பினாரோ அந்தப் பக்கம் சபேசனின் கண்கள் திரும்ப வேண்டியதாயிற்று. ''ஏம்பா நீ சொல்றது சரி. அந்த டிபார்ட்மெண்டிலே 'கண்டிராக்ட்' வாங்குறது ரொம்பக் கஷ்டமாச்சே! முனிசிபாலிடி, பஞ்சாயத்து யூனியன் — இதுதான் நமக்குச் சுலபம். நேரடியா 'சர்க்கார் கண்டிராக்ட்', இதுமாதிரி பெருந்தொகை நமக்குச் சுலபமா கிடைக்குமா?''

பேசிக் கொண்டே தாழ்வாரத்தின் இடது கோடியிலிருந்து வலது கோடிவரை சென்ற ஆளவந்தார், வலது கோடி மூலையில், தாழ்வாரத்தின் எதிரில், மணலில் போடப்பட்டிருந்த ரோஜாப் பதியனின் பக்கமிருந்து மென்மையான சுகந்தம் பரவியதை அனுபவித்தவாறு அங்கேயே நின்று இரண்டு மூன்று முறை சுருட்டுப் புகையை இழுத்து விடலானார்!

சபேசன் அட்டையைப் போல் ஒட்டினான்: ''என்னங்க... நீங்களே இப்படிச் சொல்றீங்க! நீங்க அந்த டெண்டரை எடுத்தால் ஏதோ பி. ஏ. படிச்சுட்டு வேலை வெட்டி இல்லாமே சுத்திக்கிட்டிருக்கிற எனக்கும் ஏதாவது வேலை கொடுப்பீங்கன்னு பார்க்கிறேன்; மேலும் கண்டிராக்ட் கண்டிப்பா உங்களுக்குக் கிடைக்கும். வழக்கம்போல் பெற வேண்டிய முறையிலே பெற்றுவிடலாம். ஆனால்... தொகை கொஞ்சம் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கும்'' என்று சொல்லிவிட்டுக் கண் சிமிட்டினான் சபேசன்.

அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார் ஆளவந்தார். ''என்னப்பா சபேசா! நீ பெரிய வியாபாரி மகன். ஏதோ... கால வித்தியாசத்தாலே கொடுக்கத் தெரியாமல் கொடுத்து அகப்பட்டுக்கிட்டு இப்ப உங்க அப்பா ஜெயில்லே இருக்காரு. அதனாலே நீ கஷ்டப்படறே. அது எனக்குப் புரியுது

ஆனா உங்க அப்பாவைக் கைது செய்த அதே பெரிய அதிகாரி இன்னும் சென்னையிலே தானே இருக்காரு? நாம நேரடியா சர்க்கார் கிட்டப் போறோம். ஒருவேளை ஏதாச்சும் நடந்துட்டுதுன்னா... இப்ப நீ என் முன்னாடி கையேந்தி நிக்கிற மாதிரி என் ஒரே மகன் ரவி இன்னொருத்தன் முன்னாடி கையேந்தி நிக்கும்படி ஆகிவிடாதா?''

சபேசன் சமாளித்துக் கொண்டான். ''சரிங்க. இதுக்கு மேலே நான் ஒண்ணும் சொல்ல விரும்பலே. தொகை பத்து லட்சமாச்சுன்னு சொல்ல வந்தேன். நான் வர்றேன்...''

வெளி வாயிலைக் கடந்து செல்ல முற்பட்ட சபேசனை ஆளவந்தாரின் குரல் தடுத்து நிறுத்தியது. ''நில், சபேசா...''

காரோட்டியின் கையில் அகப்பட்டு வளையும் 'ஸ்டீயரிங்'கைப் போலச் சடக்கெனத் திரும்பினான் சபேசன். வளைவு வந்தால் கார் திரும்பித்தானே ஆகவேண்டும்? கையூட்டு கொடுத்தே காலமெல்லாம் காரியத்தைச் சாதித்துக் கனவானாகிக் 'கன்ட்ராக்ட்' தொழிலில் கணக்கில்லாப் பொருள் தேடிச் சுவை கண்ட ஆளவந்தார், வலிய வரும் சீதேவியை இப்போது மட்டும் வேண்டாமென்றா சொல்லுவார்?

தம்மை நெருங்கி வந்த சபேசனை விழித்துப் பார்த்து முகத்தில் வலிந்து வரவழைத்த புன்னகையோடு, கைவிரலில் அணைந்தும் அணையாமலும் சாம்பல் கோத்து நின்ற சுருட்டை விட்டெறிந்து விட்டு, எச்சிலையும் காறி உமிழ்ந்த பின், அருகே கிடந்த ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தார் ஆளவந்தார். இன்னொரு பிரம்பு நாற்காலியின் பக்கம் கையைக் காண்பித்துச் சபேசனை அதில் அமரும்படி சைகை மூலம் சொன்னார்.

''சபேசா! இப்ப மொதல்லே என்ன செய்யணும்? அதைச் சொல்லு...'' என்றார் ஆளவந்தார்.

''வேறே ஒண்ணுமில்லே... நம்ம பேப்பரைக் கையிலே எடுத்துக்கிட்டுக் கரன்ஸிக் கட்டு பத்தாயிரத்தைப் பையிலே வச்சுக்கிட்டுப் போயி டிபார்ட்மென்ட் பி. ஏ.வைச் சந்திச்சு விட்டால் எல்லாம் சரியாகிவிடும். கன்ட்ராக்ட் ஆர்டர் நமக்குக் கிடைத்து விடும்.''

''நேரடியா மேலிடத்துக்குப் போகிறோம். அதனாலேதான்...''

''நீங்க அதைப் பத்தியெல்லாம் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம்... நான் சொல்ற அந்த அதிகாரி இளம் வயசு. இப்பத்தான் புதுசா 'அப்பாயின்ட்மென்ட்' ஆகி வந்திருக்கான். ரொம்பப் படிச்சவன்தான். அதே சமயத்தில் கை நிறைய வாங்குகிறதாகவும் கேள்வி. நீங்க எதைப் பத்தியும் கவலைப்படாமே நான் சொன்னபடி எல்லாம் தயார் பண்ணிக்கிட்டுத் தயாராக இருங்க. நான் போயி, அந்த அதிகாரியை நேரிலே கண்டு அவன் சொல்றதைக் கேட்டுக்கிட்டு வந்துடறேன்...''

''அப்படியே செய்.''

முடிவாகத் தன் பக்கம் வெற்றி கிட்டியதில் அளவு கடந்த மகிழ்ச்சி யடைந்த சபேசன், தன் இதயத்தின் திட்டமெல்லாம் செவ்வனே நடந்தேறி வருகிறதேயென்ற மன நிறைவோடு படியிறங்கி வெளியே நடந்தான்.

வாயில் கேட்டைத் தாண்டிக் கொண்டு திரும்பிய சபேசன் அப்படியே சுவரில் அடித்த ஆணி போலச் சற்று நேரம் நின்றுவிட்டான். அழகின் வடிவம் யாவும் அமைந்து உருவமான பெண் அணங்கு ஒருத்தி — தோற்றத்தில் ஏழைமை நிலையில் — அந்த வீட்டுக் காம்பவுண்டினுள் அநாயாசமாக நுழைந்து கொண்டிருந்தாள், சபேசனைத் தன் விழிகளால் வெட்டியவாறே! நிச்சயம் அவள் அந்த வீட்டு வேலைக்காரியாகத்தான் இருக்க முடியும்! வேலைக்காரியில் இப்படியோர் அழகியும் இருக்க முடியுமா? உள்ளபடியே கணநேரம் அந்தத் தந்த மேனியாளின் எழில் உருவில் சொக்கி நின்றுவிட்டான் சபேசன்! திரும்பியபோது வெளித் தாழ்வாரத்தில் நின்ற வண்ணம் ஆளவந்தார் இன்னமும் தன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து உள்ளத்தின் எழுச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு அப்பால்நடந்தான்.

''அப்பா, பேப்பர் பார்த்தீங்களா?''

''இல்லியே! ஏண்டா! ஏதாச்சும் பெரிய டெண்டர் விளம்பரம் வந்திருக்கா?''

ஆளவந்தாரிடம் அவர் மகன் ரவி கேட்ட கேள்விக்கு அவர் கேட்ட எதிர்க் கேள்வியைச் செவிமடுத்த அவர் மகன் சிரித்தான். ஆனால் ஆளவந்தாரின் மனைவி கோமதியம்மாள் சீறி விழுந்தாள்:

''எந்த நேரமும் உங்களுக்குக் கன்ட்ராக்டைப் பத்தித்தான் நினைப்பா? ஏன் உங்களுக்கு இந்த ஆசை? இருக்கிற சொத்து போதாதா? மேலும் மேலும் தவறான வழியிலே ஏன் இப்படிப் பணம் சம்பாதிக்க நினைக்கிறீங்க? இது கொஞ்சம்கூட நல்லாயில்லே.''

தம் மனைவியின் கோபத்தைச் சற்று நேரம் வரைக்கும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த ஆளவந்தார் பதிலுக்குத் தம் மனைவியிடம் எதுவும் பேசுவதால் அப்போதைக்குப் பலனேதும் விளையாது என்பதை உணர்ந்து கொண்டார். தம் மகன் ரவியின் பக்கம் திரும்பி, ''என்ன ரவி, எஸ். எஸ். எல். ஸி. முடிவுதானே? காலை அஞ்சு மணிக்கே 'ஹிந்து' பேப்பர் பார்த்தேன். அதிலே உன் நம்பர் இருந்துச்சு. 'கன்கிராஜுலேஷன்ஸ்!' உனக்காகத்தானே நான் இவ்வளவு பாடு படுகிறேன். நீ இல்லேன்னு அப்புறம் எனக்கு என்ன இருந்து என்ன பயன்? சரி...மேலே என்ன படிப்புக்குப் போகிறதா உத்தேசம்?'' என்றார்.

தன் தந்தையின் சாமர்த்தியத்தை எண்ணிய ரவிக்கு ஆனந்தம் என்றால், தன் கணவனின் சாதுரியத்தை ரசித்த கோமதியம்மாளுக்குப் பேரானந்தம் ஏற்படாதா என்ன?

''மொதல்லே பி.யு. ஸி. முடிச்சுடறேன். அப்புறம் டாக்டருக்குப் படிக்கிறதா இல்லே இஞ்சினீயருக்குப் படிக்கிறதாங்கிறதை உங்க ரெண்டு பேருடைய முடிவுக்கும் விட்டுடறேன். இப்ப எனக்கு ஓய்வு தேவை. வர்றேன்.''

தம் மகனின் அளவான கண்ணியமான பேச்சைக் கேட்ட ஆளவந்தார் முற்றிலும்

சமுதாயத்தில் விவசாயத்தின் பங்கு சிறந்தது



விவசாயமே இந்த நாட்டின் உயிர் நாடி. இதில் ஈடுபடுவது ஓர் மகத்தான பணியாகும். நாட்டில் விவசாயம் செழிக்கவும், வேளாண்மை ஓங்கவும் கூட்டுறவு நாணய சங்கங்கள் பெரிதும் உதவுகின்றன.


டிராக்டர்கள், உயர் ரக விதைகள், சிறந்த உர வகைகள், நீர் இறைவைக் கருவிகள் போன்ற பல்வேறு விவசாயத் தேவைகளைப் பெற்றுப் பயனடையவும், விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்று இலாபமடையவும் விவசாயிகளுக்கு உதவ கூட்டுறவுகள் தயாராயுள்ளன.

எவ்வளவு சிறிய விவசாயிக்கும் உரிய சேவை கூட்டுறவில் உண்டு.

விவசாயப் பெருங்குடி மக்களே! அருகாமையிலுள்ள கூட்டுறவு சங்கத்தை அணுகுங்கள். உங்கள் தொழில் வளமடைய அது உதவி புரியும்.

சென்னை மாநில
கூட்டுறவு வங்கி லிமிடெட்
271, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை -1

R. கனகசபை, M.L.A. — தலைவர்
D. வர்த்தமானன் — காரியதரிசி



மன நிறைவு அடைந்தார்! தாம் எந்த வழியில் வளர்ந்தாரோ அந்த வழிகளைப் பற்றிய விமரிசனங்களை அவன் காதுபட அவர் பேசியதே இல்லை! அவனும், அதைப் பற்றிய அந்தரங்க, வெளிப்படை விசாரணைகளில் இன்று வரை ஈடுபட்டதே இல்லை! எனவே ஆளவந்தார் தாம் ஒரு சராசரி மனிதர் என்கிற முறையில் தவறான வழிமுறைகளைக் கடைப்பிடித்தவர் — கடைப்பிடித்து வருகின்றவர் என்கிற ரீதியில் மனச்சான்றின் குடைச்சலில் அவதிப்படுகிறவராயிருந்தும் கூட ஒரு நல்ல தந்தையாக இருக்கிறோம் என்கின்ற மன நிறைவில் பூரிப்படைந்தார்!

''என்னங்க, நம்ப ரவி ரொம்பத் தங்கமான பிள்ளைங்க. குணத்திலேயும் சரி, படிப்பிலேயும் சரி, பழக்க வழக்கங்களிலேயும் சரி, இவனைப் போல் ஒரு பிள்ளை நமக்குக் கிடைச்சது நாம் செய்த பாக்கியம்தான்'' என்று பெருமை பொங்கக் கூறினாள் கோமதியம்மாள்!

''யார் இல்லேன்னு சொல்ல முடியும் கோமதி! அந்த விஷயத்திலே நான் அதிர்ஷ்டக்காரன்தான்!'' என்றார் ஆளவந்தார், தமது கறுத்து அடர்ந்த மீசையைத் தடவியவாறே.

ஆனால்—

மறுகணம் தமது மனைவி கோமதியின் முகத்திலே கரிய நிழலாகப் படிந்த கவலையின் ரேகைகளைக் கண்ட ஆளவந்தார், மனம் பதறியவராய்த் தம் இருக்கையினின்றும் எழுந்து நின்று, ''கோமு... ஏன் மனம் கலங்குகிறே? என்ன விஷயம்?'' என்றார்.

தன் கணவரை நிமிர்ந்து பார்த்த கோமதியம்மாள், தன் கண்களில் துளித்த இரு சொட்டுக் கண்ணீரையும் மெல்லச் சுண்டி எறிந்தவாறு எதையோ நினைந்துக் கவலைப்பட்டதற்குரிய அடையாளமாக 'ச்சு...ச்சு...' என்று இரண்டு முறை ஓசை எழுப்பித் தன் ஆற்றாமையை வெளிப்படுத்தியவாறு எழுந்து நின்றாள்.

அஞ்சுகம் அங்கு வரவே, இருவரும் தங்கள் சோக நிலையை மாற்றி அமைத்துக்கொள்ளும் முயற்சியில் முழுதும் ஈடுபட்டார்கள்.

''இன்று என்ன கறி வைக்கலாம்? மார்க்கெட்டுக்குப் போகணும்.''

நேற்றுத்தான் வேலைக்கு வந்து சேர்ந்தாள் என்றாலும், அதற்குள் அந்தப் பெண் அந்த வீட்டு மனிதர்களின் குணாதிசயங்களைக் கூடியவரையில் சரியாகவே எடை போட்டு வைத்திருந்தாள். அதை நினைந்து 'இந்த வகையிலும் நாம் கொடுத்து வைத்திருக்கிறோம்' என்று உள்ளூறப் புளகித்தார் ஆளவந்தார். அதே சமயம் காரண காரியமின்றித் தம் அன்பு மனைவியின் முகம் இப்படி மாறியதே என்ற வேதனை நெஞ்சில் நெறிஞ்சி முள்ளாக வலியெழுப்ப வேதனையின் பிரதிபலிப்பு முகத்தில் நிழலாடாதவாறு மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார். பிறகு வேலைக்காரி ரஞ்சிதத்தைப் பார்த்து, ''ரஞ்சிதம்! இன்று கறி உன் விருப்பம்போல் செய். மார்க்கெட்டுக்குப் போய் வா'' என்றார்.

ரஞ்சிதம் அப்பால் சென்றதும் மனைவியின் பக்கம் திரும்பிய ஆளவந்தார், ''கோமு! அனாவசியக் கவலை திடீர்னு உனக்கு என்ன வந்திச்சு? சொன்னாத்தானே புரியும்?'' என்றார் இலேசான கண்டிப்புடன்!



''கேஸை இந்தத் 'தாடி' வக்கீலிடமே கொடு. நன்றாக 'வா-தாடி' 'வா-தாடி' ஜெயிப்பார்!''

''வேறே என்ன? குடம் பாலிலே துளி விஷம் மாதிரி, உங்க ஒடம்பிலே ஊறிப் போயிருக்கிற சில குறுக்கு வழிகள், இயமுறைகள் எப்ப அகலுமோன்னு எனக்குக் கவலையா யிருக்கு. நமக்கு இருக்கிற செல்வம் போதும். சூதாட்டக்காரன் மாதிரி மேலும் மேலும் பணம் சம்பாதிக்கணும்கிற வெறியிலே கையிலே சேர்ந்திருக்கிற பணத்தைக் கோட்டை விட்டுட்டுக் கடைசியிலே அபவாதத்துக்கு ஆளாயிடற மாதிரி உங்க நிலைமையும் ஆயிடக் கூடாதேன்னுதான் நான் கவலைப்படுகிறேன். இந்தக் கவலை தூக்கத்திலேகூட என்னைப் பிடுங்கித் தின்கிறது.''

''அட பைத்தியம்! அதெல்லாம் கவலைப் படாதே! இப்ப ஒப்புக்கொள்ளப் போற பத்து லட்சம் கண்ட்ராக்ட்தான் கடைசி. அதோட இந்தத் தொழிலுக்கே முழுக்குப் போட்டுடப் போறேன்...''

''ஆமாம். சூதாடுகிறவன் கூட இதுதான் கடைசி ஆட்டம்னு ஒவ்வொரு தடவையும் சொல்லிக் கொள்வானாம்.''

''கோமு! என் தொழிலைச் சூதாட்டம்னே நீ தீர்மானிச்சுட்டியா?''

''நேரான வழியிலே நீங்க கண்ட்ராக்ட் தொழில் நடத்தினால் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்காது. ஆனா... ஒவ்வொரு தடவையும் கண்ட்ராக்ட்டை உங்க வசப்படுத்திக்கிறதுக்கே நீங்க அதிகாரிகளுக்குக் கையூட்டு கொடுக்கிறீங்க. இது எவ்வளவு ஆபத்தான — தவறான காரியம்னு உங்களுக்குத் தெரியலியா?''

உள்ளே சென்ற ரவி, அப்போது அங்கே மீண்டும் வரவே, தம்பதியர் இருவரும் தங்கள் வாதப் பிரதிவாதங்களை நிறுத்தி விட்டு அமைதியுடன் நின்றனர்.

''என்ன ரவி... என்ன வேண்டும்?'' என்று கேட்டார் ஆளவந்தார் சட்டென்று;

''ஒண்ணுமில்லேப்பா...எந்தக் கல்லூரிக்கு 'அப்ளிகேஷன்' போடலாம்னு உங்களைக் கேட்க வந்தேன்...''

''உனக்கு எங்கே விருப்பமோ, அங்கே போடு! எதுக்கும் ரெண்டு மூணு கல்லூரி களுக்குப் போட்டு வை. பார்த்துக்கலாம்.''

''சரிப்பா. என் நண்பன் ரெண்டு மூணு அப்ளிகேஷன் கொடுத்தான். அதைப் பூர்த்தி பண்ணிக்கிட்டு வர்றேன்'' என்று சொல்லிக் கொண்டே மாடிப் படிகளில் விரைந்து ஏறித் தன் அறையை அடைந்தான் ரவி.

''சரி! கோமு! மணி பத்துக்கு மேல் ஆகுது. பத்து மணிக்கே வந்துடறதாச் சொன்ன சபேசனை இன்னும் காணோம். கண்ணாடி பீரோவிலே இருக்கிற தோல் பையிலே பத்தாயிரம் ரூபாய் கரன்ஸி நோட்டு இருக்கு. நான் வெளியே போறேன். ஒருவேளை சபே சன் வந்துட்டான்னு, அவன்கிட்ட அந்தப் பணத்தை எடுத்துக் கொடுத்து ஆகவேண்டிய தைக் கவனிக்கச் சொன்னதாகச் சொல்லு! நான் வர்றேன்.'' பேசிக்கொண்டே வீட்டை விட்டுப் புறப்பட்ட ஆளவந்தார், வாசலில் தயாராக நின்ற அம்பாஸிடர் காரை 'ஸ்டார்ட்' செய்தார்.

மணி பதினொன்று.

வேகமாக டாக்ஸி யொன்றில் வந்திறங் கிய சபேசன், தன்னுடன் காரிலிருந்து இறங் கிய மனிதரையும் இன்முகத்துடன் வர வேற்று அழைத்துக் கொண்டு ஆளவந்தாரின் பங்களாவினுள் நுழைந்தான்.

காய்கறி வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்த தங்கத் தளிர் மேனியாள் ரஞ்சி தத்தைக் கண்ட சபேசன், எல்லாவற்றையும் மறந்தான். அவளையே பார்த்தான். அவ ளைப் பின்தொடர்ந்தான். அடுக்களையின் உள்ளே நுழைந்த அவன் அங்கே கோமதி யம்மாளும் நின்று கொண்டிருந்ததைக் கண்டு விக்கித்துப் போனான். அவன் எதிர்பார்த்து எண்ணி வந்தது வேறு. அங்கே காட்சி யளிப்பது வேறு.

''சபேசா... இப்பத்தான் வர்றியா? உன் னைத் தேடிக்கிட்டு இப்பத்தான் வெளியே போயிருக்கார்... இங்கே வா! இங்கே வா..'' என்று சொல்லிக் கொண்டு பரபரவென்று நடந்து கூடத்துக்கு வந்தாள் கோமதியம் மாள். அங்கே உட்கார்ந்திருக்கும் மனிதரைக் கவனியாமல், கருமமே கண்ணாகி, கண்ணாடிப் பீரோவை நெருங்கித் தன் இடுப்பில் செருகியிருந்த சாவிக் கொத்தை எடுத்து அதிலிருந்து ஒரு சாவியினால் மட்டும் அந்தப் பீரோவைத் திறந்தாள். தோல் பையை எடுத்து அதிலிருந்த நோட்டுக் கற்றைகளை அள்ளிச் சபேசன் கையில் கொடுத்து, ''எண்ணிக்கொள். பத்தாயிரம் ரூபாய் இருக்கு. அவர் சொன்ன இடத்திலே கொடுத் திடு...'' என்று சொல்லிவிட்டுக் கொல்லைப் பக்கம் சென்று விட்டாள்.

கோமதியம்மாள் கொடுத்த நோட்டுக் கற்றைகளைக் கையில் வாங்கினாலும் சபேச னுக்கு எண்ணமெல்லாம் அடுக்களையினுள் ளேயே இருந்தது. அந்தத் தங்கத் தளிர் மேனியாளை ஒரு தடவையாவது ஆசை தீரத் தொட்டுத் தழுவிவிட்டால் போதுமென்ற நினைவே வெறியாக மாறி விட்டது. இது போன்ற கனவுகளில் மூழ்கித் திளைக்கும் கிழ்மகன்தான் அவன்! ஆதலால், என்ன முயன்றும் அவனால் அப்போது ரஞ்சிதத்தின் மேல் நோக்கிய தன் கண்களையும் கருத்தை யும் மீட்க இயலவில்லை.

'தடதட'வென்ற ஓசை கேட்டது. அதே சமயம் அடுக்களையினுள் நுழைய வாசற்படி வரை சென்றுவிட்ட சபேசன் தலை நிமிர்ந்து பார்த்தான். ஆளவந்தாரின் செல்ல மகன் ரவி மாடியினின்றும் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தான். சட்டென்று ஒரு யோசனை சபேசனின் உள்ளத்தில் பளிச்சிட்டது. ''ரவி! ஒரு நிமிஷம் இங்கே வரணும்'' என்றான்.

அவனை ஏற்கனவே தெரிந்திருந்த ரவி விரைந்து வந்து அவனை நெருங்கினான். நோட்டுக் கற்றைகளை அவன் கையில் திணித்த சபேசன் டெண்டர் அப்ளிகேஷனை யும் அவனிடமே கொடுத்து, கூடத்தின் மையத்தில் உட்கார்ந்திருந்த மனிதரைச் சுட்டிக் காட்டி, ''அதோ அவரிடம் இவை களைக் கொடுத்துவிடு...'' என்று சொல்லி விட்டுச் சரேலென்று அடுக்களையினுள் நுழைந்தான்!

''சார்...'' என்றவாறு அந்த மனிதரை நெருங்கினான் பதினேழு வயதும் நிரம்பாத ரவி. அவர் எழுந்து நின்றார். அவர் கைகளில் நோட்டுக் கற்றைகளையும் அப்ளிகேஷன் பாரத்தையும் கொடுத்தான்.

எழுந்து நின்ற அந்த மனிதர், ரவி கொடுத்தவைகளைப் பெற்றுக் கொண்டு, ''இதை யார் கொடுத்தாங்க?'' என்றார். அவர் குரலின் கடுமையையும், அதில் தொக்கி நின்ற அதிகாரத் தோரணையையும் உணர்ந்து, சற்றே மிரண்டுபோன ரவி, ''இதை... இதைச் சபேசன்தான் கொடுத் தார்.... உங்ககிட்டே கொடுக்கச் சொல்லிக் கொடுத்தார்....'' என்றான்.

வாசலில் ஏதோ அரவம் கேட்கவே, ரவி அந்தப் பக்கம் பார்த்தான். கையில் கேமரா வுடனும், டேப் ரெக்கார்டர் பெட்டியுட னும் கோட்டும் சூட்டும் அணிந்த நான்கு மனிதர்கள் நடந்து கூடத்தின் மையத்துக்கு வந்தார்கள்.

அதே சமயத்தில்—

அந்த வீட்டின் அடுக்களைக்குள்ளிருந்து அலறியடித்துக் கொண்டு வேலைக்காரி ரஞ் சிதம் ஓடி வந்தாள். அவளைப் பின்தொடர்ந்து

சிக்கு பிடிக்காத,

எண்ணெய் வழியாத கூந்தல் டானிக்

கால்கெமிகோவின் காந்தரிடின் ஹேர் ஆயில் காந்தரால்

ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்

அழகிய புதிய
அட்டைப்பெட்டியில்
காந்தரால்
கிடைக்கும்





இது ஒரு கல்கத்தா கெமிகலின் தயாரிப்பு

CCK-4765 TM

சபேசன், அங்கே நின்று கொண்டிருந்த மனிதர்களில் — குறிப்பாகக் கையில் கேமராவுடன் நின்று கொண்டிருந்த மனிதரைக் கண்டதும் பதறிப் போனான். அவசரமாக எதையோ சொல்ல வாயெடுத்தவன், ''அப்பா...!'' என்ற குரலைக் கேட்டுத் திகைத்துத் திரும்பினான். ரஞ்சிதம்தான் அந்த மனிதரை அப்படி அழைத்தாள் என்பதை யறிந்ததும் மேலும் திகைத்தான். அதே சமயத்தில் வெளியில் சென்றிருந்த ஆளவந்தார் வீட்டினுள் நுழைந்தார். கோமதி யம்மாளும் கூச்சலைக் கேட்டு அங்கு வந்து பிரமித்து நின்றாள்.

எல்லோரும் குழுமினார்களே தவிர எவர் வாயிலிருந்தும் எந்த விதமான ஒலியும் எழவில்லை.

ஆளவந்தாரைப் பார்த்து, கையில் கேமராவுடன் நின்று கொண்டிருந்த மனிதர் பேசினார். ''மிஸ்டர் ஆளவந்தார்! என்னை உங்களுக்குத் தெரியாது. இப்ப தெரிஞ்சுக்குங்க. என் பேர் பரந்தாமன். இலஞ்ச ஒழிப்பு இரகசிய அதிகாரியாகப் பணியாற்றி வருகிறேன். நீங்களும் சபேசனும் சேர்ந்து லஞ்சம் கொடுக்க முற்பட்டது, சர்க்காரில் பெரிய பதவியில் பி. ஏ.வாகப் பணியாற்றி வரும் என் மகன் கோபாலுக்குத்தான்! அதற்குச் சபேசன் உங்களைத் தூண்டியதற்கும் காரணம் இருக்கிறது...

''அவன் தந்தை இதே மாதிரி லஞ்சம் கொடுக்க முயன்ற குற்றத்துக்காக இரண்டு வருடங்களுக்கு முன்னாலே கைது செய்யப்பட்டவருங்கிறது உங்களுக்குத் தெரியும்னு நெனைக்கிறேன். அவரைக் கைது செய்தது நான்தான்! அந்த வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளத்தான் — என் மகனை லஞ்சக் குற்றத்தில் மாட்டிவிடச் சபேசன் உங்களை ஒரு கருவியாகப் பயன் படுத்தினான். என் மகன் உங்களிடம் லஞ்சம் வாங்கப் போவதாகப் போலீஸ் ஐ. ஜி.க்குப் ஃபோன் செய்திருக்கிறான். ஆனால் அதற்கு முன்னமேயே என் மகன் என்னிடமும், போலீஸ் கமிஷனரிடமும் எழுத்து மூலமாக எல்லா விவரத்தையும் நேரில் எழுதிக் கொடுத்து விட்டான். லஞ்சம் வாங்குகிறது மட்டும் குற்றமல்ல! லஞ்சம் கொடுக்கிறதும், லஞ்சம் கொடுக்கும்படி பிறரைத் தூண்டி உடந்தையிருப்பதும்கூடக் குற்றம்தான். பாவம், சபேசன்! நினைத்தது ஒன்று, நடந்தது வேறாகி விட்டது. அதாவது நான் இப்போது உங்கள் மகன் ரவியையும், சபேசனையும் கைது செய்கிறேன்....''

அதுவரையில் கற்சிலை போல் நின்று கொண்டிருந்த ஆளவந்தார், அப்போது மட்டும் பூமியே பிளந்து அதில் சிக்குண்டு தவிப்பவரைப் போலத் தம் உடம்பு 'வெட வெட' வென்று நடுங்கத் தம் இரு கரங்களையும் கூப்பிப் பரந்தாமன் முன் அடி பணிந்து விழுந்தார்: ''சார்...! நீங்க வேறே என்ன வேணுமின்னாலும் பண்ணுங்க! என் சொத்து முழுவதையும் வேணுமின்னாலும் பறிமுதல் பண்ணுங்க. ஆனால் என் உயிரின் உயிரான என் மகனை ஒண்ணும் பண்ணாதீங்க. அவன் வளர வேண்டிய பயிர்! நானோ பட்ட மரம். என்னை என்ன வேணுமின்னாலும் பண்ணுங்க...'' என்று கதறினார். கோமதியம்மாளோ தலை 'கிர்'ரென்று சுழலச் சுவரில் சாய்ந்துவிட்டாள். ரஞ்சிதம் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள்.


''மிஸ்டர் ஆளவந்தார்! ஐ ஆம் ஸாரி... நான் ஒண்ணும் பண்றதுக்கு இல்லே! சட்டமும் சாட்சியமும் சொல்றபடி நடவடிக்கை எடுக்க வேண்டியது என் கடமை! அப்புறம் கோர்ட்டிலே தீர்ப்பு எப்படி வேணுமின்னாலும் இருக்கலாம்! சபேசனின் சதித் திட்டத்தை முறியடிக்கத்தான் என் மகளை உங்க வீட்டு வேலைக்காரியாக நேற்று அனுப்பினேன். அதனாலேதான் என்னுடைய காரியங்கள் யாவும் சுலபமா முடிஞ்சுது. மிஸ்டர் ஆளவந்தார்...! ஏணி மரம் மத்தவங்க மேலே ஏறுவதற்கு மட்டும்தான் பயன்படணுமே தவிர, தான் மேலே ஏறப் பிரியப்படக் கூடாது. அதனாலே பலனும் இல்லே! அரசாங்க அதிகாரிகளின் பணி, பொதுமக்களுக்கு ஏணி மரமாய் நின்று உதவுவதுதான். ஆனால் சில சமயங்களிலே உங்களையும் சபேசனையும் போன்றவர்கள் தங்களுக்குத் தேவையானதைக் குறுக்குவழியிலே சாதிக்கிறதுக்காக ஏணி மரத்தை மேலே ஏத்தி விடுகிற பைத்தியக்காரச் செயலைச் செய்யற மாதிரி — உத்தமமான அதிகாரிகளுக்கும் லஞ்சம் கொடுக்க முன்வர்றாங்க. அது எவ்வளவு பிழையானதுங்கறதை இனிமேல் நீங்க நல்லாப் புரிஞ்சுக்க முடியும்னு நெனைக்கிறேன். நான் வர்றேன்.''

'மாடி'யில் நின்று கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ரவியையும் சபேசனையும் கைப்பற்றி அழைத்துக் கொண்டு வெளியே சென்றார். வெளியே தயாராக நின்ற போலீஸ் வானில் அவர்கள் ஏற்றப்பட்டனர். ஆளவந்தார் நினைவற்றுக் கீழே விழுந்ததையோ, கோமதியம்மாள் கதறித் துடித்ததையோ கேட்க அந்தப் பெரிய பங்களாவில் அப்போது யாரும் இல்லை.



''பாகவதர் சகதர்மிணியோடு செய்கிற கச்சேரிகளில் பல்லவி, அநுபல்லவிதான் சேர்ந்து பாடுவார்கள். சரணம் பாகவதர் மாத்திரம்தான் பாடுவார் !''

உறுதிமிக்கது...
துல்லியமான
வேலைப்பாடுடையது...
சிறந்த முறையில்
உருவானது...





ஹெர்குலிஸ்

உங்களுக்காகவே தயாரிக்கப்பட்டது

ஹெர்குலிஸ் 135 நாடுகளில் மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுவது. இந்தியாவில் ஏராளமாக விற்பனையாகும் சைக்கிள். உலகின் மாபெரும் சைக்கிள் தயாரிப்பாளர்களான டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட், யு.கே. நிறுவனத்தின் நவீன தொழில் நுட்ப முறையைப் பின்பற்றி தென் கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய, வசதிமிக்க சைக்கிள் தொழிற்சாலையில் அதி நுட்பமாக தயாரிக்கப்பட்டது.

சைக்கிள் ஒரு சிறந்த முதலீடு. ஹெர்குலிஸைத் தேர்ந்தெடுங்கள். அது மிதமான விலையில் கிடைக்கும் உன்னதமான சைக்கிள்.

ஹெர்குலிஸ்®

வெறும் சைக்கிள் மட்டுமன்று —
வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் உறுதுணை

இந்தியாவில் தயாரிப்போர்:
டியூப் சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா, அம்பத்தூர், சென்னை-53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை 1 பதிவுபெற்று உபயோகிப்போர்.
ஹெர்குலிஸ் சைக்கிள் & மோட்டார் கம்பெனி லிமிடெட், யு.கே அவர்களின் பதிவு பெற்ற டிரேட் மார்க்

TI.C/M/4832

தங்கையின் குழந்தை



அன்னம்

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது.

நர்ஸ் தெரீஸா தன் படுக்கையைத் தட்டிப் போட்டாள். கர்த்தரின் முன் நின்று பிரார்த்தனை செய்து விட்டு என்றோ அவளுக்கு மறந்து போயிருந்த துயிலை மீண்டும் வரவழைக்கப் பிரயத்தனப்பட்டாள்.

அன்று அவளுக்கு மிகவும் அசதி. மூன்று கேஸ்கள் வந்து விட்டன. அவைகளில் இரண்டில் ஆயுதம் உபயோகப்படுத்தும்படி ஆகிவிட்டது. உடலெல்லாம் கணுக் கணுவாக வலித்தது. அலுப்பு அவளைப் படுக்கையில் கொண்டு தள்ளியது.

''ராஜாத்தி போல் வாழப் போகிறாள்!'' என்று கூறித்தான் அவளைச் செல்வத்துக்கு மணம் முடித்து வைத்தார்கள் அவள் பெற்றோர். ஒருவிதத்தில் அவர்கள் கூற்று உண்மை தான். பிக்கு பிடுங்கல் இல்லாமல் தனியாக ராஜாத்தி போல்தான் வாழ்ந்து வருகிறாள். ஒரு வருட மண வாழ்க்கைக்குப் பிறகு எவளையோ இழுத்துக் கொண்டு ஓடிப் போன செல்வம் இன்னும் வரவும் இல்லை. எங்கு இருக்கிறான் என்றும் தெரியவில்லை.

ஆனால் அவள் மட்டும் அவன் நலனுக்காகத் தினமும் ஒரு விநாடியாவது பிரார்த்திக்காமல் இருந்தது இல்லை.

கதவை யாரோ தட்டினார்கள். அசதியுடன் பெருமூச்சு ஒன்றை உதிர்த்தவாறே கதவைத் திறந்தாள் தெரீஸா.

''அம்மா! உடனே வருகிறீர்களா? நல்ல வலி எடுத்தது.... துடிக்கிறாள்!'' என்று அவசரத்துடன் கூப்பிட்டார் வந்தவர்.

'' எங்கே போக வேண்டும் ?'' என்று தெரீஸா கேட்டாள். எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள ஓர் ஊரின் பெயரைச் சொன்னார் அவர். அந்த ஊரில் மரகதம் என்ற பெயரில் ஒரு நர்ஸ் இருப்பது தெரீஸாவுக்குத் தெரியும். லேடி டாக்டர் ஒருத்திகூட உண்டு.

'' அவர்கள் எல்லாம் அங்கே இருக்கிறார்களே!.... கூப்பிடக் கூடாதா ?''

வந்தவர் முகம் தரையைப் பார்த்தது.

''அப்படிப் பெருமையுடன் பிரசவம் பார்க்கக்கூடிய கௌரவத்தை என் பெண் எனக்குக் கொடுக்கலிங்க, தாயே!'' என்றார்.

'' ஆஸ்பத்திரியிலாவது சேர்த்திருக்கக் கூடாதா ?'' என்று அலுத்துக் கொண்டாள் தெரீஸா.

''சேர்த்திருக்கலாம்தான். அவள் கணவன் பெயரைக் கேட்டால், அவள் என்ன சொல்வாள்? 'உன் மருமகப் பிள்ளை யார்?' என்று கேட்டால் நான் என்ன பதிலைக் கூற முடியும்? கல்யாணம் ஆகாத பேதைப் பெண் அம்மா.... தாயாகும் நிலையில் இருக்கிறாள்.''

''ஓஹோ ! அப்படிப்பட்ட கேஸா....?'' என்றாள் தெரீஸா அருவருப்புடன். அவளுக்கும் போக விருப்பம் இல்லை.

மறுத்துவிட எண்ணித் திரும்பிய அவள் பார்வையில் அருள்பாலிக்கும் அன்னை மேரியின் திருஉருவம் விழுந்தது.

'அந்தப் பெண் யாராயிருந்தால் என்ன? அவள் இப்போது பிரசவ வேதனையில் துடிக்கிறாள். நீ செய்யப் போவது உன் கடமையை.



எவளோ ஒருத்தி சமூகத்தின் விதிகளுக்குப் புறம்பாக நடந்து விட்டாள் என்பதற்காக— தன் கற்பு நெறியிலிருந்து வழுவி விட்டாள் என்பதற்காக — நீ உன் கடமையைக் கைவிடுவது சரியா ?'

அன்னே கேட்கவில்லை. தெரிஸாவின் மனச்சாட்சி இடித்தது. ''சரி, வருகிறேன். சற்று இருங்கள்!'' என்றாள்.

தனக்கு வேண்டிய உபகரணங்களை ஒரு பையில் போட்டுக் கொண்டு, வந்தவரைப் பின்தொடர்ந்தாள் தெரிஸா. வாசலில் நின்ற டாக்ஸியில் இருவரும் உட்கார்ந்தார்கள்.

டாக்ஸி போன திசை, கூட்டிப் போக வந்தவர் கூறிய ஊரின் பக்கம் அல்ல.

''டாக்ஸி எங்கேயோ போகிறதே !''

''போக வேண்டிய ஊருக்குத்தான் போகிறது !'' என்றார் அவர்.

''நீங்கள் வேறு ஊர் பெயர் சொன்னீர்களே !''

''உங்களிடம் நான் ஒரு பொய்யைத்தான் சொன்னேன். ஒரு வேளை நீங்கள் வர மறுத்திருந்தால், என் பெயர் விலாசம் உங்களுக்கு ஏன் தெரிய வேண்டும்....?''

'' அப்படியா....?'' என்றாள் தெரிஸா முகத்தைச் சுளித்தபடியே.

ஒரு கிராமத்தின் கோடியில் தனியான ஒரு குடிசையின் முன் வந்து நின்றது வண்டி.

''இதுவா உங்கள் ஊர் ?'' என்று கேட்டாள் தெரிஸா.

''இல்லை !''

''பின் ஏன் இங்கு வருகிறீர்கள் ?'' — என்று அச்சத்துடன் கேட்டாள் தெரிஸா.

அவளும் பெண். வனப்பில் சற்றும் குறைந்தவள் அல்ல. நடு இரவில் தனி மனிதன் ஒருவனுடன் விவரம் தெரியாத நிலையில் நிற்பது எத்தனை அசட்டுத்தனம் என நினைத்தபோது நரம்புகள் சில்லிட்டன.

''நீங்கள் பார்க்க வேண்டிய பெண் இங்குதான் இருக்கிறாள். என்று அவள் முறை தவறி விட்டாள் என்று தெரிந்ததோ அன்று முதல் இங்குதான் இருக்கிறாள். என் வீட்டில் அவளை வைத்துக் கொள்ளும் தைரியம் எனக்கில்லை......''

தெரிஸா உள்ளே நுழைந்தாள். மங்கிய அந்த ஹரிக்கேன் விளக்கு ஒளியில் ஓர் இளம் பெண் வலியால் துடித்துக் கொண்டிருந்தாள். கூட இருந்தாள் ஒரு கிழவி.

தன்னுடைய நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் பிரித்த தெரிஸா, ''பெண்ணின் பெயர் என்ன?'' என்று கேட்டாள்.

''ஜயந்தி!'' என்று பதில் வந்தது.

''உண்மையான பெயர்தானே ?''

''ஆமாம் !''

''உங்கள் பெயர், விலாசம்....''

''இதற்கு உண்மையான பதில் சொல்ல முடியாது.''

''எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் குறித்துக் கொள்ள வேண்டும்......''

''ஆரோக்கியசாமி ! பொன்வினந்தூர்!''

தெரிஸா அந்தப் பெண்ணைக் கவனித்தாள். மிகப் பலஹீனமான நிலை. பிள்ளைப் பேறு அடைந்த தினம் முதல் அலட்சியப் படுத்தப்பட்டிருந்ததால் போஷாக்குப் போதவில்லை. குழந்தையும் சரியான நிலையிலில்லை.

தன்னை அழைத்து வந்தவரை வெளியே அழைத்தாள். ''கேஸ் சிக்கலாக இருக்கிறது. ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போவது நல்லது!'' என்றாள்.

''ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போக என்னால் முடியாது... என்ன வேண்டுமானாலும் ஆகட்டும் !'' என்றார் அவர்.

உள்ளே அந்தப் பெண் சிரமப்பட்டாள். தெரிஸா அவளுக்குச் சாந்தி அளிக்கத் தன்னால் இயன்றதைச் செய்து பார்த்தாள்.

விடியற்காலை நாலரை மணிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அது பிறந்தவுடன் ஈன்றவள் கண்ணை மூடிவிட்டாள்.

வாசலில் காத்திருந்தவருக்கு இந்த விஷயம் தெரிய வந்தபோது, அவர் அதிர்ச்சியுற்றவராகக் காட்டிக் கொள்ளவில்லை.

''ஜயந்தி போய் விட்டாளா ?'' என்று கேட்டார் ஒரு முறை. துணியில் கிடந்த குழந்தையை வெறுப்புடன் நோக்கினார்.

''இதுவும் போயிருக்கக் கூடாதா ?'' என்றார் அடுத்தபடியாக.

''அப்படிச் சொல்லாதீர்கள். ஆண்டவனின் அருட்பிரசாதமாக இந்தச் சின்னஞ்சிறு மலர் என்ன என்ன பொறுப்புக்களை நிறைவேற்ற இந்தப் பூமியில் பிறந்து இருக்கிறதோ?....'' என்றாள் தெரிஸா.

கூட வந்தவர் டிரைவரைக் கூப்பிட்டார். ''நர்ஸம்மாவை வீட்டில் கொண்டு விட்டு வா!'' என்றார் அவர்.

அவர் கையில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் இருந்தன.

''இந்தாருங்கள் ஒரு நூறு ரூபாய் நீங்கள் செய்த உதவிக்கு. இன்னொன்று உங்கள் வாயைத் திறக்காமல் இருக்க...புரிஞ்சுதா?''

தெரிஸா அந்தப் 'பெரிய' மனிதரை வெறுப்புடன் பார்த்தபடி நின்றாள்.

''நான் எப்படிப்பட்டவன் என்று உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அவசியம் ஏற்பட்டால் கொலை செய்யக் கூடத் தயங்க மாட்டேன்... புரிகிறதா ?''

''குழந்தையை என்ன செய்யப் போகிறீர்கள் ?'' என்றாள் தெரிஸா பதற்றத்துடன்.

''அதுவும் அதன் தாயார் சென்ற பாதையில் சிறிது நேரத்தில் போய் விடும்!'' என்றார் அவர் குரூரமாக.

''என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் பணத்தை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் குழந்தை என்னிடம் இருக்கட்டும்; நான் வளர்த்து ஆளாக்குகிறேன்....''

''இங்கு நடந்ததைப் பற்றிப்....''

''மூச்சு விடமாட்டேன்.... என் தங்கை இறந்து விட்டாள். அவள் குழந்தை இது என்று வளர்த்துவருவேன்''என்றாள் தெரிஸா.

குழந்தையை அணைத்தபடியே தெரிஸா காரில் ஏறிக் கொண்டாள். அந்த இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் தரையில் கிடந்தன.

டாக்ஸி மறைந்ததும் பக்கத்துத் தோப்பிலிருந்து இன்னுமோர் உருவம் வந்தது. ''தெரிஸா போய் விட்டாளா ?'' என்று கேட்டது.

''உம்.... குழந்தையையும் கொண்டுபோய் விட்டாள்.''

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு, எரிச்சல் முதலிய உபாதைகளை உங்களால் தாங்க முடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக்கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக் கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை, என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி. மூல காரணமான இந்தக் கிருமிகளை ஒழிக்கும்வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடைய முடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடெர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளைக் கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மேலாகப் பரவும் படை, முகப்பருக்கள் கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர்தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். பூரண திருப்தியை அது நிச்சயமாக அளிக்கும்.

பண்டிட்
D. கோபாலாசார்லுவின்

பால ப்ராஸ

குழந்தைகளுக்கு ருசியான டானிக்

1898 ஆண்டிலிருந்து பிரசித்தி பெற்றது...

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட்
400, [illegible] ரோட் • சென்னை

உங்களுக்குத் தேவை

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள்: ரூ. 1 கோடிக்கு மேல்

தலைமைக் காரியாலயம்: பாண்டியன் பில்டிங், மதுரை-1

கிளைகள்: பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, கோரக்பூர்
கோயமுத்தூர், கொச்சி, கோவில்பட்டி

"தொலையட்டும்.... தொலையட்டும்!" என்று கூறியபடி அறையில் கிடந்த யுவதியின் சடலத்தைப் பார்த்தான் புதியவன்.

"ஆறுமாதமாக 'எனக்கு என்ன வழி, என்ன வழி?' என்று கேட்டுக் கொண்டிருந்த சனியன் தொலைந்தது ஒரு வழியாக!" எனக் கூறிய அவன், "மேலே ஆக வேண்டிய காரியங்களைப் பாருங்கள்!" என்று மற்றவருக்குக் கட்டளையிட்டான்.

அந்த 'எக்ஸ்ட்ரா' நடிகையின் உடலைப் பூமித் தாய் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டாள்.

டபியினில் சுடுதண்ணீர் ஊற்றிக் குழந்தையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்த தெரியாமலும் இதைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தான்.

அந்தக் குழந்தையின் தந்தை யார் என்று அவன் அறிய மாட்டான் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இறந்து போன அந்தப் பெண்ணின் கழுத்தில் தொங்கிய நெக்லேஸை அவன் அடையாளம் கண்டு கொண்டான். பல வருடங்கள் அவள் கழுத்தில் தொங்கியது அது. செல்வம் வீட்டை விட்டு ஓடிப் போன போது கூடப் போன நகைகளில் அதுவும் ஒன்று.

நாளைக்குக் குழந்தை யார் என்று கேட்பவர்களுக்கு அவன் கூறப் போகும் பதில் பொய்யல்ல; உண்மைதான். அந்தக் குழந்தை அவன் 'தங்கை'யினுடையதுதான்!

வட்ட மேஜை

தெருமுனையில் 'சூதாட்டம்'

ராஜ்யங்களின் வருமானத்தைப் பெருக்கும்பொருட்டு அரசே லாட்டரித்திட்டத்தை அமுல்படுத்திச் செயல்படுத்தி வருவதன் மூலம் மக்கள் மனத்தில் சூதாட்ட எண்ணம் தான் ஓங்கி நிற்கிறது. இதன் விளைவாக இளம் உள்ளங்கள் பாதிக்கப்படுகின்றன. திரும்பும் தெரு முனைகளில் எல்லாம், "காலண்டர்" பிஸினஸ் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். விவரம் அறியாச் சிறு பிள்ளைகள்கூட ஒரு பைசா கொடுத்து ஒரு அட்டை வாங்கினால் நாலணா பெறுமானமுள்ள ஒரு காலண்டர் கிடைக்கிறதே என்ற எண்ணத்தில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு பிஞ்சு உள்ளங்களின் மனோவேகத்தைப் புரிந்து கொண்ட பலர் இதையே ஒரு தொழிலாகக் கொண்டுள்ளனர் என்றால் நாட்டில் எந்த அளவுக்குச் சூதாட்ட மனப்பான்மை வளர்ந்துள்ளது என்பது நன்கு புலப்படுகிறது. உதாரணமாக இத்தகைய ஓர் இடத்துக்குச் சென்ற பொழுது வில்லை ஒன்று ஐந்து பைசாவுக்கு விற்கக் கண்டேன். காரணம் விசாரித்ததில் காலண்டரோடு பெரிய சோப்புக் கட்டி ஒன்றும் தருகிறார்களாம். சுற்றிலும் சிறு பிள்ளைகளின் கூட்டம். காரணம் ஐந்து பைசா தானே?

தெருவில் ஒட்டை, புலி சுற்றுகிறவனைத் தடை செய்கிற அரசு இதுபோன்றவற்றை வளர விடுவதன் பொருள் புரியவில்லை.

தஞ்சாவூர்
22–2–69 வை. பாலசுப்பிரமணியம்

தியாகிக்கு உதவி

ஆகஸ்டு தியாகி காசிராஜன் தூக்குக் கயிற்றை முத்தமிடத் தயாராக இருந்த நேரத்தில் மகாத்மா காந்தியடிகள் தலையிட்டுத் தூக்குத் தண்டனை, ஜென்ம தண்டனையாக மாற உதவினார். நாட்டின் சுதந்திரத்துக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார் ஆறுமுகநேரி டி. வி. காசிராஜன். மேற்படி வழக்கு செலவுக்காகத் திரு சக்கரவர்த்தி ஸி. ராஜகோபாலாச்சாரியார் மூலம் நிதி வசூல் செய்யப்பட்டுச் செலவானது போக மீதிப் பணம் கல்வி ஸ்தாபனம் மூலம் நிதி தீரும் வரை மாதந்தோறும் கொடுத்து வரப்பட்டது. தற்போது வட்டார அபிவிருத்தித் திட்டத்தில் கிராம சேவக் உத்தியோகம் பெற்று வேலை பார்த்து வருகிறார் அவர். சமீபத்தில் நோய்ப்பட்டு நாசரேத் மோசஸ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். உடல் மிகவும் மெலிந்து வருந்திக் கொண்டிருக்கிறார். மனைவியும் பிள்ளைகளும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதைக் கண்ணுற்றவர்கள் அவருடைய தியாகத்தை எண்ணித் தங்களாலான நிதி உதவியை அன்னார் பெயருக்கு, டி. வி. காசிராஜன், ஆகஸ்டு தியாகி, மோசஸ் கிளினிக், நாசரேத் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோருகிறேன்.

திருநெல்வேலி பி.எஸ்.ராஜாபாலவேசமுத்து
நாடார், தலைவர்,
21–2–69 நட்சினை மாற நாடார்சங்கம்

இங்கே நடந்திருக்கிறது!

'கல்கி' 9-2-69 இதழில் தேர்தல் துக்கடா என்ற தலைப்பின்கீழ் மேற்கு வங்க இடைத் தேர்தலில்தான் இந்திய சரித்திரத்திலேயே முதல் முறையாக டேப் ரிகார்டர் பயன்படுத்தப்பட்டதாகக் கண்டிருக்கிறது. வேட்பாளர் ஹுமாயூன்கபீர் எனவும் குறிப்பிட்டிருக்கிறது.


1967 பொது தேர்தலிலேயே இங்கு (நெய்வேலி) தி. மு. க. வேட்பாளரை ஆதரித்துத் தலைவர் ஒருவரின் பேச்சு டேப் ரிகார்ட் செய்யப்பட்டு, இரவு பன்னிரண்டு மணி வரை அமைதியுடன் கூடியிருந்த மக்கள் மத்தியில் ஒலிபரப்பப்பட்டது. அறிஞர் அண்ணாவினுடைய பேச்சு அது. நெய்வேலி தேர்தல் கூட்டத்தில் பங்கு கொள்ள வேண்டிய அண்ணா அவர்கள், நெல்லிக் குப்பத்திலேயே சோர்வுற்று, வர இயலாமல் போனதால் நெய்வேலி மக்களுக்காக இவ்வறிக்கை "டேப் ரிகார்ட்" செய்யப்பட்டது.

நெய்வேலி
15–2–69 மணக்கால் கைலாசம்

Printed & published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T Sadasivam

இது போன்ற அழகான பன்னிரண்டு படங்களை எடுங்கள்







Agfa க்ளிக்ரா

...வாங்கிய நாளன்றே

* 12 பெரிய (6x6cm) படங்களை, அளிக்கிறது ஒவ்வொரு 120 சுருளும்.

ஆக்ஃபா-கெவார்ட் இந்தியா லிமிடெட்

பம்பாய் - புது டில்லி - கல்கத்தா - சென்னை.

REGISTERED No. M. 4393
Registered as a Newspaper in Ceylon